ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	டிசம்பர் 1966	இதழ் 12

அரும்பெரும் பணியாற்றும் அறிவுக்கோயில்

1916ஆம் ஆண்டில் ஒரு நாள். காஞ்சிமா நகரிலிருந்து எட்டுக் கல் தொலைவில் உள்ள வாலாசாபாத் என்னும் சிற்றூரில் அப்போது நடைபெற்று வந்த தொடக்கப்பள்ளி ஒன்றின் தலைவாயிலின் முன்பு சின்னஞ் சிறு மாணவன் ஒருவன் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அப்போது அதே ஊரைச் சேர்ந்த மற்றொரு தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியராக விளங்கிய ஒருவர் இருபத்தேழு வயது நிரம்பிய ஓர் இளைஞர் தற்செயலாக அங்கு வந்தார். வந்தவர், மாணவன் அழுது கொண்டிருப்பதைக் கண்டு, உள்ளம் வருந்தி, அருகில் சென்று அன்போடு அவனைத் தட்டிக் கொடுத்து "ஏனப்பா அழுகிறாய்?" என்று கேட்டார்.

"என் வகுப்பாசிரியர் என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார். அதனால்தான் அழுதுகொண்டிருக்கிறேன்"

"ஏன் அனுப்பி விட்டார்? நீ ஏதாவது தவறு செய்தாயா? வீட்டுப் பாடங்களைப் படித்துக் கொண்டு வரவில்லையா? மற்ற பிள்ளைகளைத் துன்புறுத்தினாயா?"

"இல்லை, இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. பள்ளிக்கூடத்திற்குக் கட்ட வேண்டிய சம்பளத்தை இந்த மாதம் இன்னும் நான் கட்டவில்லை. அதனால்தான் வெளியே அனுப்பி விட்டார்கள்."

"அப்படியா? ஏன் கட்டவில்லை? பெற்றோர்கள் கொடுத்தனுப்பிய பணத்தை எங்காவது தொலைத்து விட்டாயா? அல்லது வேறு ஏதாவது செலவு செய்து விட்டாயா?"

"அப்படியெல்லாம் செய்யவில்லை—செய்யமாட்டேன். பெற்றோர்களே பணம் தரவில்லை; தரமுடியவில்லை அவர்களால். எப்படியாவது இந்த மாதச் சம்பளத்தைக் கட்டிவிட வேண்டுமென்று எவ்வளவோ முயற்சி செய்தார்கள். பணம் கிடைக்கவில்லை."

மாணவன் இவ்வாறு கூறியதைச் செவிமடுத்த அத்தலைமையாசிரியர் உள்ளம் உருகி விட்டது. கல்விப் பொருளை அள்ளி விழுங்க வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருக்கிறான் மாணவன்—ஆனால் அவனால் அவ்வாறு செய்யமுடியவில்லை—காரணம் அவனுடைய பெற்றோர்களின் வறுமை என்பதை எண்ணி எண்ணி அந்த இளம் ஆசிரியருடைய நெஞ்சம் கசிந்து கண்ணீர் மல்கியது. இப்படியெல்லாம் படிப்பதில் அளவற்ற ஆர்வம் இருந்தும் படிக்க முடியாமலிருக்கிற சின்னஞ் சிறு பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி அளிப்பதற்குரிய ஏற்பாடு ஒன்றைச் செய்தாக வேண்டும் என்று அவர் எண்ணினார். அந்த எண்ணத்தின் விளைவாக அவர் அதே ஊரில் தரும ராஜா கோயில் மண்டபத்தில் ஓர் இலவச ஆரம்பப் பாடசாலையைத் தொடங்கினார். தொடங்கியபோது பாடசாலையில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை நான்குதான்.

இவ்வாறாக 1916ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் நான்காம் நாள் ஓர் ஆசிரியரோடும் நான்கு மாணவர்களோடும் தொடங்கப்பட்ட அந்தக் கல்வி நிலையம்தான், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, தென்னாட்டுச் சாந்திநிகேதனம் என்றும், தமிழ் நாட்டின் தன்னிகரற்ற குருகுலம் என்றும், தனக்குவமை யில்லாத தனிச் சிறப்பு நிலையம் என்றும், அரும்பெரும் பணியாற்றும் அறிவாலயம் என்றும் அறிஞர் பெருமக்கள் அனைவராலும் போற்றிப் புகழப்படும் நிலையை எய்தி, அண்மையில் பொன் விழாக் கொண்டாட இருக்கிற வாலாசாபாத் இந்து மத பாடசாலை ஆகும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் அந்தப் பாடசாலை பெற்றுள்ள வளர்ச்சி பெருமையும் பூரிப்பும் அளிக்கத்தக்க ஒன்று என்பதில் துளியும் ஐயமில்லை. அந்நாளில் ஓர் ஆசிரியர் மட்டுமே பணி புரிந்த அப்பள்ளியில் இந்நாளில் 40 ஆசிரியர்கள் தொண்டாற்று கிறார்கள். நான்கு மாணவர்கள் மட்டுமே கல்வி கற்று வந்த அந்த நிறுவனத்தில் இப்பொழுது 1100 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். திங்கள் ஒன்றிற்கு 5 ரூபா மட்டுமே செலவாகி வந்த அப்பள்ளிக்கு இப்போது திங்கள் ஒன்றுக்கு 20,000 ரூபா செலவாகிறது. தொடக்கத்தில் தனக்கென்று உடைமை எதையும் பெற்றிராத அப்பள்ளிக்கு இப்போது பன்னிரண்டரை இலட்சம் ரூபா மதிப்புடைய உடைமைகள், கட்டிடங்களாகவும், மனைகளாகவும், விளை நிலங்களாகவும் அமைந்திருக்கின்றன. மாணவர்களும், ஆசிரியர்களும் உடைமைகளும் பெருகியிருப்பதுமட்டுமல்ல, இக் கல்வி நிலையத்தின் பெயரும் புகழும் ஆண்டுக்கு ஆண்டு ஒன்றுகருப் பத்தாகப்—பத்துக்குப் பல்மடங்காகப் பெருகிக்கொண்டே வருகிறது. இக் கல்வி நிலயத்தின் வலிவையும் பொலிவையும், இந் நிலையத்தால் ஆற்றப்படுகிற அருஞ் செயல்களின் எழிலையும் ஏற்றத்தையும், இப்பள்ளிக் கூடத்தின் தனிச் சிறப்புகளாக அமைந்துள்ள தன்மைகளின் பயனையும் பண்பையும் அறியாத தமிழ் மக்கள் உலகத்தில் இன்றைய தினம் எவரும் இலர் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்தப் பாடசாலையிற் பயிலும் மாணவர்களில் மிகப் பெரும் பாலோர்—ஏறத்தாழ எண்ணூறு பேர்—இந்தப் பாடசாலையை ஒட்டி அமைந்துள்ள **வள்ளலார் மாணவர் இல்லம்** என்னும் விடுதியிலேயே தங்கிப் பயில்கிறார்கள் என்பதும், அவர்களின் பெரும்பாலோருக்கு உணவும் உறைவிடமும் ஏனைய வசதிகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன என்பதும் எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய செய்தியாகும். இராமலிங்க அடிகளார் பெயரால் அமைந்துள்ள இந்த இல்லத்தில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக உறைகிறார்கள்; பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றாக உண்கிறார்கள்; பல்வேறு நிலைப்பட்ட தொழில்களைப் புரியும் பெற்றோர்களின் பிள்ளைகள் ஒன்று கலந்து அளவளாவி வாழ்கிறார்கள். சாதி—சமயம்—குலம்—செல்வம்—வறுமை— மாவட்டம் முதலிய எத்தகைய வேறுபாடுகளையும் கருதாமல் எண்ணூறு பிள்ளைகள் ஒரே விடுதியில் ஒன்றாகத் தங்கி, ஒன்றாக உண்டு, ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக உரையாடி, ஒன்றாக உறவாடி வாழும் காட்சி, கண் படைத்தவர்

அனைவரும் காண வேண்டிய மாட்சி உடையதாகும். சாதியின் அடிப்படையிலும் செல்வத்தின் அடிப்படையிலும் செல்வாக்கின் அடிப்படையிலும் நம் மக்கள் சமுதாயத்தில் நெளிந்து கிடக்கிற வேற்றுமை உணர்ச்சி அகன்று, எல்லோரும ஓர் குலம்-எல்லோரும் ஓர் இனம்—எல்லோரும் ஓர் நிறை-எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்கிற பொதுமை உணர்ச்சி எங்கும் பொங்கிப் பெருகிப் பரவுவதற்குத் தேவையான அடிப்படைச் சூழ்நிலையை, இந்த வள்ளலார் மாணவர் இல்லம், தன் செயல் முறையின் வாயிலாக உருவாக்கி வருகிறது.

ஏனைய பாடசாலைகளில் எல்லாம், பகல் நேரத்தில்மட்டும், அதுவும் வகுப்புகள் நடைபெறும்போது மட்டும் மாணவர்கள் ஆசிரியர்களின் நேர்முகப் பார்வையில் இருக்கிறார்கள். ஏனைய நேரங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எத்தகைய தொடர்பும் இருப்பதில்லை. ஆனால் வாலாசாபாத் இந்துமத உயர் பாடசாலையிலோ, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள தொடர்பு, இடையறாத தொடர்பாக, இரவு பகல் எந்த நேரமும் தொடர்ந்து இருக்கிற தொடர்பாக அமைந்திருக்கிறது. வள்ளலார் மாணவர் இல்லத்திலேயே ஆசிரியர்கள் பலர் தங்கியிருக்கிறார்கள். காலையிலும் மாலையிலும் மாணவர்கள் ஆசிரியர்களின் நேர்முகப் பார்வையிலேயே தங்கள் பாடங்களைப் பயில்கிறார்கள். அப்பாடங்களில் எவையேனும் ஐயப்பாடுகள் தோன்றுமாயின் உடனுக்குடன் அந்த ஆசிரியர்களைக் கேட்டு அந்த ஐயங்களைப் போக்கிக் கொள்கிறார்கள். மாணவர்கள் இரவில் துயில் கொள்ளச் செல்வதும் காலையில் துயில் நீங்கி எழுவதும் நீராடுவதும் உடுப்பதும் உண்பதும் படிப்பதும் பள்ளிக்குச் செல்வதும் பள்ளியினின்று திரும்புவதும் விளையாடுவதும் ஆகிய எல்லாமே ஆசிரியர்களின் பார்வையில் நிகழ்வதால், எல்லாச் செயல்களிலும் ஓர் ஒழுங்குமுறை காணப்படுகிறது; தெளிவும் திட்பமும் அமைந்திருக்கிறது; செய்வன திருந்தச் செய்யும் செம்மை ஒளிவிடுகிறது.

குருகுலக் கல்வி முறை என்றால் யாது என்பதை எவரேனும் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் அதற்காக அவர்கள் பல நூல்களைப் பயில வேண்டியதில்லை; நேரே வாலாசாபாத்திற்குச் சென்று, பாலாற்றங்கரையின் இனிய சூழ்நிலையில், பச்சைப் பசேலென்று காட்சி தரும் செடி கொடிகளுக்கும் மரங்களுக்கும் சோலைகளுக்கும் இடையில், இதயத்தைத் தாலாட்டும் தென்றலின் துணையுடன் நடைபெற்று வரும் இந்துமத பாடசாலையையும் வள்ளலார் மாணவர் இல்லத்தையும் ஒரு முறை கண்டால் போதும். குருகுலக் கல்வி முறை என்பது எது என்பது நன்கு விளங்கிவிடும்.

பாடசாலைகள் வெறும் எண்ணையும் எழுத்தையும் மட்டும் கற்பித்தால் போதாது; பல திறத் தொழில்களிலும் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டுதல் வேண்டும்; ஏட்டுக் கல்வியோடு தொழிற் கல்வியையும் புகட்டுதல் வேண்டும் என்பது இந்தப் பாடசாலையின் சீரிய நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் திருவள்ளுவர் தொழிற்சாலை என்னும் பெயரில் அமைந்துள்ள இதன் தொழிற்கூடத்தில், மாணவர்களுக்கு, நூல் நூற்றல், துணி நெய்தல், தையல் வேலை, தச்சு வேலை, அச்சு வேலை, புத்தகம் வெட்டல், பலகை அறுத்தல், பொத்தான் செய்தல், சோப்பு செய்தல், அலுமினியப் பாத்திரங்கள் செய்தல் முதலிய பலவகைப்பட்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இக்கால மாணவர்களுக்குக் கல்வியறிவும், தொழிலறிவும் மட்டும் தரப்பட்டால் போதாது; உலகத்தோடு ஒட்ட வாழ்வதற்குத் தேவையான விரிவான பொது அறிவும் புகட்டப்படல் வேண்டும் என்பது கல்வித்துறை வல்லுநர்களின் கருத்து. இந்தக் கருத்துக்கு இணங்க இக்கல்வி நிலையத்தில் மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதற்குத் தேவையான பல்வேறு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்கள் நோயற்ற நீடிய நல்வாழ்வு பெறுவதற்குத் துணை புரிய, வீமன் விளையாட்டு வெற்றிவிரதாச்சாரி அணி ஆகிய அமைப்புகள் பணியாற்றுகின்றன. ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் வெளியாகியுள்ள நூல்களைப் பயின்று, மாணவர்கள் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக ஞானசம்பந்தர் நூற்குழுவும் அமைந்துள்ளது. நாளிதழ்களையும் கிழமை-பிறை-திங்கள் இதழ்களையும் படித்து மாணவர்கள் உலக அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காக வாகீச இலவச இதழ் நிலையம் ஏற்பட்டுள்ளது; மாணவர்கள் அடிக்கடி சொற்பொழிவுகளை ஆற்றித் தங்களுடைய பேச்சாற்றலைப் பெருக்கிக் கொள்வதற்கும் அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுத் தங்கள் கேள்வியறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் உரிய நிறுவனமாக மெய்கண்டார் மாணவர் கழகம் அமைந்துள்ளது. மாணவர்களின் இசையார்வத்தைச் செம்மைப்படுத்தச் சுந்தரானந்த இசை அரங்கும், அவர்களுடைய நடிப்புத் திறமையைத் தட்டிக் கொடுத்துச் சிறப்புற்று ஓங்கச் செய்வதற்காக நாடக நன்மன்றமும், பிறருக்கு உதவி செய்யும் பண்பாட்டை அவர்களிடம் வளர்ப்பதற்காகச் சாரணர் குழு—குருளையர் கூட்டம் ஆகிய அமைப்புகளும் அமைந்துள்ளன.

இந்தியத் திருநாடு விடுதலைப் பெருவாழ்வை அடைந்து தன்னுடைய ஆட்சியைத் தானே நடத்தி வருகிற இந்தக் காலத்தில் சட்ட

மன்றத்தின் வாயிலாக நாட்டை ஆட்சி புரியும் அரசியல் கலையிலும் மாணவர்கள் நல்லறிவு பெற்றுத் திகழவேண்டியது இன்றியமை யாதது அன்றோ? இதனை நன்குணர்ந்த காரணத்தால் இப்பள்ளியின் நிர்வாகிகள் மாணவர் ஆட்சி மன்றம் என்னும் சீரிய அமைப்பை உருவாக்கி, அதன் வாயிலாக மாணவர்களிடத்தில் ஆட்சிக் கலை உணர்வை வளர்த்து வருகிறார்கள். வேட்பாளர்கள் நிற்றல், வாக்கு களைப் பதிவு செய்தல், சட்டமன்றம் அமைதல், அமைச்சரவை உரு வாகுதல், பலர் பல்வேறு அமைச்சுத் துறைகளின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பணிபுரிதல் ஆகிய ஆட்சிக்கலைப் பகுதிகள் அத் தனையிலும் இந்த ஆட்சி மன்றத்தின் வாயிலாக மாணவர்களுக்கு அருமையான முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பான முறையில் அமைந்து செம்மையான வகையில் பணி யாற்றிவரும் பல்வேறுபட்ட இந்த அமைப்புகளின் விளைவாக, இந்து மத பாடசாலையிலும் வள்ளலார் மாணவர் இல்லத்திலும் பயில்கின்ற மாணவர்கள், தலைசிறந்த மாணவர்கள் எவ்வாறு இருத் தல் வேண்டும் என்னும் இலக்கணத்திற்கு உரிய இணையில்லாத இலக்கியங்களாகத் திகழ்ந்து வருகிறார்கள். திண்மையான உடலும் தெளிவான அறிவும், ஆழமான கல்வியும், பொதுநல உணர்வும், அப் பழுக்கற்ற ஒழுங்கு முறையும் விழுமிய ஒழுக்கமும், எதிர்காலத்தை நம்பிக்கையோடு வரவேற்கும் திட்பமும் செறிந்தவர்களாக அம் மாணவர்கள் திகழ்கிறார்கள் என்றால் அதற்கு உரிய முழுப்பெருமை யும் அவர்களைச் சீராட்டி வளர்க்கும் கல்வி நிலையத்தையே சேரும். இது உண்மை. புனைந்துரை அன்று.

வடஇந்தியாவில் ஓங்குபுகழ் எய்தி ஒளிவீசித் திகழ்கிற தலை சிறந்த குருகுலம், கவிஞர் பெருமான் இரவீந்திரநாத் தாகூர் அவர் களால் நிறுவப்பட்ட சாந்திநிகேதனம் என்றால், தென்னிந்தியாவில் தன்னிகரற்ற அறிவாலயம் வாலாசாபாத் பாடசாலை என்று கூற லாம்.

நான்கு அல்லது ஐந்து பிள்ளைகளைக் கொண்ட ஒரு சிறிய குடும்பத்துக்குத் தேவையான உணவையும் உடையையும் உறை விடத்தையும் இன்னபிற வசதிகளையும் திரட்டித் தருவதே மிகப் பெரிய சாதனையாகி விட்டிருக்கிற இந்தக் காலத்தில், எண்ணூறு பிள்ளைகளைக் கொண்ட ஒரு மாபெரும் குடும்பத்தைக் கட்டிக்காத்து

அவர்கள் அனைவருக்கும் நாள்தோறும் சுவையும் பயனும் மிகுந்த இலவச உணவை அளித்து, இலவச உறைவிடத்தைத் தந்து, கல்வி வசதியையும் மருத்துவ வசதியையும் ஏனைய பல வசதிகளையும் இலவசமாக அளித்து, வருவது என்றால் அது எத்துணைப் பெருஞ் செயல் என்பதை எடுத்து விளக்கவும் வேண்டுமா ?

இம் மாபெரும் அறிவுக்கோயிலை அமைத்து அழகுற அதனை நடத்திவரும் அரும் பெருஞ்செயலை ஆற்றிவருபவர், ஐம்பது ஆண்டு களுக்கு முன்னால் இந்தப் பணியைத் தொடங்கியபோது, செல்வம் குவிந்திருந்ததா அவரிடத்தில் ? இல்லை! மாபெரும் பதவியில் அமர்ந்திருந்தாரா அவர் ? கிடையாது. நிலபுலன், சொத்து, சுகம், வீடு வாசல், ஆள் அம்பு ஆகியன ஏராளமாக இருந்தனவா அவரிடம்? ஒரு துளியும் இல்லை. பல்கலைக் கழகப்பட்டங்கள் பலவற்றைப் பெற்றிருந்தாரா அவர் ? அதுவும் இல்லை.

பட்டமோ பதவியோ, செல்வமோ செல்வாக்கோ எதுவும் பெற்றிராத ஒருவர்—எட்டாவது வகுப்பு வரையில் மட்டுமே படித் திருந்த ஒருவர் ஆரம்பப்பள்ளி ஒன்றில் மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வந்த ஓர் எளிய மனிதர்—ஓய்வறியாத தம்முடைய உழைப்பு ஒன்றினால் மட்டுமே இந்த மாபெரும் சாதனையைச் செய்து முடித்துள்ளார் என்பதை எண்ணும்போது, வியப்பும் திகைப்பும் நம்முடைய உள்ளத்தை முற்றுகையிடாமல் இருக்க முடியாது.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில் பயில்கிற ஆயிரத்து நூறு மாணவர்களாலும், வள்ளலார் மாணவர் இல்லத்தில் வாழ் கின்ற எண்ணூறு மாணவர்களாலும் 'அப்பா, அப்பா' என்று அகம் குளிர முகம் குளிர அன்போடு அழைக்கப்படுகிற அப்பெருமகனார் எல்லோரும் இன்புற்று இருக்கவேண்டும் என்பதன்றி வேறொன்றும் அறியாத உயர்ந்த உள்ளத்தை உடைய அந்த அறப்பெருந்திரு வினர்—தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் பொன் மொழிக்கு உரிய மிகப்பொருத்தமான எடுத்துக்காட்டாக விளங்கு கிற ஏற்றம் மிகு ஏந்தல்—வா. தி. மாசிலாமணி முதலியார் என் னும் எழிலார் பெயர் தாங்கிநிற்கும் அன்பின் திருவுருவினர் அவர் களை எத்தனை முறைபாராட்டினாலும், பாராட்டு முழுமை உடைய தாக ஆகாது. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ என்னும்

ஆன்றோர் அமுத மொழியின் அருங்கருத்துக்கு உரிய அரிய விளக்கவுரைபோல அமைந்திருப்பது அன்னாரின் வாழ்க்கை.

இருபத்தேழு வயது இளைஞராக இருந்தபோது தொடங்கிய கல்விப் பணியை எழுபத்தேழு வயது முதியவராகியுள்ள இன்றைய நிலையிலும் இடையறாது ஆற்றி வருகிற அப்பெருந்தகையாளரின் பண்பு, கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள அத்தனைப் பேரும் உணர்ந்து பின்பற்ற வேண்டிய சிறப்புடையதாகும்.

காந்தியடிகளாரின் அரும்பணிக்கு உறுதுணையாக ஒரு பண்டித நேரு இருந்ததைப்போல, சோவியத் ரஷ்யாவை உருவாக்கிய மாமேதைலெனினுக்கு வலது கையாக ஒரு தளபதி ஸ்டாலின் விளங்கியதைப்போல கல்வித் துறையில் அடுக்கடுக்காகப் பல அற்புதங்களைச் சாதித்துவரும் உயர்திரு வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களுக்குப் பொருத்தமான துணைவராக விளங்கி, தன்னுடைய அறிவாற்றல் முழுவதையும் நேரம் அத்தனையையும் உழைப்பு அவ்வளவையும் வாலாஜாபாத் குருகுல வளர்ச்சிக்காகவே அர்ப்பணித்து, அதன் அன்றாட நடைமுறையை அருமையான வகையில் கவனித்து வருபவர், நற்பண்புகளின் உறைவிடமாகத் திகழும் திருவாளர் நா. ப. தணிகை அரசு அவர்கள் ஆவர்.

வாலாஜாபாத் குருகுலத்தின் "அப்பா" வாகத்திகழும் தியாகத்தின் திருஉரு—திருவாளர் மாசிலாமணியார் அவர்களும், அதன் "அண்ணா" வாக விளங்கும் அமைதியின் சின்னம் திருவாளர் தணிகை அரசு அவர்களும் நீண்ட நெடுங்காலம் நன்கினிது வாழ்க என்றும், அவர்கள் இருவராலும் பொலிவெய்தப் பெற்றுத் திகழ்கிற இந்த அருமபெரும் கல்வி நிறுவனம் மேலும் சிறப்புகள் எய்தி ஓங்கி உயர்ந்து ஒளிவீசித் திகழ்வதாக என்றும் வாழ்த்துவது மட்டுமல்ல, அந்நிறுவனம் இவ்வாறு திகழ்வதற்குத் தேவையான எல்லா வகை உதவிகளையும் செய்வது தமிழ்பெருமக்களின் தனிப்பெருங் கடமையாகும். அந்தக் கடமையை அவர்கள் தவறாமல் நிறைவேற்றுவர் என்பதில் துளியும் ஐயமில்லை.

வாழ்க, வாழ்க, வாலாசாபாத் இந்துமத பாடசாலை!

வளர்க வளர்க, அதன் பெருமையும் புகழும்!

பாரதியாரின் உரைநடை

திரு. வி. எஸ். சுப்பையா

'தமிழால்எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை; எதிர் நின்று கேட்பதெல்லாம பொய்யுமில்லை. முந்திய சாஸ்திரந்தான் மெய்; பிந்திய சாஸ்திரம் பொய் என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.'

பாரதியார் எழுதிய தமிழ் வசனச் செல்வத்தின் ஒரு பகுதி இது. வசனமென்றால் இதுதான். உள்ளத்தில் பிறந்த உண்மையொளி வாக்கினிலே ஒளி வீசி, ஒலிக்கக் காண்கிறோம். பேச்சுத் தமிழின் இனிமைகளையும் வல்லமைகளையும் தேர்ந்தெடுத்து, செந்தமிழிலே இணைத்துச் செய்த உரைச்செல்வம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு இந்த ஓர் எடுத்துக்காட்டு போதுமானது. கருத்திலே புதுமை சொல்லாட்சியிலே புதுமை, சொற்றொடர் அமைப்பிலே புதுமை. இங்ஙனம் வசனத்திலே புதுமைப், புரட்சி செய்த பாரதியார் நல்ல உரைநடையைப் பற்றி ஓரிடத்தில் தாமே எழுதியிருக்கிறார்.

தமிழில் வசன நடை இப்போதுதான் பிறந்தது. பலவருஷமாக இல்லை. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்; ஆதலால் இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி—ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம் ஒரு சாஸ்திரம் ஒரு பத்திரிகை விஷயம்-எதை எழுதினாலும் வார்த்தை, சொல்லுகிறமாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது. உள்ளத்திலே நேர்மையும் தைர்யமும் இருந்தால்; கை பிறகு நேரானஎழுத்து எழுதும். தைரியம்இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும்; சண்டி மாடுபோல ஓரிடத்தில் வந்து படுத்துக்கொள்ளும். வாலைப்பிடித்து திருகினாலும் எழுந்திருக்காது. வசன நடை, கம்பர், கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தன்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது, தட்டுத்தடையில்லாமல் நேரேபாய்ந்து செல்லும் தன்மை

நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக்காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக்கொண்டால் கை நேரான நடை எழுதும்.

உரை நடைக்குப் பாரதியார் வகுத்துத் தந்திருக்கும் இலக்கணம் இது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னால், பாரதியார் எழுதிய இந்தக் கட்டுரை, நடையின் ஓட்டத்துக்கும் சிந்தனைத் தெளிவுக்குமே ஓர் எடுத்துக் காட்டாகத் திகழக் காண்கிறோம்.

பாரதியார் இயற்றிய உரை நடை நூல்கள் அவர் கவிதைகளை விட அளவில் இருமடங்கு பெரியவை. ஆனால் ஒரு மகாகவி என்ற முறையிலேயே நாடு அவரை அறிந்து போற்றி வருகிறது. வசனத்திலும் அவரது படைப்புக்கள் இறவா வரம் பெற்ற இலக்கியங்கள் என்பதை ஒரு சிலரே உணர்ந்திருக்கிறார்கள். பாரதியாருக்கு முன்னால் தமிழ் வசன நூல்கள் ஒன்றிரண்டே பிறந்திருந்தன. பெரும்பான்மையான புலவர்கள் வசனத்தைத் தாழ்ந்ததாகவே கருதினர். நச்சினார்க்கினியர், பேராசிரியர் போன்ற உரையாசிரியர்கள் எழுதின கடின நடையையே பின்பற்றிப் பலர் எழுதிவந்தார்கள். நீண்டு வளைந்து இழுத்துப் பறித்துக்கொண்டு போகும் சொற்றொடர்களும் செய்யுளா உரையா என்ற மயக்கத்தை ஊட்டும் ஓசையும், தமிழ் உரையைத் தலையிட்டு, முன்னேற வொட்டாமல் செய்து கொண்டிருந்தது அவர்களது நடை.

தமிழ்க் கவிதைக்கு விடுதலைத் தேடித் தந்ததுபோலவே, மகாகவி பாரதியார், தமிழ் வசனத்தையும், பொருளற்ற கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துப் புதிய உயிரும் உணர்ச்சியும் ஊட்டினார். வழக்கு ஒழிந்த சொற்கள், செல்லரித்துப் போன பழமைக் கருத்துக்கள் இவற்றை ஒதுக்கித் தள்ளி மக்கள் பேசும் உயிருள்ள தமிழில், சமுதாயத்தின் சிந்தனையில் கிளர்ந்த விஷயங்களைப்பற்றி எழுதலானார் பாரதியார். அரசியல் பொருளாதாரக் கருத்துக்களை ஆங்கிலத்தில்தான் சொல்ல முடியும் தமிழில் முடியாது என்ற அபிப்பிராயத்தைத்தகர்த்தெறிந்தார். மற்றைய உலக மொழிகள் நூறு வருடகாலமாக உரைநடையைக் கையாண்டு பெற்ற வசனத் திறமையை, தமிழ் ஒரு தலைமுறையிலேயே பெற்றுவிடும் வண்ணம் அற்புத எழுத்து எழுதினார் பாரதியார். கவிதைக்குரிய தமிழிலும் பொருட்கோப்பிலும் பாரதியார் இயற்றிய புரட்சியைவிட, ஒருபடி அதிகம் என்றே தோன்றுகிறது வசனத்தில் அவர் நிகழ்த்திய புதுமைப் புரட்சி.

தமிழ் உரைநடை புதிதாக உருவாகின்ற சமயத்தில் கெட்ட பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டு விடக்கூடாது. தமிழ் வசனத்திறகுப் பத்திரிகைகள் மூலம் சிறப்பான எதிர்காலம் ஏற்படவிருக்கிறது என்ற

எண்ணத்தை உள்ளத்தில் கொண்டு செம்மையான உரைநூல்களை எழுதலானார் பாரதியார். நாம் ஒரு மகாகவி என்று உணர்ந்திருந்தும் மக்களை உத்தேசித்து மக்களோடு நாள்தோறும் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதைக்கருதி வசன கர்த்தாவாக மாறவும் பாரதியார் தயங்கவில்லை.

பிற மொழிகளிலும் இதே காட்சியை நாம் காணமுடியும். ஆங்கில மகாகவி மில்டன், செய்யுளில் போலவே வசனத்திலும் பேராற்றல்படைத்தவர். ஷெல்லி, வோர்ட்ஸ் வொர்த், காலரிட்ஜ் போன்ற கவிஞர் பெருமக்கள் எழுதிய கட்டுரைகளும், உயிர்த்தன்மை நிரம்பியவை. பொதுவாகப் பாரதநாட்டில் சிறப்பாகத் தமிழகத்தில், தாம்கண்ட எல்லாப் பிரச்சினைகளைப்பற்றியும் பாரதியார் எழுதியிருக்கிறார். ரயில்வே நிலைய வர்ணனையிலிருந்து வாழ்க்கை நிலையாமைவரை எழுதியுள்ளார். ஞானரதத்தின் பிரயாணத்தையும் சூரிய அஸ்தமன விந்தையையும் பரவச நிலையில் நின்று வர்ணித்த அவரே பாடகர்களுக்குத் தேவையான குரல் பயிற்சி பற்றியும், பஞ்சாங்கக் கணித சீர்திருத்தம் பற்றியும் எழுதியிருக்கிறார். தீண்டாமைப் பிரச்சினை, உழைப்பின்பெருமை, சமதர்மம், பெண் விடுதலை, தேசியக் கல்வி, இந்து சமயம், சிறைச்சாலைச் சீரமைப்பு, வரதட்சிணை, ஆரோக்கிய வாழ்வு—இப்படிப் பல திறப்பட்ட விஷயங்களைக்குறித்து ஆழ்ந்த கருத்துக்களைத் தீர்க்கமாக எழுதியிருக்கிறார். கட்டுரைகளை விடுத்து கதைகள்விஷயத்திலோ, பாரதியாரின் மனோன்னத மேதை நம்மைப்பிரமிக்க வைக்கிறது. எத்தகைய உயர்ந்த மொழிக்கும் அணிகலனாகத் திகழக் கூடியது "ஞானரதம்." சந்திரிகையின் கதை, சின்னச் சங்கரன் கதை ஆகிய முற்றுப் பெறாத நாவல்களிலே பாரதியார் கையாண்டுள்ள நடை ஆற்றலுடையது.

அங்கத நகைச்சுவையில் "சின்னச் சங்கரன் கதை" ஈடு இணை அற்றது. உலக இலக்கியத்தில் சின்னச்சங்கரன் ஒப்புவமை சொல்ல வேண்டுமானால் ஸ்பானிய நாவலாசிரியரும் மகாமேதையுமான ஸெர்வாண்டிஸ் எழுதிய டாஸ்க்விக்ஸாட் என்ற நூலைத்தான் சொல்லமுடியும்.

கற்பனைக்கு வாய்ப்பான ஒரு கருத்தை மையமாகக் கொண்டு புனைந்ததே "ஞானரதம்" எனவே அதில், பாரதியாரின் எழுத்து கவிதையின் சக்தியோடு, தேனாறு போலப் பாய்கிறது. உரை நடையில் எழுதிய ஒரு காவியமென்றே ஞானரதத்தைச் சொல்லிவிடலாம்.

ஞானரதத்திலிருந்து ஒரு பகுதி காந்தர்வலோகவர்ணனை.

"சரி, பர்வதகுமாரி நான் பறப்பதெப்படி? உன்னைப்போல் எனக்கு இறகுகள் இருக்கின்றனவா?" என்று கேட்டேன்.

"நான் வந்தபொழுது என்மீது இறகுகள் இருக்கக் கண்டாயா" என்றாள்.

"உன் முகத்தைக் கண்டு பரவசமடைந்ததில் இறகுகளைக் குறிப்பிட முடியவில்லை. நீ பறக்கும் பிரஸ்தாபம் தொடங்கிய போதுதான் பார்த்தேன்"

"ஸ்துதி பிறகு பேசலாம். ஆரம்பத்திலே இறகுகள் கண்ணுக்குத் தெரிந்ததா சொல்"

"தெரியவில்லை"

"இந்த உலகத்தில் பறக்க வேண்டுமென்ற நினைவுண்டானவுடனே வெண்மை நிறங்கொண்ட வானிறகுகள் தோன்றுகின்றன. நீ பறக்க வேண்டுமென்று உள்ளத்திலே சங்கற்பஞ் செய்துகொள்"

"இப்போது என் கண்ணுக்குள்ளே உன் வடிவத்தைப்பார்"

பட்டப்பகல்போல வீசிய நிலவொளியிலே அவளுடைய அழகிய கண்களுக்குள் உற்றுப் பார்த்தேன். அங்கே எனது வடிவம் கந்தர்வ ரூபமாகத் தோன்றியது கண்டு வியப்படைந்தேன் ஆகா, நான் கனவுகளிலே என்னைக் கண்டபோது தோன்றிய வடிவம் நோயற்றது; சுருங்கலற்றது; மனிதத் தன்மையில்லாதது. சௌந்தரியமானது. எனக்கும் இரண்டு வான இறகுகள் திடீரென்று முளைந்திருக்கக் கண்டேன். எனது ரூபம் இத்தனை மாறுபாடு அடைந்திருப்பதைக் கண்டு களிப்புற்று, உடனே அவள் முகத்தையும் பார்த்தேன். எனது கண் குறிப்பை நோக்கி என் மனத்திடையே அப்போது நிகழ்ந்த எண்ணத்தை அறிந்து கொண்டுவிட்டாள்"

சமஸ்கிருத உரை நூல்களின் உத்தியைப் பின்பற்றி, நவதந்திரக் கதைகளைச் சமைத்திருக்கிறார் பாரதியார். உலகியல் உண்மைகளை மக்கள் பேசும் உயிர்த்தமிழில் அதி அற்புதமாக விளங்குகின்றன அந்தக் கதைகள். பாரதியாரின் நகைச் சுவையைக் கதைகளில் தேடுகக் காணலாம்.

"சந்திரிகையின் கதை" பாரதியார் காலத்துச் சமுதாயத்தின் அருமையான படப்பிடிப்பு. ஆனால் வெறும் கருத்துப் பிரசார நூலன்று. விதவிதமான குணம் படைத்த பாத்திரங்களைத் தெளிவாகச் சித்திரிக்கிறார். பிரபல பத்திரிகையாசிரியர் ஜி. சுப்ரமண்ய ஐயர் கதையில் ஒரு பாத்திரமாக வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பாத்திரங்களின் பேச்சும் பாவனையும் இயற்கையாக, "உண்மை"த் தன்மையுடன் எழுதப்பட்டுள்ளன. ஓர் உதாரணம் பார்க்கலாம்.

"முத்தம்மாளின் மாமியார் ஒருத்தி அந்த வீட்டிலேயே இருக்காள். அவளுக்கு அறுபது வயதிருக்கும். அவள் விதவை. அவள் பெயர் ராமுப்பாட்டி. அவளுக்கு க்ஷயரோகம் அன்று. காசரோகம். அதாவது சீக்கிரத்தில் கொல்லுகிற கொடூரமான

கூடியமில்லை. நோயாளியை நெடுங் காலம் உயிருடன் வதைத்து வதைத்துக் கடைசியில் கொல் லும் மாதிரி. இராத்திரி ஏழு மணியாகி விட்டால், அவள் இருமத்தொடங்கி விடுவாள். பாதி ராத்திரி, ஒரு மணி காலை இரண்டு மணி வரை மகா பயங் கரமாக இருமிக் கொண்டே இருப்பாள். அந்த இருமலைக் கேட்டால் கேட்பவருடைய பிராணன் இரண்டு நிமிஷத்துக் குள்ளேயே போய்விடும்போலி ருக்கும். ஆனால் ராமுப்பாட்டி, சென்ற முப்பது வருஷங்களாக அப்படித்தான் இருமிக் கொண்டு வருகிறாள். அவளுடைய பிரா ணன் அணுவளவுகூட அசைய வில்லை.

சந்திரிகையின் கதையில் வரு கிற சிறு பாத்திரங்களும் இவ் விதம் தெளிவாகச் சித்தரிக்கப் படுகிறார்கள். உரையாடற் பகுதி கள் எல்லாம் விளக்கவுரைகளாக இல்லாமல் நாடகத்தன்மையோடு தீட்டப்பட்டுள்ளன.

எத்தனையோ பல நாவல்களைத் தந்திருக்கக்கூடிய நாவலாசிரியர், அகாலமரணமுற்றது நமது துர்ப் பாக்கியமே.

பாரதியாரின் வசன நூல் களைப்பற்றிப் பேசும்பொழுது, அவருடைய மொழிபெயர்ப்புக் களின் சிறப்பைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. வேதமந்திரங் கள் சிலவற்றையும், பகவத் கீதை யையும், கதைகள் சிலவற்றையும் அவர் மொழி பெயர்த்திருக் கிறார். முதல் நூல்களின் நிலைக்கு ஏற்ற நடையில் அழகு ஒளிரும். அவருடைய மொழி பெயர்ப்பு மற்ற மொழி பெயர்ப் பாளர்களுக்கெல்லாம் வழிகாட்டி நிற்கிறது என்று சொல்ல வேண்டும்.

தமிழ் உரைச் செல்வத்துக்குத் திறமான அடிப்படை அமைத் துத் தந்தவர் மகாகவி பாரதி யார். எளிமையும் தெளிவும் ஒளியும் ஓட்டமும் கொண்ட ஆற் றுப் பெருக்கைப் போன்ற செம் மையான உரை நடையின் ஆதி கர்த்தா பாரதியார். 1921-க்குப் பிறகு தமிழ் வசனத்தில் ஏற் பட்டுள்ள மிகப் பெரிய முன் னேற்றம் பெரும்பாலும் பாரதி யார் காட்டிய பாதையிலேயே நடந்து வருகிறது.

பாரதியாரின் நூல்களில் நாம் காணும் சமஸ்கிருத மொழிப் பிரயோகங்களுக்குப் பதிலாகத் தமிழ்த் தொடர்களும் புதிய கலைச் சொற்களும் இப்பொழுது எழுத்தாளர்களால் எடுத்தாளப் பட்டு வருகின்றன. இப்படி அந்தந்தக் கால கட்டத்திற்கு ஏற்ப, தமிழ் உரைநடை இலக்கி யத்தில் மாறுதல் நிகழ்வது இயல்பு.

மாறுதல் இன்றி வளர்ச்சி ஏது? ஆயினும் பாரதியார் தந்த பொது அடிப்படை உறுதி நிறைந்தது. அசைக்க முடியா தது. அந்த அடிப்படையின்மேல் எத்தனை அடுக்கு மாடிகள் வேண்டுமானாலும் கட்டிக் கொண்டே போகலாம்.

—(வானொலி)

இரத்த ஓட்ட நோயை விரட்டும் மிளகு!

வாசனைத் திரவியங்களின் அபூர்வ மருத்துவ சக்தி

(டாக்டர் ஜான் மாத்னர்)

"மிளகுரசம்' என்றால், நாக்கை சப்பு கொட்டிக்கொண்டு சாப்பிடுவோர், தமிழகத்தில் ஏராளம்! உணவுப் பண்டங்களில் மிளகு சேர்த்துக் கொள்வோருக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. "இரத்த ஓட்டநோய் வராமல் தடுக்கிறது, மிளகு" என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இரத்தம் உறைவதையும், ஓரிடத்தில் கெட்டியாகி அடைத்துக் கொள்வதையும் மிளகு சத்து தவிர்க்கிறது.

ஹாம்பர்க் (டாட்)-உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படும் போது, 'கும்' என்று நறுமணம் கிளம்பினால், நாக்கில் நீர் சுரக்கும்; உணவுப் பண்டங்களுக்குச் சுவையும் மணமும் அளிப்பவை வாசனைத் திரவியங்களே. ஆனால் "மிளகு, ஏலக்காய், கிராம்பு, போன்ற வாசனைத் திரவியங்களை பயன்படுத்துவதை தவிருங்கள்" என்று பொதுவாக மருத்துவர்கள் இதுவரை யோசனை கூறிவந்திருக்கிறார்கள். அஜீரணம், தோல் அரிப்பு, வயிற்றுப்புண், மற்றும் சில நரம்பு வியாதிகளைத் தடுக்க, இவற்றை உபயோகிக்கக் கூடாது என்றும் கூறுவார்கள். வாசனைத் திரவியங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்ட உணவுப் பண்டங்கள் அளவில்லாமல் சாப்பிட்டு விட்டால் எளிதில் ஜீரணிக்க முடியாது என்பதே இதற்கு காரணம். ஆனால் அதே வாசனைத் திரவியங்களினால் விளையக்கூடிய சில நன்மைகள்—குறிப்பாக உடல் நலத்தைப்பாதுகாக்கும் தன்மை; நோய்களைக் குணப்படுத்தும் தன்மை ஆகியவற்றை மருத்துவர்கள் இதுவரை மறந்து வந்திருக்கிறார்கள்.

வாசனைத் திரவியங்களினால் விளையக்கூடிய நன்மைகள் என்ன என்பது குறித்து மேற்கு ஜெர்மனியில் டார்டமன்ட் என்னுமிடத்திலுள்ள மாக்ஸ் பிளாங்க் சத்துணவு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தி, தங்கள் முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். வாசனைத் திரவியங்கள் குறிப்பாக மிளகு, இரத்த ஓட்டம் சம்மந்தமான நோய்களைத் தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. சுத்தரத்தம் ஓடுகிற குழாயில், ஏதேனும் ஓரிடத்தில் ரத்தம் கெட்டித்துப் போவதாலோ குழாய் இறுகிப் போவதாலோ, அன்னியவஸ்து புகுந்து இரத்த ஓட்டத்தை தடைப்படுத்தினாலோ, உயிருக்கு ஆபத்து விளையக்கூடும். இவ்வித நோய்களை, மிளகு குணப்படுத்தும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

சென்னை மாநகர உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

14—12—1966 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பெற்ற தீர்மானங்கள் :—

1. உதவி பெறும் பள்ளிகளுக்குத் தற்போது கொடுக்கப்படும் பள்ளி நிர்வாகத் தொகை 10% மிகக் குறைவாக இருப்பதால் 20% ஆக உயர்த்துமாறும், பள்ளிக் கட்டட வாடகைத் தொகை முழுமையும் கொடுக்குமாறும் அரசாங்கத்தை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. பள்ளிக் கட்டடம் சொந்தமாக இருப்பின் கட்டடத்திற்காகும் நிர்வாகச் செலவு முழுவதையும் தந்துதவுமாறு இச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. மாகாண முழுமையும் ஒரே சீரான நிர்வாகத் தொகையை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறது.

3. தற்கால விலை உயர்வு காரணமாக மதிய உணவு உதவித் தொகை ஒரு மாணவனுக்கு ஆறு காசு கொடுப்பதை உயர்த்தி இருபத்தைந்து காசாகக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறது. அவ்வாறு கொடுக்காவிடில் மதிய உணவு வழங்குவதை நீக்க வேண்டிதாகும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

4. ஆரம்பப் பள்ளிகளில் மூன்று, நான்கு, ஐந்து வகுப்புகளில் 5 பிரிவுகளும் அதற்கு மேல் பிரிவுகள் இருப்பினும் மேற்கண்ட மூன்று வகுபபுகளுக்கு ஆங்கிலம் போதிக்கவும், ஐந்தாம் வகுப்பிற்கு விஞ்ஞானம் போதிக்கவும், விதிதாசாரப்படி நடுநிலைப் பயிற்சி பெற்ற (செகண்டரி கிரேடு) ஆசிரியர்களைத் தனியாக நியமிக்க உத்தரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறது. தலைமை ஆசிரியரை இதில் சேர்க்கக் கூடாது. உயர் தொடக்கப் பள்ளியாக இருப்பின் 6, 7, 8 வகுப்புகளில் ஆசிரியர்களையும், தலைமையாசிரியரையும் தவிர்த்துத் தனியாக நியமிக்க உத்தரவு தருமாறு கேட்டுக் கொள்கிறது.

5. ஒவ்வொர் ஆண்டும் அதிகப்படியாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை

யைக் கொண்டு அளிக்கப்படும் அதிகப்படி தனி ஆசிரியர்களைக் கணக்கிடாமல் வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கையைக் கொண்டு பிரிவுகள் அமைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறது.

6. பட்டணங்களிலும் நகரங்களிலும் வீட்டு வாடகை உயர்ந்திருப்பதால் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. ஆரம்பக் கல்விக்கான அரசாங்க உத்தரவுகளையும் (G. Os.), அவ்வப்போது மாற்றமுள்ள இடைநிலைக் கல்வி இயக்குநர் அலுவல் தகவல்களையும் (Proceedings) ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கச் செயலாளருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறது.

8. 1967 ஆம் ஆண்டிற்காக நிர்வாகிகள் சங்கத்திற்கு கீழ்க் கண்டவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

தலைவர் :

திரு. A. R. சேஷாசலம்

உப தலைவர்கள் :

திரு. P. வீரராகவன்
திரு. T. V. சுந்தரமூர்த்தி
திரு. K. கணேசன்

செயலாளர் & பொருளாளர் :

திரு. M. R. சோமசுந்தரம்

நிர்வாகக்குழு அங்கத்தினர்கள் :

திரு. தானியேல்
திரு. ஜார்ஜ்
திரு. கந்தசாமி நாடார்
திரு. M. S. சீனிவாசன்
திரு. ஆறுமுகம்
திரு. அல்லமன்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிளகு சேர்க்கப்பட்ட அரிசி உணவைச் சாப்பிட்டபின், மனிதனின் இரத்த ஓட்டத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்படுகிறது; அதாவது இரத்த உறைதலுக்குரிய தீய சத்து பெரிதும் குறைகிறது. மிளகு சேர்க்கப்பட்ட உணவுப் பதார்த்தங்களைச் சாப்பிட்டால், இரத்தம் உறைதலை தவிர்க்க முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் சோதனைகளிலிருந்து கண்டுபிடித்துள்ளனர். மிளகு சேர்ந்த உணவு உண்ட பின்னர், இரத்த ஓட்டத் துடிப்பு அதிகமாகிறது; இதன் மூலம் இருதயம் நன்கு வேலை செய்து, சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் ஏற்படுகின்றது என்றும் சோதனைகளிலிருந்து தெரியவருகின்றது.

(யூ. பி. எஸ்.)

அமெரிக்கா பற்றிச் சில கேள்விகள்?

அமெரிக்க நாட்டுச் சின்னத்தின் விளக்கம் என்ன?

இறக்கைகளையும் கால் நகங்களையும் இருபுறமும் விரித்த தோற்றத்தில் உள்ள ஓர் அமெரிக்கக் கழுகுதான் அமெரிக்க நாட்டுச் சின்னம். அதன் மார்பில் தன்னம்பிக்கைக்கு அடையாளமாகக் கேடயம் ஒன்று உள்ளது. கேடயத்தின் அடிப் பாகத்தில் வெள்ளைக் கோடுகளும் சிவப்புக் கோடுகளும் மாறிமாறி உள்ள 13 பட்டைக் கோடுகளைக் காணலாம்; இவை அமெரிக்க நாட்டில் ஆதியில் இருந்த 13 மாநிலங்களைக் குறிப்பனவாகும். கேடயத்தின் மேல் பாகம் ஒரே நீலமாக அமைந்துள்ளது: கேடயத்திலுள்ள மூன்று நிறங்களுக்கும் பொருள் உண்டு; வெண்மை, தூய்மையையும் குற்றமற்ற தன்மையையும்; சிவப்பு, திண்மையையும் வீரத்தையும்; நீலம் தளராமை, விழிப்பு, நீதி ஆகியவற்றையும் குறிக்கின்றன. கழுகு தன் வலது கால் நகங்களில் ஒலிவமரக் கிளை ஒன்றையும், இடது கால் நகங்களில் 13 அம்புகளையும் பிடித்துக் கொண்டுள்ளது. "ஆயத்தமாயிருக்கும் தன்மை, அமைதியான பண்பு இரண்டையும்" காட்டும் நிலை இது என்பார் ஜனாதிபதி கென்னடி. கழுகு தன் அலகில் பிடித்துள்ள நாடாவில் "புளூரிபுஸ் ஊனும்" என்னும் இலத்தீன் வாசகம் இருக்கிறது; பன்மையில் ஒருமை என்பது அதன் பொருள்; பல மாநிலங்கள் சேர்ந்த யூனியனைக் குறிப்பதற்காக இவ் வாசகம் அமைந்துள்ளது. கழுகின் தலைக்கு மேலே, 13 நட்சத்திரங்களைச் சூழ ஓர் ஒளி வட்டம் உள்ளது.

* * *

அமெரிக்க அரசியல் சட்டத்துக்கு இதுவரை எத்தனை திருத்தங்கள் ஏற்பட்டுள்ளன?

இருபத்துநான்கு. கடைசித் திருத்தம் 1964 ஜனவரி 23-ம் தேதி 38 மாநிலங்களால் அங்கீகரிக்கப்பட்டதும் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றது.

* *

அமெரிக்காவில் துணை ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் எத்தனை பேர் ஜனாதிபதிகளாகியிருக்கிறார்கள்?

துணை ஜனாதிபதி பதவி வகித்தவர்களில் பதினொரு பேர்கள் பின்பு ஜனாதிபதியாகியிருக்கிறார்கள். இவர்களில் மூன்று பேர்கள் ஜனாதிபதிக்குரிய பதவிக் காலம் முடிந்த பின்பு தேர்தலுக்கு நின்று ஜனாதிபதி பதவிக்கு வந்தவர்கள். மற்ற எட்டுப் பேர்களும் தாங்கள் துணை ஜனாதிபதி பதவி வகிக்கையில்

ஜனாதிபதி காலமானதை அடுத்து ஜனாதிபதியானார்கள்.

* * *

அமெரிக்காவில் பாதாள ரயில் பாதைகள் உண்டா?

உண்டு. அவற்றிலெல்லாம் மிகவும் பெரியது நியூயார்க் மாநகரின் அடியில் ஓடும் 236 மைல் நீளப் பாதாள இருப்புப் பாதைதான்; இதில் நாள் ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 30 லட்சம் பேர்கள் பிரயாணம் செய்கிறார்கள்; நெருக்கடி நேரத்தில் நிமிடத்துக்கு 9,500 பேர் பிரயாணம் செய்கிறார்கள்.

* * *

அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகும் தினசரி எது?

அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகும் தினசரிப் பத்திரிகை "நியூயார்க் டெய்லி நியூஸ்" என்பது. நாள் தோறும் இதன் பிரதிகள் 22,24,649 விற்பனையாகின்றன; ஞாயிற்றுக்கிழமைகளில் 32,06,051 பிரதிகள் விற்பனையாகின்றன.

* * *

அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகைக்கு வெள்ளை மாளிகை என்று ஏன் பெயர் வந்தது?

1814-ல் பிரிட்டனுடன் நடந்த ஒரு போரில் அமெரிக்க ஜனாதிபதியின் மாளிகை பிரிட்டிஷாரால் தீ வைக்கப்பட்டது. சாம்பல் நிறக் கற் கட்டடமாகிய அதில் இதனால் கரிந்த இடங்களை மறைக்க அதன்பின் வெள்ளை வர்ணம் தீட்டினார்கள். அதன் பின்னரே அதற்கு வெள்ளை மாளிகை என்று பெயர் வந்தது.

* * *

அமெரிக்காவில் எத்தனைக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் உள்ளன? அவற்றில் எவற்றிற்காவது அரசியல் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளனவா?

2100 இருக்கின்றன. சில, அரசியல் தலைவர்களின் பெயரைத் தாங்கி நிற்கின்றன. உதாரணம்: ஜெஃபர்ஸன் வைத்தியக் கல்லூரி, பிலடெல்பியா; ரூஸ்வெல்ட் பல்கலைக்கழகம், சிக்காகோ; ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகம், வாஷிங்டன் நகரம்.

* * *

எஃப். பி. ஐ. என்றால் என்ன?

"ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன் என்பதன் சுருக்கமே எஃப். பி. ஐ. இது. அமெரிக்க நீதி இலாகாவின் ஒரு பிரிவு. மத்திய அரசுச் சட்டங்கள் மீறப்படுவது, உள்நாட்டுப் பந்தோபஸ்து பற்றிய விஷயங்கள் இவை குறித்து அது புலன் விசாரணை நடத்துகிறது. 1924 முதல் ஜே. எட்கார் ஹூவர், எஃப். பி. ஐ. டைரக்டராக இருந்து வருகிறார்.

அமெரிக்காவில் எத்தனை அரசியல் கட்சிகள் இருக்கின்றன?

இரு முக்கிய அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இவை: ஜனநாயகக் கட்சி, குடியரசுக் கட்சி

உள்ளூர்ப்பதவிகளுக்கும், ஜனாதிபதி பதவி உள்படத் தேசியப் பதவிகளுக்கும் இவை அபேட்சகர்களை நிறுத்தி வைக்கின்றன. பலப் பல சிறு சிறு கட்சிகளும் உண்டு.

சில சிறு கட்சிகள் மாநிலங்களில் மட்டும் செயல்படுகின்றன. 1964 தேர்தலில் 15 மாநிலங்களில் நான்கு சிறு கட்சிகள் ஜனாதிபதி பதவிக்கு அபேட்சகர்கள் நிறுத்தி வைத்தன.

* * *

அமெரிக்காவில் பல்கலைக் கழகத் தேர்வுகள் நடப்பதெப்படி ?

கல்வி ஆண்டு முழுதிலும் ஒவ்வொரு வகுப்பிலும் சிறு சிறு தேர்வுகளும், ஆண்டு இறுதியில் ஒரு பெரிய தேர்வும் நடத்தப் படுகின்றன. ஒரு மாணவனின் தகுதி, அவன் எல்லாத் தேர்வுகளிலும் மொத்தத்தில் எப்படி எழுதியிருக்கிறான் என்பதைப் பொறுத்ததே. எனவே, ஒரு மாணவன் இறுதித் தேர்தலில் வெற்றி பெறாவிடினும், அடுத்த வகுப்புக்குச் செல்ல முடியும்.

* * *

ஸி. ஸி. ஸி. என்றால் என்ன ?

1930ஆம் ஆண்டு வாக்கில் அமெரிக்காவில் கடுமையான பொருளாதார மந்தம் ஏற்பட்ட காலத்தில் அமெரிக்க அரசாங்கம் "ஸிவிலியின் கான்சர்வேஷன் கோர்" என்ற ஒரு நிலையத்தை நிறுவியது. அதுதான் சுருக்கமாக ஸி. ஸி. ஸி. எனப்படும். இந்நிலையத்தால், 24 லட்சம் அமெரிக்கருக்கு ஆலை தவிர்த்து வேறிடங்களில் நல்ல பல வேலைகள் கிடைத்தன. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் முதலிய துறைகளில் அவர்கள் வேலை செய்தார்கள். நாட்டு வரலாறு கண்ட மிகப் பொல்லாத பொருளாதார மந்தத்திலிருந்து மக்களை விடுவிக்க ஸி. ஸி. ஸி. இவ்வாறு உதவியது. இன்று இதே போல் வேலைப்படை என்பதொன்றை ஜனாதிபதி ஜான்சன் உருவாக்கியிருக்கிறார்; பள்ளிப் படிப்பை இடையிலே நிறுத்திவிட்டு வேலையில்லாதிருப்பவர்களுக்கு வேலை கொடுப்பதே இதன் வேலை.

* * *

அமெரிக்காவில் எத்தனை ராக்கெட் செலுத்தும் தளங்கள் உண்டு ?

முக்கியமானவை 10. தலையாயது பிளோரிடா மாநிலத்தில் கென்னடி முனையிலுள்ளது. மற்ற முக்கியமான செலுத்து தளங்கள் சில. இவை: வாண்டன்பர்க் விமானப் படைத் தளம்; கலிபோர்னியா; வாலப்ஸ் தீவு; வர்ஜீனியா; ஒயிட் ஸான்ட்ஸ், நியூ மெக்ஸிகோ; எல்ஜின் விமானப் படைத்தளம். பிளோரிடா.

* * *

அமெரிக்கச் சட்டமன்ற உறுப்பினர்களில் எத்தனை பேர் பெண்கள் ?

பதினொரு பேர்கள். இருவர் செனட் சபை உறுப்பினர், ஒன்பது பேர் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்.

இந்தியாவுக்கு அமெரிக்கா கொடுக்கும் கடன்களுக்கு வழக்கமாக என்ன வட்டி? வாங்கிய கடனை இந்தியா எவ்வளவு காலத்துக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்?

யு. எஸ். ஏ. ஐ. டி. என்னும் அமெரிக்க அரசாங்க உதவி நிலையம் இந்தியாவுக்குக் கொடுக்கும் கடன்கள் 40 ஆண்டுத் தவணைகளில் திருப்பிக் கொடுக்க வேண்டியவை. முதல் பத்தாண்டுகளில் திருப்பிக் கொடுக்க வேண்டியது ஒன்றும் இல்லை; இம் முதல் பத்தாண்டுகளில் வட்டி ஆண்டுக்கு நூற்றுக்கு ஒன்று. மீதமுள்ள 30 ஆண்டுகளில் வட்டி ஆண்டுக்கு நூற்றுக்கு $2\frac{1}{2}$.

O O O

அமெரிக்காவின் பாதுகாப்பு இலாகாவுக்கு "பென்டகன்" என்று பெயர் வரக் காரணம் என்ன?

அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவின் முக்கிய அலுவலகங்களெல்லாம் வாஷிங்டன் நகரில் உள்ள ஒரு ஐங்கோண வடிவமான கட்டத்தில்தான் உள்ளன. ஐங்கோண வடிவத்துக்கு ஆங்கிலத்தில் "பென்டகன்" என்று பெயர். எனவேதான் — அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவுக்குப் "பென்டகன்" பெயர் வரலாயிற்று.

O O O

ஜெமினி 7 முதலிலும் ஜெமினி 6 அதன் பிறகும் விண்வெளியில் அனுப்பப்பட்டதேன்?

சென்ற அக்டோபர் மாதந்தான் ஜெமினி-6 விண்வெளியில் செல்லவிருந்தது. அப்போது அது தனக்கு முன் விண்ணில் ஏவப்பட்ட அஜீனு ஏவுகணையை விண்வெளியில் சந்திக்க வேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால், ஜெமினி-6 கிளம்பும் முன் அஜீனு ஏவுகணை விண்வெளியில் வெடித்து விட்டது. ஆகவே திட்டம் கைவிடப்பட்டது. அதன் பின்னரே, ஜெமினி-7 கப்பலுடன் ஜெமினி-6 விண்வெளிச் சந்திப்பு நடத்துவதென்று தீர்மானமாயிற்று. டிசம்பர் 4-ம் தேதி ஜெமினி-7 தன் பதினான்கு நாள் விண்வெளிப் பயணத்தைத் தொடங்கியது. அதை டிசம்பர் 15-ம் தேதி ஜெமினி-6 விண்வெளியில் சந்தித்தது. உலக வரலாற்றின் முதல் விண்வெளிச் சந்திப்பு இது.

அமெரிக்காவில் வழங்கும் மொழிகள் எவை?

மிகப் பெரும்பாலும் ஆங்கிலமே. எனினும், மெக்ஸிகோ நாட்டை அடுத்துள்ள பகுதிகளில் ஸ்பானிய மொழியும் ஓரளவு வழங்குகிறது.

O O O

பி. எல். 480 என்றால் என்ன?

அமெரிக்காவின் சட்ட மன்றம் 1954-ல் இயற்றிய ஒரு சட்டந்தான் பி. எல். 480 எனப்படுவது. அதன் முழுப் பெயர் 1954-ன் விவசாய வர்த்தக வளர்ச்சி உதவிச் சட்டம். அச் சட்ட மன்றத்தின் 480-வது

[22ஆம் பக்கம் பார்க்க]

உங்கள் கண்களைப் பாதுகாருங்கள்

[ஆர். டெனன்ட், எம். டி.]

உங்கள் கண்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், அவைகளுக்குப் போதிய ஓய்வு அளிப்பது அவசியம். இதற்கு நாள் தோறும் இரவில் எட்டு அல்லது ஒன்பது மணி நேரம் தூங்க வேண்டும். பகலில் இந்தப் பயிற்சியையும் செய்யலாம். இரண்டு கண்களையும் மூடி, வலது உள்ளங்கையினால் இடது கண்ணையும், இடது உள்ளங் கையினால் வலது கண்ணையும் பொத்தி, முழுங்கையை முழங்காலில் ஊன்றி, உங்கள் முன்னால் ஒரு கருப்புப் பந்து இருப்பதாக எண்ணிக்கொண்டு, அதைப் பார்க்க முயலுங்கள். பந்து எவ்வளவு கறுப்பாகத் தோன்றுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நன்மை. குறைந்தது பத்து நிமிஷமாகிலும் இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டும்.

குளிர்ந்த தண்ணீர் கண்ணுக்குச் சுகம். முகம் கழுவுகின்ற பொழுது, கண்களை மூடிக் கொண்டு, உள்ளங்கையினால் கொஞ்சம் தண்ணீரை அள்ளி, அதைக் கண்களின் மேல் வீசிக் கொள்ள வேண்டும். இப்படி ஐந்து, ஆறு தடவை செய்ய வேண்டும். இது கண்களுக்குத் தெளிவையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

சூரிய வெளிச்சமும் கண்களுக்கு நல்ல மருந்து. தினந் தோறும் ஒன்று அல்லது இரண்டு நிமிஷம் சூரியனை உற்றுப் பார்த்துக் கொண்டே, தலையை மெதுவாக ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் திருப்ப வேண்டும். இதனால் சூரிய வெளிச்சம் கண்ணின் எல்லாப் பாகங்களிலும் சம அளவாக விழுந்து, அதிக இரத்தம் கிட்டுகிறது.

விளக்கு ஒளி நல்லதல்ல. இயன்ற மட்டும் அது நேரே கண்ணுக்குள் வீசாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும்.

அச்செழுத்தை வாசிப்பது கண்ணுக்குக் கெடுதி என்று சிலர் நினைக்கலாம். ஆனால் உண்மையில் அது ஒரு சிறந்த பயிற்சி. ஏனெனில் நாம் வாசிக்கின்ற போது, கண் சதா ஓடிக் கொண்டே இருக்கிறது. கண்ணை நெடு நேரம் ஊன்றிப் பார்ப்பதும் வெறித்துப் பார்ப்பதும் தான் கெடுதல். ஒரே பார்வையில் ஒரு நீண்ட வரி அல்லது பாரா முழுவதையும் படித்து விட வேண்டும் என்று பிரயாசைப் படுவதும் தவறு. அப்படிப் படிப்பதற்கேற்ற விதமாகக் கண் அமைந்திருக்கவில்லை.

அடிக்கடி கண்ணை மூடி மூடி விழிப்பதும் ஒரு நன்மையான

பயிற்சி. இப்படிச் செய்வதனால், கண் மிகவும் வேகமாக இயக்கப் படுவதும் அல்லாமல் அதற் குக் கொஞ்சம் கொஞ்சம் ஓய்வும் கிட்டுகிறது. இன்னும் இதனால் கண்ணீரும் கசிந்து, கண்ணில் விழுந்திருக்கும் தூசு துப்புகளை வெளியே தள்ளிக்கொண்டு வரு கிறது. நாம் வாசித்துக்கொண் டிருக்கும்போதும், ஆபீஸில் வேலை செய்து கொண்டிருக்கும் போதும், இடையிடையே இரண் டொரு நிமிஷம் கண்ணை வேக மாக மூடி மூடித் திறக்கவோ, அல்லது கண்ணைப் புஸ்தகத்தி லிருந்து எடுத்து வேறு எதை யாவது பார்க்கவோ வேண்டும்; அல்லது கண்ணைப் பொத்திக் கொண்டிருந்தாலும்போதும்.

இன்னும் சில பயிற்சிகள் இருக்கின்றன. அவைகளைக் காலை யில் எழுந்தவுடன் செய்வது நல்லது. தலையை அசைக்காமல், கண் விழியை மட்டும் மாற்றி மாற்றி வலது புறமும் இடது புறமும் திருப்புங்கள்; பிறகு கொஞ்ச நேரம் மேலும் கீழு மாகத் திருப்புங்கள்; கடைசி யாக, கண்ணை உருட்ட வேண் டும்.

—"நல்வழி"

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச் சட்டம் அது; ஆங்கிலத் தில் 'பப்ளிக் லா 480" எனப்படும். அதன் சுருக்கமே பி. எல். 480. இச் சட்டத்தின் முக்கிய நோக்கங்கள் இவை: (1) நட்பு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுதல்; (2) விவசாயப் பண்டங்களில் சர்வதேச வர்த்தகத்தை விரி வாக்குதல்; (3) அமெரிக்க விவ சாயத்தின் பொருளாதார உறுதி நிலையை வளர்த்தல்; (4) சுதந்திர உலகத்தில் கூட்டு வலிமையை வளர்த்தல்.

* * *

அமெரிக்காவில் மிகப் பெரிய நூலகம் எது?

அமெரிக்காவின் தலைநகராகிய வாஷிங்டனில் உள்ள சட்டமன்ற நூலகந்தான் நாட்டில் மிகப் பெரிய நூலகம். அதில் உள்ள நூல்கள், வெளியீடுகளின் மொத்த எண்ணிக்கை: 1,30,00,000.

* * *

அமெரிக்காவில் கோதுமை விளைச்சல் பெருகக் காரணம் என்ன?

ஏராளமான ரசாயன உரங் கள்; இயந்திர மயமான விவசா யம். அன்றியும், விளைவித்த பொருளுக்கு நியாயமான விலை உண்டு என்று விவசாயிக்கு அரசாங்கம் உறுதி செய்து வைப்பதும் ஒரு முக்கிய காரண மாகும்.

அரிசி : அறியவேண்டிய அரிய செய்திகள்

****

உலக மக்களில் பாதிப்பேர் உண்பது அரிசியே. இவ்வாறே இந்தியர்களிலும் பாதியளவினருக்கு அதுவே முக்கிய உணவாக உள்ளது.

1963-64-ல் உலகம் முழுவதிலும் அரிசிச் சாகுபடி நடந்த நிலங்களின் பரப்பளவு மொத்தம் 8,71,12,000 ஹெக்டேர்களாகும். அதில் ஆசியாவின் பங்கு 7,76,00,000; அதாவது, 89 சதவிகிதம். இந்தியாவைப் பொறுத்தவரையில் மொத்தப்பயிர் நிலத்தில் அதன் பங்கு 21 சதவிகிதம்.

உலகில் ஐம்பதுக்குமேற்பட்ட நாடுகள் அரிசிச் சாகுபடியில் ஈடுபட்டுள்ளன. அளவிலும் சரி பணமதிப்பிலும் சரி, கோதுமையையும் மிஞ்சி நிற்கிறது அரிசி விளைச்சல். ஒரு ஏக்கராவில் கோதுமையைப் போல இரண்டு அல்லது மூன்று மடங்கு அரிசியை அறுவடை செய்யமுடிவதே இதற்குக் காரணம். வெப்பம், குளிர், வறட்சி- வெள்ளம், இருட்டு - வெளிச்சம், காரத்தன்மை-காரத்தன்மை ஆகிய எதிரெதிர் நிலைகள் எந்த அளவுக்கு இருந்தபோதிலும் நெற்பயிர் சமாளித்துச் சாகுபடியாவதே இந்தப் பெருவிளைச்சலுக்குப் பிரதான காரணம்.

உலகில் மொத்தம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அரிசி ரகங்கள் உள்ளன. இவற்றில் ஏறக்குறைய 6000 ரகங்கள் இந்தியாவில் பயிராகின்றன.

உலகில் அதிக அரிசி விளைவிப்பது சீனாவே. கி. மு. 3000-ஆண்டிலேயே அதைப் பயிரிடத் தொடங்கிவிட்ட அந்நாட்டில் 1963-இல் 7,84,00,000 டன் கண்டுமுதலானதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. சீனாவுக்கு அடுத்தபடி இந்தியாவில்தான் அதிக அளவில் அரிசி சாகுபடியாகிறது. 1963-64-ல் மொத்தம் 3,64,89,000 டன் விளைச்சல் கண்டோம்.

உலகம் முழுவதிலும் ஏறக்குறைய 100 கோடிப்பேர் அரிசிச் சாகுபடியில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களில் அமெரிக்கர் ஏக்கராவுக்கு ஏழு மணி நேரமே செலவிடுகின்றனர். ஜப்பானியர் 900 மணி நேரம் உழைக்கின்றனர். மற்றவர்களோ 1000 மணி நேரத்துக்குமேல் பாடுபடுகின்றனர். இறுதியில், இந்தியர் போன்ற அந்த இதரருக்குக் கிடைக்கும் சராசரி விளைச்சலோ அமெரிக்க, ஜப்பானியச் சராசரியில் மிகக் குறைந்தவிகிதமே.

(29ஆம் பக்கம் பார்க்க)

சட்டசபைகளில் குழப்பநிலை: சபாநாயகர்கள் ஆலோசனை

எதிர்க்கட்சிகளின் நியாயமான யோசனைகளை ஏற்க வேண்டும் ஹுகும் சிங் வற்புறுத்தல்

புது டில்லி, அக். 29—சட்ட சபைகளில் அடிக்கடி குழப்பங்கள் நிகழ்ந்து வருவது பற்றி லோகசபை சபாநாயகர் திரு. ஹுகும் சிங் இன்று குறிப்பிட்டார்.

பார்லிமெண்டில் சர்க்கார் கையாள வேண்டிய உத்தியை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலமும், எதிர்க்கட்சிக்காரர்களின் நியாயமான யோசனைகளை ஏற்பதன் மூலமும் இதைச் சமாளிக்க வேண்டுமென்றும் அவர் கூறினார்.

நாட்டின் அரசியல் சூழ்நிலை வேகமாகமாறி வருகிறது; மெஜாரிட்டி பலத்தை நம்பி சர்க்கார் இருந்து விடுவதற்கில்லை என்பதை சர்க்காருக்கு அவர் அறிவுறுத்தினார்.

சபை நடவடிக்கை நடக்கவிடமாட்டோம் என்று சில அரசியல் கட்சிகள் மிரட்டுவது அதிகரித்திருக்கும் சூழ்நிலையில் ராஜ்ய சபைகளில் ஒழுங்கைபராமரித்து வரும் பிரச்னை குறித்து மகாநாட்டின் இன்றைய கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

சட்டசபைகளில் குழப்பம் விளைவிக்கும் முறையில் நடந்து கொள்ளும் அங்கத்தினர்கள் மீது மட்டுமன்றி, இத்தகைய செயல்களை ஆதரிக்கும் வெளியார்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல ராஜ்யங்களைச் சேர்ந்த சபாநாயகர்கள் இன்று யோசனை தெரிவித்தனர்.

மற்றொரு அங்கத்தினர் பேரில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை செய்யும் அங்கத்தினர் மீது கோர்ட் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியுமா என்பது குறித்தும் இன்று விவாதிக்கப்பட்டது.

சட்டமன்ற சபாநாயகர்கள், அக்கிராசனர்கள் மாநாட்டில் திரு. ஹுகும் சிங் இன்று பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

போர்க்களத்தில் ஒரு எதிரியை சமாளிக்கும் விஷயத்தில் எவ்வளவு விறுவிறுப்பாகத் திட்டம் வகுத்துக் கொள்ளவேண்டுமோ, அதே போல பார்லிமெண்டில் எதிர்க் கட்சிகளைச் சமாளிப்பதற்காகவும் விறுவிறுப்பாகத் திட்டம் வகுத்தாக வேண்டியது அவசியமாகும் என்று சபாநாயகர் சொன்னார். சர்க்கார் செய்வது சரியாயிருந்தால் மட்டும் போதாது. தான் செய்

வது சரியானதுதான் என்பதை எடுத்துக் காட்டி நிலை நாட்டவும் வேண்டும். எதிர்க் கட்சிகளைக் குறை கூறுவதில் பிரயோஜனமில்லை என்றார்.

இம்மாநாட்டில் திரு.ஹுகும் சிங் 50 நிமிஷ நேரம் பேசினார். அதில் பெரும் பகுதி, சென்ற கூட்டத் தொடரில், நிகழ்ந்த பல விரும்பத் தகாத சம்பவங்கள் குறித்தும், தர்மசங்கடமான சம்பவங்கள் பற்றியுமே இருந்தது.

சர்க்கார் முன்யோசனையுடன் நடந்து கொண்டிருக்கும் பட்சத்தில், பரபரப்பைத் தவிர்த்திருக்கலாம் என்பதற்குசிலஉதாரணங்களை திரு.ஹுகும்சிங் எடுத்துக் காட்டினார்.

அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள்—கடுமையான கருத்து வேறுபாடுகள்கூட இருந்து வருவதில் தவறில்லை. ஜனநாயக அமைப்பு சரிவர செயல் படுவதற்கு அது அவசியமும்கூட என்றார் திரு.ஹுகும் சிங். ஆனால் இந்த வேறுபாடுகளை வெளியிடும் விதத்திலும் அதற்காகக் கையாளும் வழிகளிலும், ஓரளவுஅடக்கம் இருந்தாக வேண்டும் என்றார். அவர்மேலும் கூறியதாவது:—

கருத்து வேறுபாடுகளுக்காக நாம் கையாளும் வழிமுறைகள், நாம் கட்டி வளர்த்துவரவிரும்பும் ஸ்தாபனங்கள் செயல் படுவதற்கே இடைஞ்சலாயிருக்குமானால், ஜனநாயக அமைப்பின் நோக்கமே அடிபட்டுப் போய் விடும்.

தேசத்தின் அபிப்பிராயத்தை எடுத்துரைப்பதற்கான மன்றமாகும் பார்லிமெண்ட், அங்கு அங்கத்தினர்கள் நடந்துகொள்ளும் விதம், தேசத்தில் ஆழ்ந்தவிளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும். லோக சபையில் அங்கத்தினர்கள் நடந்து கொள்ளும் விதம் சபையின் அந்தஸ்தையும், மதிப்பையும் உயர்த்தி, பார்லிமெண்டரி ஜனநாயக முறையில் நம்பிக்கை அதிகரிக்கச் செய்வதாயிருக்க வேண்டும்.

சட்டசபைகளில் அங்கத்தினர் பரஸ்பரம் வசைபாடி கோபாவேசமாக நடந்து கொள்ளும் போக்கு சர்வ சகஜமாகிவிட்டால், சமூகத்தின் பிற பகுதியினர் தங்களுடைய ஆசாபங்கத்தை வெளியிட்டுக் கொள்ளுவதற்காக அடிக்கடி பலாத்கார சம்பவங்களிலும், கட்டுப்பாடற்ற செயல்களிலும் இறங்கும்போது அவர்களை எப்படிக் குறைகூற முடியும்?

நமது நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு இது ஒரு பெரிய அபாயமாகும். இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். நாட்டிலுள்ள எல்லாச் சட்ட சபைகளையும், குறிப்பாக, அடுத்த தேர்தலுக்குப் பின் முதன்முதலாக இந்தச் சபைகளுக்கு வருபவர்களையும், நான் ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னமும் பொது மக்களிடம் மதிப்புடன் விளங்கி வரும் இந்தப் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களின் கண்ணியம் கௌரவம் இவர்கள் கையில்தான் இருக்கிறது. *

செய்திச் சுருள்

சர்க்காரைக் குறை கூறினால் கோபிக்கும் போக்கை அமைச்சர் சாடுகிறார்.

கோவை. அக். 26—சர்க்கார் கொள்கைகளை யாராவது குறை கூறினால் அது சர்க்காரைத் தாக்குவதாகக் கருதி, கண்டிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது என்றும், இது கண்டிக்கத் தக்கது என்றும் மந்திரி திரு ஆர். வெங்கட்ராமன் கூறினார்.

இந்தப் போக்கு நீடித்தால் நாட்டில் சுயேச்சையான சிந்தனையும் ஜனநாயகமும் இல்லாமல் போய் விடும் என்று அவர் கூறினார்.

இன்று மாலை ஒரு வைபவத்தில் பேசிய திரு ஆர். வெங்கட்ராமன் சொன்னதாவது—

பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால்தான் அது வெற்றி பெற முடியும். அதனால்தான், பர்மா, பாகிஸ்தான் கள் போன்ற நாடுகளில் இந்த முறை கைவிடப்பட்டு விட்டது. பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, ஆங்கிலோ ஸாக்ஸன் நாடுகளில்தான் அது வெற்றி பெற்றிருக்கிறது.

சமீபகாலமாக நமது அரசியல், பொருளாதார நிலைமை சீர்கெட்டு வருகிறது. மாறுபட்ட கருத்துக்கள் தாராளமாகத் தெரிவிக்கப்படுவதற்கு இடம் தாராததே இதற்குக் காரணம். அமெரிக்காவில் உள்ளதைப் போன்ற ஜனாதிபதி ஆட்சி முறையை இங்கு ஏற்படுத்தலாம் என்று கொஞ்ச நாளைக்கு முன் நான் யோசனை கூறினேன். அதைக் கண்டு பலருக்குக்கோபம்வந்தது. நான் ராஜினாமா செய்ய வேண்டுமென்றுகூட ஒரு பத்திரிகை எழுதியது. சமீபத்தில் அகில இந்திய உற்பத்தியாளர் சங்கக் கூட்டமொன்றில் மத்திய சர்க்காரின் நிர்வாக அமைப்பை நான் கூறினேன். இதற்காக என்னைச் சிலர் தாக்கினார்கள். இந்தப் போக்கு வருந்தத் தக்கது.

இன்று காலை ஸர். ஸி. வி. ராமன் மண்டபத்தில் கைத்தொழில் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் இக் கருத்துக்களைத் திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார்.

* * *

கல்லூரிகளில் பி. யு. ஸி. வகுப்புகளிலும் இலவசக் கல்வி அளிக்க யோசனை

சென்னை முதல் அமைச்சர் தகவல்

சென்னை, அக். 31—கல்லூரிகளில் பி. யு. ஸி. வகுப்பு படிப்பை இலவசமாக்குவதுபற்றி ராஜ்ய சர்க்கார் பரிசிலனை செய்துகொண்டிருப்பதாக முதல்

மந்திரி திரு. பக்தவத்சலம் இன்று நிருபர்களிடம் கூறினார்.

இப்போது எஸ். எஸ். எல். ஸி. வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

இதை விரிவாகப் பரிசீலனை செய்து தனக்கு அறிக்கை அனுப்பும்படி கல்வி இலாகாவைக் கேட்டிருப்பதாக முதல் மந்திரி தெரிவித்தார்.

இந்த யோசனையை நிறைவேற்றுவதாயிருந்தால் சர்க்காருக்கு ஆகக் கூடிய செலவைப் பற்றி முதல் மந்திரி விவரம் கேட்டிருக்கிறார்.

சர்வகலாசாலை கல்வி பூராவையுமே இலவசமாக்குவதுதான் இறுதி நோக்கமென்றும் அதற்கு இது முதல் படியாயிருக்கலாமென்றும் சொன்னார்.

* * *

புது பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள் உதயம்

சண்டிகர், அக். 31-புது பஞ்சாப் ஹரியானா ராஜ்யங்கள் இன்று ஏற்படுகின்றன. பஞ்சாப் மொழிவாரி அடிப்படையில் தனி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இரு மாநிலங்களுக்கும் சண்டிகர் நகரே கூட்டுத் தலைநகராக இருக்கும். இரு மாநிலங்களின் மொத்த ஜனத் தொகை 2 கோடி.

இரு புது மாநிலங்கள் ஏற்பட்டுள்ளதால் நாட்டிலுள்ள மாநிலங்கள் எண்ணிக்கை 17 ஆக உயருகிறது.

புது பஞ்சாப் மாநிலம் 11 ஜில்லாக்களைக் கொண்டதாக இருக்கும். ஜனத் தொகை 111·36 லட்சம். பரப்பளவு 19404 சதுர மைல்.

7. ஜில்லாக்களைக் கொண்ட ஹரியானா மாநிலம் ஜனத் தொகை 75 லட்சம். பரப்பளவு 16945 சதுர மைல்.

பஞ்சாப் இவ்வாறு இருமாநிலங்களாகப் பிரிக்கப்படுவதால் இமாசலப் பிரதேசம் பஞ்சாபின் சிறு மலைப் பகுதிகளைக் கொண்டதாக இருக்கும்.

சண்டிகார் இரு மாநிலங்களின் கூட்டுத் தலைநகராக இருக்கும். 1.2 லட்சம் ஜனத்தொகையுள்ள இந்த நகரம் யூனியன் பிரதேசமாக இருந்து வரும். இதன் நிர்வாகம் உள்துறை அமைச்சகத்தின் நேரடிப் பொறுப்பில் பிரதம கமிஷனரிடம் இருக்கும்.

ஹைகோர்ட்டும் சர்வகலாசாலையும் பொதுவாகவே இருந்து வரும்.

சண்டிகரில் உள்ள 9 மாடி செகரடேரியட் கட்டிடத்தில் தான் இரு மாநிலங்களின் சர்க்கார் அலுவலகங்களும் இருக்கும்.

12 ஆண்டு செகண்டரிக் கல்வி: கமிஷன் சிபார்சை முதல்வர், துணைவேந்தர் ஏற்கவில்லை.

இப்போதைய 11 வருஷ ஏற்பாடே நீடிக்க வேண்டும் எனக் கருத்து.

இலவசக் கல்வியின் விளைவுகள் பற்றித் துணைவேந்தர் எச்சரிக்கை

சென்னை, அக். 31—செகண்டரி கல்வி 12 வருடங்களுக்கு

நீடிக்க வேண்டும் என்று கல்விக் கமிஷன் செய்துள்ள சிபாரிசை சென்னை முதல் மந்திரியோ, சர்வகலாசாலை உப-அத்யட்சகரோ ஏற்றுக் கொள்ளவில்லை.

இப்போது சென்னை மாநிலத்தில் அமலில் உள்ள 11 வருஷ செகண்டரி கல்வி ஏற்பாடே நீடிக்க வேண்டுமென்று அவர்கள் கருதுகின்றனர்.

கல்விக் கமிஷனின் சிபாரிசுகளைப் பற்றி விவாதிப்பதற்காக இன்று சர்வகலா சாலை கட்டடத்தில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையில், முதல் வரும், உப-அத்யட்சகரும் மேற்கண்ட தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இப்போதுள்ள ஏற்பாட்டை மாற்றுவதை நான் விரும்பவில்லை என்று முதல் மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

பத்து வருஷங்களுக்கு முன்பு நாம் பயிரிட்ட இந்தச் செடியின் வேர்களைப் பிடுங்குவது பெரிய விபரீதத்தில் முடியும் என்று உப-அத்யட்சகர் டாக்டர் ஏ.எல். முதலியார் எச்சரித்தார்.

11 வருஷ செகண்டரி கல்வி ஏற்பாடு தீர ஆலோசனை செய்த பிறகே அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது என்று திரு. பக்தவத்சலம் கூறினார்.

பத்து வருஷ செகண்டரி கல்வி, பிறகு ஒரு வருஷ உயர்தர செகண்டரி கல்வி என்ற ஒரு ஏற்பாடு 1957-ல் முயற்சி செய்யப்பட்டது. ஆனால், சர்க்கார், அந்த யோசனையைக் கைவிட்டு விட்டு, 11 வருஷ செகண்டரி கல்வி முறையை முடிவு செய்தார்கள். அதில் எட்டு வருஷம் ஆரம்பக் கல்வி கட்டம், மூன்று வருஷம் செகண்டரி கல்வி கட்டம். பத்தாவது வகுப்புக்கு வரும்போது மாணவர்கள் பொதுக் கல்வியையோ அல்லது தொழிற் கல்விக்கு உதவக்கூடிய பாடங்களையோ எடுத்துக்கொள்ளலாமென்று அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். விரிவான முறையில் ஆசிரியர்களைக் கலந்தாலோசித்த பிறகே இந்த முடிவு செய்யப்பட்டது. ஆகையால், இப்போது அந்த ஏற்பாட்டை மாற்ற வேண்டுமா? அப்படியானால், எந்த அளவுக்குக் கமிஷனின் சிபாரிசுகளை ஒப்புக்கொள்ளலாம் என்று பரிசீலிக்க வேண்டும்.

ஆசிரியர்களின் சம்பள விகிதங்களைப் பற்றியும், கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. அந்த விகிதங்கள் இப்போதிருப்பதை விட மிக உயர்வாக இருக்கின்றன. ஆனால், சம்பளங்களை உயர்த்துவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு உதவி கிடைக்கும்? ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தினால் மற்ற சிப்பந்திகளும் உயர்வு கோருவார்களா? இவற்றையெல்லாம் கவனித்த பிறகுதான் மேற்கொண்டு சம்பள உயர்வளிப்பது சாத்தியமாயிருக்கும் என்று திரு. பக்தவத்சலம் கூறினார்.

தமது சிபாரிசுகளை உருவாக்கும்போது, கல்விக் கமிஷன் இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பதைக் கவனிக்கவில்லை என்று டாக்டர் ஏ. எல். முதலியார் கூறினார். இந்தச் சிபாரிசுகளில் சிலவற்றை ஏற்றுக்

கொண்டு அமல் நடத்தினால், சென்னை மாநிலத்தில் கல்வி தடைப் படுமேயொழிய அபி விருத்தியடையாது.

ஏற்கெனவே உள்ள நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொள்ளுவதுதான் இன்று நமது முக்கிய தேவையாகும். ஏற்கெனவே உள்ள பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள், ஆராய்ச்சி வசதிகள், ஆசிரியர் பயிற்சி முதலிய வைகளைச் செய்தாக வேண்டும்.

பி. யு. சி. வகுப்பை பள்ளிக் கூடங்களுடன் இணைத்துவிட வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்படுகிறது. இது சாத்தியமாயிருக்குமானால், முழு மனதுடன் நான் வரவேற்கத் தயாராயிருக்கிறேன். ஆனால், ஏற்கெனவே, பள்ளிக்கூடங்களில் நெரிசல் அதிகமாயிருக்கிறது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் போதிய அளவுக்கு இல்லை. இந்த நிலைமையில் இந்த யோசனை அசாத்தியமானதென்றே தோன்றுகிறது என்று டாக்டர் முதலியார் கூறினார்.

செகண்டரி கல்வியை இலவசமாக்கியதற்கு டாக்டர் முதலியார் சர்க்காரைப் பாராட்டினார்.

ஆனாலும், இதனால் சில பிரச்னைகளும் எழுந்திருக்கின்றன. கல்வியின் தரத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் இப்பிரச்னைகள் மிக முக்கியமானவையாகும். சரியான தரமுள்ள ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாயிருக்கிறது. வருபவர்களும் சர்க்கார் உத்தியோகங்களுக்குப் போய் விடுகிறார்கள். நாட்டின் நிர்வாகத்தைப் போலவே கல்விக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலொழிய அதிக அபிவிருத்தி ஏற்பட முடியாது. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், இருக்க வேண்டிய சூழ்நிலையும் இராது என்றார்.

ஆசிரியர்கள், மாணவர்களுடன் இன்னும் அதிகமாகத் தொடர்பு வைத்துக்கொண்டு மாணவர்களின் ஆசாபங்க உணர்ச்சியைப் போக்க உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

1685-ஆம் ஆண்டில்தான் அமெரிக்காவில் அரிசிச் சாகுபடி புகுந்தது. ஆயினும் இன்று அங்கு அது அமோக அளவில் பயிராவதுடன் கி. மு. 1000-ஆவது ஆண்டிலேயே அரிசிச் சாகுபடியை அறிந்திருந்த இந்தியாவுக்கு நிறைய ஏற்றுமதியும் செய்கிறது! 1957-58இல் ஹெக்டேருக்கு 790 கிலோவாகஇருந்த நம் சராசரி விளைச்சல் 1964-65-இல் 1090 கிலோ ஆகியிருப்பினும் உலகச் சராசரிக் கணக்கில் இது சுமார் 85 சத விகிதமேயாகும். ஜப்பான், அமெரிக்காவின் சராசரி விளைச்சலிலோ மூன்றிலொரு பங்கே.

ஜப்பானும் அமெரிக்காவும் அபார அபிவிருத்தி அடைந்திருப்பதற்கு உர உபயோகமே பெரிதும் காரணம். உலகச் சராசரியில் பத்திலொரு பங்கு உரத்தையே இந்தியா உபயோகிக்கிறது. ஜப்பானுடன் ஒப்பிட்டாலோ நூற்றிலொரு பங்கே யாகும்.

—"உர வழி"

இந்தியாவின் மிகப் பெரிய தானியக் கப்பல்

சென்னை, அக். 24—கனடாவிலிருந்து கோதுமை ஏற்றி வந்துள்ள "சென்னை ஊக்கம்" என்ற கப்பலை நிருபர்கள் இன்று பார்வையிட்டனர். "சவுத் இந்தியா ஷிப்பிங் கார்ப்பரேஷன் லிமிடெட்" நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பலை "மிதக்கும் தானியக் களஞ்சியக் கோட்டை" என்று வர்ணிப்பது மிகப் பொருத்தமாயிருக்கும்.

இதில் அதிகபட்சம் 42,530 டன் தானியத்தை ஏற்றிவர முடியும். இந்தியாவிலேயே மிகப் பெரிய சரக்குக் கப்பல் இது. உலகில் மிகப் பெரிய சரக்குக் கப்பல்கள் வெகு சிலவற்றுள் ஒன்று என்று சொல்லலாம்.

இப்போது இது 36,000 டன் கோதுமை ஏற்றி வந்திருக்கிறது.

இந்தக் கப்பல் கம்பெனியின் நிர்வாக டைரக்டர் திரு டி. எஸ். நாராயணசாமி இன்று நிருபர்களிடம் இந்தக் கப்பலைப் பற்றி விளக்குகையில், இதன் விலை ரூ. 4·27 கோடி என்றார். இம்மாதிரி 5 கப்பல்களை இந்தக் கம்பெனிக்காக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த 2 ஸ்தாபனங்கள் தயாரித்துத் தந்திருக்கின்றன. மேற்கு ஜெர்மன் சர்க்கார் அளித்துள்ள ரூ. 22 கோடி கடனுதவியைக் கொண்டு இவை கட்டப்பட்டன என்றார். இந்தக் கடன் 20 தவணைகளில் அடைக்கப்படும்.

மற்ற 4 கப்பல்களின் பெயர்கள் வருமாறு:

சென்னை ஜெயம், சென்னை பெருமை, சென்னை சாதனை, சென்னை செல்வம்.

இதில் சென்னை செல்வம் என்ற கப்பல் அடுத்த நவம்பரில் டெலிவரி கிடைக்கும்.

"சென்னை ஊக்கம்" கப்பல் முழு அளவு பளுவுடன் சென்னை துறைமுகத்துக்குள் வர முடியவில்லை என்று இந்தக் கப்பல் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் திரு. எப். ஜி. தஸ்தூர் கூறினார். அதற்கு, துறைமுகத்துக்குள் தண்ணீரின் ஆழம் போதவில்லை என்றார். 37 அடி ஆழமிருந்தால்தான் இந்தக் கப்பல் துறைமுகத்துக்குள் வரமுடியும். ஆனால் சென்னை துறைமுகத்தில் தண்ணீரின் ஆழம் 31 அடிதான்.

இந்தக் கப்பலில் 6 நவீனமாக மின்சார "கிரேன்கள்" உள்ளன. அவற்றின் உதவியால் தினசரி 15,000 டன் இறக்குமதி செய்ய முடியும்.

அக்டோபர் 20-ந் தேதியிலிருந்து இதுவரை மொத்தம்

சுமார் 16,000 டன் கோதுமை இறக்கப்பட்டிருக்கிறது. மொத்த சரக்கையும் இறக்க 12 தினங்கள் பிடிக்கும்.

இங்குக் கோதுமையை இறக்கிய பிறகு இந்தக் கப்பல் கோவாவுக்குப் போய், அங்கிருந்து ஜப்பானுக்கு இரும்புக் கனி ஏற்றிச் செல்லும்.

இந்தக் கப்பல் கம்பெனியின் வர்த்தக மானேஜர் காப்டன் ஜி. பி. எஸ். பல்லா, இந்தக் கப்பலிலிருந்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் 4,500 டன் தானியம் இறக்கப்பட்டிருக்கிறது என்றார். இதுவரை, சென்னை துறைமுகத்தில் ஒரே நாளில் இவ்வளவு இறக்குமதியானதில்லை என்றார்.

இந்தக் கப்பலின் காப்டன் திரு என். எஸ். ராஜகோபாலன் நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்தவர். அவர் நிருபர்களை அழைத்துக் கொண்டுபோய்க் கப்பலைச் சுற்றிக் காட்டினார். இந்தக் கப்பலில் மிக நவீனரக ராடார் சாதனங்களும் ஒலிபரப்புச் சாதனங்களும், கப்பலைச் செலுத்துவதற்கான சாதனங்களும் உள்ளதாக அவர் சொன்னார்.

ஏதேனும் எதிர்பாராத காரணங்களால் மாலுமி செயலற்றுப் போகும் நிலைமையில், கப்பலைச் செலுத்தும் வேலையை மேற்கொண்டு, பிற சிப்பந்திகளுக்கு எச்சரிக்கை தரும் சாதனமும் இதில் பொருத்தப்பட்டிருக்கிறது.

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மின்சார விசையை உற்பத்தி செய்ய 3 டீசல் இன்ஜின்கள் உள்ளன என்றும், இவை நின்றுவிட்டால் தானாகவே இயங்கத் தொடங்கி மின்சார உற்பத்தி செய்யும் விசேஷ இன்ஜின் ஒன்றும் உள்ளது என்றும் திரு ராஜகோபாலன் சொன்னார். பழையபடி மீண்டும் மின்சார உற்பத்தி ஆரம்பமானதும், இந்த விசேஷ என்ஜின் தானாகவே நின்றுவிடுமாம்.

தினசரி கடல் நீரிலிருந்து 21 டன் குடி நீர் தயாரிக்கும் யந்திர சாதனம் ஒன்று இந்தக் கப்பலில் இருக்கிறது.

தலா 75 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய அவசர கால யந்திரப் படகுகள் இரண்டு இதில் உள்ளன.

இந்தக் கப்பலில் மொத்தம் 58 சிப்பந்திகளும், அதிகாரிகளும் உள்ளனர். இருப்பினும் 72 பேர் தங்க அறைகள் உள்ளன. இந்த 72 அறைகளும் ஏர்கண்டிஷன் வசதியுடன் கூடியவை.

விளையாட்டு வசதி, ரேடியோ போன்ற பொழுது போக்கு வசதிகள் முதலியனவும் உள்ளன.

விரைவில் டெலிவிஷன் செட்டுகளுக்கும், சினிமாப் படக் காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று கேப்டன் கூறினார்.

—0—

புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி. B.A., L.T.
(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

நீர்மூழ்கிக் கப்பல்

கணிசமான அளவுக்குக் கடல் வாணிகத்தைச் சார்ந்துள்ளவையும், பகைவர்களின் தாக்குதலிலிருந்து பாதுகாக்க வேண்டிய கடற்கரையைக் கொண்டவையுமான ஒவ்வொரு நாடும் தத்தம் கடற்பகுதிகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமான தாகும். இந்த வகைப் பாதுகாப்புக்குப் பல வகையான போர்க் கப்பல்கள் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றுடன் கடல்மீது பறக்கும் கடற்படை விமானங்களும் இவ் வகையில் உபயோகிக்கப்படுகின்றன. கடலின் மேற்பரப்பிலும் கடலின் வாணப் பரப்பிலும் விழிப்புடன் இருந்து கடற் பகுதிகளைப் பாதுகாக்கும் இவற்றையெல்லாம் தவிர்த்து, கடலுக்குள் மூழ்கியிருந்து, பகைக் கப்பல்களைத் தாக்கி அழுத்தும், மற்றொரு வகைக் கப்பல்களும் உண்டு. இவைதாம் "நீர் மூழ்கிக் கப்பல்கள்" இவை ஆங்கிலத்தில் "சப்மரைன்" என்று அழைக்கப் படுகின்றன.

இந்த நீர்மூழ்கிக் கப்பல்களின் அளவற்ற சக்தியும், சாதுரியமும் இரண்டு உலகப் போர்களில் தெளிவாயின. ஜெர்மன் நீர் மூழ்கிக்கப்பல்கள் இந்த உலகப் போர்களில் நேச நாடுகளின் ஏராளமான கப்பல்களை அழித்தொழித்தன. உணவும், மனிதர்களும் யுத்தத் தளவாடங்களும் கொண்டு சென்ற 4,500க்கும் மேற்பட்ட வியாபாரக் கப்பல்களை ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்துக் கடல் போக்குவரத்தையே ஸ்தம்பிக்க வைத்தன; ஆபிரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் யுத்தப் போக்கைப் பெரிதும் இணற வைத்தன. அன்று முதல், "நீர் மூழ்கிக் கப்பல்கள்" எனப்படும் இவ் வகைப் போர்க் கப்பல்களின் அவசியத் தன்மை உலகெங்கும் ஆட்கொள்ள ஆரம்பித்தது.

பகைவர்கள் கடற்படைகளையும் வியாபாரக் கப்பல்களையும் அழித்தல், பகைவர் துறைமுகங்களையும் கப்பல் வழிப்பாதைகளையும் அடைக்தல், பகைவர்களின் கடற்பகுதிகளை ரகசிய வேவு பார்த்தல், மற்றும் பகை நீர் மூழ்கிக் கப்பல்களை அழித்தொழித்தல் ஆகியவை நீர் மூழ்கிக் கப்பல்கள் புரியும் முக்கியமான பணிகளாகும். இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் 'காபந்து நீர்மூழ்கிக் கப்பல்கள்', "முன் எச்சரிக்கையாக மறித்து

ஓட்டும்நீர் மூழ்கிக் கப்பல்கள்', 'வேட்டையாடிக் கொல்லும் நீர் மூழ்கிக் கப்பல்கள்' 'ஏவுகணை வீசும் நீர் மூழ்கிக் கப்பல்கள்' என்று அவ்வவற்றின் முக்கியச் செயல்களுக்கு ஏற்பப் பல வகையினவாக உள்ளன.

நீர் மூழ்கிக் கப்பல்கள் கடலின் அடியில் 500 அடிக்கும் கீழே, பல வாரங்கள் இருக்கக் கூடியவையாகும். இரண்டு மாதங்கள் வரையில் இருப்பது வழக்கம். ஒரு ரயில்வே கோச் அளவுக்கு இருக்கக்கூடிய அதில் பல இயந்திரங்களும் கருவிகளும் இடம் பெறவேண்டும். இவற்றுக்கான இடம்போக மீதியுள்ள இடத்தில் 60 முதல் 70 வரையிலான பலவகைச் செயல்களைச் செய்யும் அதிகாரிகள் இருக்க வேண்டும். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் இடித்து நெருக்கிக் கொண்டுதான் அதில் இருக்க முடியும். ஒரு வேளைதான் சூடான உணவு கிடைக்கும். ஈரக் கசிவுச் சூழ்நிலை இருந்து கொண்டுதான் இருக்கும். அநேகமாக குளிப்பதற்கு வசதியே கிடையாது. சுவாசிக்கும் காற்று ஏதோ ஒரு விதமான கந்தமுடையதாக இருக்கும்.

இப்படி எத்தனையோ கஷ்டங்கள். இத்தனை கஷ்டங்களுடன் இரண்டு மாதங்கள் வரையில் இருக்க வேண்டியிருக்குமென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

நீர்மூழ்கிக் கப்பல்களில் இப்பொழுது அமைக்கப்பட்டுள்ள "ஹைட்ரோபோன்" எனப்படும் ஒருவகை ஒலி வாங்கி, ஐம்பது அல்லது அறுபது மைல்களுக்கு அப்பால் வரும் மற்றொரு கப்பலின் இயந்திர ஓசையையும் இயங்கும் ஓசையையும் அறிவிக்க வல்லது. அதற்கு ஏற்றபடி நீர் மூழ்கிக் கப்பல்கள் உஷாராகி விடும். பகைக் கப்பல் இருக்கும் இலக்கு இவ்வகையில் தெரிந்து விட்டால், நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து "டார்ப்பெடோ" என்னும் வெடி குண்டு அதைத் தாக்க ஏவிவிடப்படும். இந்த "டார்ப்பெடோ" உண்மையில் ஒரு சிறு நீர் மூழ்கிக் கப்பல் போன்றுதான் இருக்கும். ஏவி விடப்பட்டதும் இது நீரைக் கிழித்துக் கொண்டு 'விர்' ரென்று உள்ளுக்குள்ளே பாய்ந்து சென்று, பகை இலக்கைத் தாக்கும். ஒரே தாக்குதலில் பகைக் கப்பலைத் தகர்த்து மூழ்கடிக்க வல்லது இது!

இவ்வளவு பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட நீர் மூழ்கிக் கப்பல்களைப் பற்றியும், அவற்றின் அவசியத்தைப் பற்றியும் இந்திய கடற்படை காப்டன் பி. கே. டாங்க் அகில இந்திய ரேடியோவில் பேசிய பேச்சின் சாரம் இது.

—"தினமணி சுடர்"

தமிழ் நாட்டில் இன்றைய கல்வி நிலை

கல்வி டைரக்டர் ரேடியோ உரை

சென்னை, நவ. 22—தமிழ் நாட்டின் இன்றைய கல்வி நிலை பற்றி, செகண்டரி கல்வி டைரக்டர் திரு. எம். டி. பால் சமீபத்தில் ரேடியோவில் நிகழ்த்திய உரையொன்றின் சுருக்கத்தை இங்கே தருகிறோம்.

தமிழ் நாட்டில் இதுவரை கண்டிராத அளவில் கல்வி வளர்ச்சியை நாம் அடைந்துள்ளோம். புதிய கல்வி நிலையங்களின் எண்ணிக்கையையும், அவற்றில் சேர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும் கருதும் பொழுது யாருக்குமே பெரும் வியப்பை யூட்டும். கடந்த ஆண்டில் 40 கோடி ரூபாய்க்கு மேல் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. மக்களுக்குக் கல்வி எவ்வளவு அவசியமென்பதை நன்குணர்ந்தே அரசினரும் இத்தகைய ஏற்பாடு செய்துள்ளனர். தமிழ் நாட்டில் 300 மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு துவக்கப் பள்ளி உண்டு.

6 முதல் 11 வயதுவரையுள்ள மாணவர்களின் கட்டாய இலவசக் கல்வியின் விளைவென்ன? 46-47ம் ஆண்டில் 6-11 வயதுக் குழந்தைகளுக்கான துவக்கப் பள்ளிகள் சுமார் 15 ஆயிரம். 65-66இல் அப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 500. இது இரட்டிப்படைந்துள்ளது. 46-47-ல் பயின்ற சிறுவர்கள் சுமார் 10½ லட்சம். 65-66-ல் அவர்களின் எண்ணிக்கை சுமார் 29 லட்சம்.

ஏறக்குறைய மூன்று மடங்காகியுள்ளது. இந்த 5 ஆண்டு திட்ட இறுதியில் வயதுள்ள எல்லா மாணவர்களும் பள்ளியில் சேர்ந்து விடுவர்.

கிட்டத்தட்ட 16 லட்சம் மாணவர்கள் தினந்தோறும் நம் பள்ளிகளில் இலவச மதிய உணவு அருந்துகின்றனர். இத் திட்டத்தில் பொது மக்களும், அரசாங்கமும், பஞ்சாயத்துக்களும் ஒத்துழைப்பளித்து வருகின்றனர். கேர் என்ற அமெரிக்க நிர்வாகம் முன் வந்து மதிய உணவுண்ணும் நம் மாணவர்களுக்குப்பால்பொடி, கோதுமை, சோளம், எண்ணெய் முதலிய பொருள்களை அளித்து உதவுகிறது. இலவசமாகச் சீருடையளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு பள்ளிச் சிறுவர்களின் வருகையை அதிகரிக்க உதவுகிறது. இவ்வருடம் முதல் மூன்று வகுப்புக்களில் மதிய உணவு அருந்தும் எல்லா மாணவ, மாணவிகளுக்கும் நம் அரசினர் இலவசப் புத்தகமும், பலகையும் கொடுத்து உதவியுள்ளனர்.

பள்ளியின் இட வசதியின்மை, கற்பித்தலுக்கு வேண்டிய கருவிகளின்மை போன்ற குறைகளை நீக்க மக்களின் உதவியை நாடிப் பெறுகிலே பள்ளிச் சீரமைப்புத்

(58ஆம் பக்கம் பார்க்க)

75 ஆண்டுகளுக்கு முன் இதிலிருந்து நம்மை ஒருவர் காப்பாற்றினார்! எப்படி? யாரவர்? படியுங்கள்!

'செக்' பிறந்த கதை!

[சு. இராமசாமி, எம்.ஏ.,]

பட்டப்பகல்; நடுநிசி; அதிகாலை; அந்தி மாலை; நல்லபாதை; கொடிய காடு; வசதியான பயணம்; கடுமையான பிரயாணம்; கார்; பஸ்; இரயில்; விமானம்; சைக்கிள்; கால்நடை இப்படிப் பயணம் மேற்கொள்பவர்களை அன்றாடம் பார்க்கிறீர்கள். அவர்கள் உடன் எடுத்துச் செல்வது என்ன? பிள்ளைச் செல்வங்களுக்குத் தின்பண்டங்கள்; வேண்டியவர்களுக்கு வேண்டிய பொருள்கள்; வழிப் பயணத்துக்கு உணவுப் பொட்டலங்கள்; வழிப்பயணத்தை மறக்க அடிக்கும் புத்தகங்கள். இப்படிப் பலப்பல.

இவைகள் தானா? வேறு ஒன்றுமே கிடையாதா? ஏன் இல்லை; உடன் எடுத்துச் செல்கிறார்களே 'பணம்' அதுவல்லவா, இவை எல்லாவற்றையும் விட முக்கியம்!

அந்தப் பணத்தை அவர்கள் எடுத்துச் செல்லும் பாங்கினைக் கண்டதுண்டா? அதில் அவரவர்கள் குணாதிசயங்களையே காணலாமே! சட்டைப்பையில், காகித மடிப்பில், மடியில், கைச்சட்டை மடிப்பில், இன்னும் சிலர் கைகளில், பெட்டிகளில், இடுப்பிலுள்ள பெரிய பெல்ட்டுகளில் இப்படி ஒவ்வொருவரது வசதி, சாமர்த்தியம் ஆகியவற்றின் அடிப்படையில் பணம் ஆங்காங்கே பாதுகாக்கப்படும்.

வழிப் பயணத்தில் இப்படிப் பணத்தைப் பாதுகாப்பதில் மட்டுமே பலவகை இருக்கிறது என நினைக்கிறீர்கள்; அதைத் தவிர, மறதி, அசிரத்தை, அஜாக்கிரதை ஆகியவற்றின் காரணமாகப் பறி கொடுத்து நிற்பதிலும் பலவகை உண்டு! தூங்கும்போது; ஓடி வாகனங்களைப் பிடிக்கும்போது; சில்லறை எடுக்கும் போது; இருந்த பணத்தை முழுமையாகத் தொலைத்துவிட்டு நிற்பது சிறியவர்களுக்கு மட்டுமன்று; பெரியவர்கள்வரை காணும் ஒரு நிலை தானே!

கட்டை வண்டிதான் கதி என்றிருந்த காலத்தில் இந்த நிலை இருந்திருந்தால் 'சரிதான்' என ஒப்பலாம்; ஆனால், டெலிவிஷனில் பாங்கு வியாபாரம்நடத்தும் இக்காலத்திலும் இந்த நிலை இருக்கிறது என்பதைத்தான் ஏற்க முடியவில்லை.

'பணம்' தேவையைப் பூர்த்தி செய்ய உதவும் வழக்கிலுள்ள ஒரு சாதனம் என்ற உண்மையை மறந்து பணத்தை மனத்தோடு பொருத்தி உயிரனைய உரிமை

யாக்கி விடுவதால்தான் பலர் அதை உடலோடு பிணைத்துக் கொண்டிருக்கவே விழைகின்றனர்.

—எனவேதான் பாதைப் பயணம், நேரம், வசதி இவையெல்லாம் மறந்து பிரயாணத்திலும் எப்பாடுபட்டேனும் உடன் எடுத்துச் செல்கின்றனர்.

இன்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர்வரை இந்த நிலை இருந்திருந்தால் அது சரி. ஆனால், இப்போது அது இருக்கத் தேவையில்லை.

பயணிகளுக்கு ஒரு மாபெரும் வசதியாக பாங்குத்துறை அளித்திருக்கும் பிரயாணிகள் செக் (Travellers' Cheque) நடைமுறைக்கு வந்து சரியாக முக்கால் நூற்றாண்டு ஆகிறது.

1891 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 7-ந்தேதி அமெரிக்காவில் மார்சிலஸ் எப். பெர்ரி என்பவரால் தான் 'பிரயாணிகள் செக்' கண்டுபிடிக்கப்பட்டது.

திருச்சியிலிருந்து சென்னைக்கு ஒரு லட்ச ரூபாயை எடுத்துக் கொண்டு வரவேண்டுமென ஒருவர் விரும்பினால் அவர் அவ்வளவு ரூபாய்களையும் உடன் கொண்டு வரத் தேவையில்லை. திருச்சியில் உள்ள பாங்குஒன்றில் அப்பணத்தைக் கட்டினால் அந்த 'பாங்க்' தனது சென்னைக் கிளைக்குப் பணத்தைக் கட்டுபவரின் பெயருக்கு ஒரு செக் தரும். பணம் கட்டும் இடத்தில் கையெழுத்திடும் அவரே பணம் பெறவேண்டிய இடமான சென்னைக்கும் வந்து கையெழுத்திட்டால்தான் பணம் கிடைக்கும்.

—ஒரு இலட்சம் ரூபாய்களை உடன் எடுத்துக்கொண்டு உறக்கம் பிடிக்காமல் தொலைந்து விடுமோ—தூங்கும்போது யாரேனும் அபகரித்து விடுவார்களோ என்பன போன்ற பயமெல்லாம் இல்லாமல் அதற்குரியஒரே ஒரு 'செக்'கை மட்டும சட்டைப் பைக்குள் போட்டுத் தைரியமாக எடுத்து வரலாம். அவருக்கு அது ஒரு இலட்ச ரூபாய்க்கான பிரயாணிகள் செக்; மற்றையோருக்குப் பொருளில்லாத துண்டுக் காகிதம்.

இதை முதன் முதலில் கண்டு பிடித்தவர் ஒரு பாங்கு ஊழியரே.

1890 ஆம் ஆண்டுக் காலத்தில் அமெரிக்கர்கள் ஐரோப்பா எங்கணும் வியாபார நோக்கத்தினால் ஓயாமல் சுற்றி வந்தனர். அப்போது அவர்கள் தங்களுடன் பெரும் தொகைகளையும் எடுத்துச் செல்வது எல்லாவகையிலும் இன்னல் தரத்தக்கதாயிருப்பதை உணர்ந்தார்கள்.

இதில் "அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி" என்ற புகழ் பெற்ற பாங்கின் தலைவரான ஜேம்ஸ்பார்கோ என்பாரும ஒருவர். அதிகத் தொகைகளை நெடுந்தூரம் எடுத்துக்கொண்டு போய் வருவதில் உள்ள சிரமங்களை உணர்ந்த அவர் உடனே இதற்கு ஒரு வழி காணவேண்டும்' என முயற்சித்தார்.

அப்போதுதான் மெர்சிலஸ் பெர்ரி அவரது பாங்கில் ஊழியராகச் சேர்ந்தார். தலைவரது விருப்பத்தில் தீவிரக் கவனம் செலுத்தினார் பெர்ரி.

அதன் விளைவாகப் பிறந்ததுதான் பிரயாணிகள் செக்.

இம்முறை உடன் உலகின் பல நாடுகளுக்கும் பரவியது. 19-ம் நூற்றாண்டு முடிவதற்குள் பிரயாணிகள் செக் பயணம் செய்வோரின் முக்கிய பாதுகாவலராக மாறிவிட்டது.

புதிய கண்டுபிடிப்பின் புகழ் வளர வளர அதைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கினர் சிலர். இதைக் கண்டு பிடித்தது முதன் முதலாகவே பெர்ரிதானா அல்லது முன்னமேயே இது புழக்கத்தில் இருந்திருக்கிறதா என்ற ஆராய்ச்சியில் இறங்கினர் பலர். அதில் பத்திரிகையாளர்கள் முக்கியமானவர்கள்.

ரோமப் பேரரசு காலத்திலேயே பிரயாணிகள் செக் வழக்கில் இருந்தது என்றனர் சிலர்.

18ஆம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்து நாட்டவர் ஒருவரால்தான் இது முதன் முதல் கண்டு பிடிக்கப்பட்டது என்றும், இதற்கு ஆதாரமாக இங்கிலாந்தின் பிரயாண ஏஜன்ஸி நிறுவனங்கள் சிலவற்றின் விளம்பரங்களே தக்க சான்று எனவும் வாதிடுகின்றனர் மற்றும் சிலர்.

சீனா தான் இச்சாசனத்தை உலகுக்கு அறிமுகப் படுத்தியது என்றும் சிலர் கூறுகின்றனர்.

[இதையெல்லாம் மனத்தில் கொண்டு தமிழகத்தில்கூட அந்த நாளில் நாணயமுறை புழக்கத்தில் இருந்தபோது, இதுபோன்ற சாதனம் இருந்ததா எனத் திறமையுடையோர் அறிய முற்படலாம்].

இது ஒருபுறமிருக்க, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி பிரயாணிகள் செக் கண்டுபிடித்த பின்னர்தான் இது போன்ற சந்தேகங்கள், யூகங்களெல்லாம் தெரிவிக்கப் படுகின்றனவே ஒழிய, அதற்கு முன்னர் இது போன்ற வாதப் பிரதிவாதங்கள் ஏதும் இல்லை.

எனவேதான் இன்றும் தற்கால பாங்கு அலுவல் முறைகளில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி கண்டுபிடித்த பிரயாணிகள் செக் முறையே ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறது.

சென்ற ஆண்டில் அமெரிக்காவில் மட்டும் 7,637,000 வெளிநாட்டுப் பிரயாணிகள் வந்துசென்றிருக்கிறார்கள். சென்ற ஆண்டே வெளிநாடுகள் சுற்றிய அமெரிக்கப் பிரயாணிகள் எண்ணிக்கை 14,705,000 ஆகும். இந்த இரு தரப்பினரும் பயன்படுத்தியது பிரயாணிகள் செக் முறையைத்தான். அதன்மூலம் கையாண்ட பணத்தின் மதிப்பு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள்.

'பிரயாணிகள் செக்' பயணம் போகிறவர்களின் உற்ற நண்பன்!

"முத்தாரம்"

அம்பலவாணர் அறப் பொறுப்பு ஆவணம்

[Trust – Deed]

வாலாசாபாத் இந்துமத பாடசாலையின் உயிராய் விளங்குப வர்கள் 'அப்பா' அவர்கள். அந்த உயிர் எழுதிய இந்த அறப் பொறுப்பு ஆவணம் எல்லோரும் படிக்க வேண்டிய இலக்கியம்.

1. தோற்றுவாய்:

1963 (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று) ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் நான்காம் நாள் வா. தியாகராய முதலியார் அவர்கள் மகன் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் உயிர் ஈட்டுறுதி நிறுவனத்தின் முகவர் (Agent, Life Insurance Corporation) செங்கற்பட்டு மாவட்டம் வாலாஜாபாத்தில் இருக்கும் 74 அகவையுள்ள வா. தி. மாசிலாமணி எழுதி வைத்த பொறுப்பு ஆவணம் (Trust Deed).

2. செயலாளர் அவர்களின் இளமை வாழ்வு:

முதலில் எனக்கு முன்னோர் சொத்து மிகக் கொஞ்சமே இருந்தது. அது(300) முந்நூறு ரூபாய் பெறும். அதுவன்றி வேறு சொத்து கிடையாது. அந்தச் சொத்தும் ஏற்கனவே இதில் காணும் நிலையங்களுக்கு அளிக்கப்பெற்றுவிட்டது.

இளமையிற் கல்வி கற்பதை நிறுத்திய பின்னர் நான் 1909 ஆம் ஆண்டில் 7 ரூபாய் திங்கள் ஊதியத்தில் வாலாஜாபாத் தோல் கடை ஒன்றில் எழுத்தராக அலுவல் பார்த்தேன்.

1910இல் வாலாஜாபாத் முகம்மதியத் தொடக்கப் பள்ளியில் ஆசிரியனாக இருந்தேன். அப்பொழுதும் எனக்குத் திங்கள் ஊதியம் ஏழாகவே இருந்தது.

1911ஆம் ஆண்டில் சைதாப்பேட்டையில் ஆசிரியப் பயிற்சி பெற்றேன்.

1912இல் ரூபாய் 12 திங்கள் ஊதியத்தில் சென்னை சுப்பிரமணியம் துவக்கப் பள்ளியில் ஆசிரியனாக இருந்தேன்.

1913ஆம் ஆண்டில் வாலாஜாபாத்திற்கு வந்து விட்டேன். இங்கு முகம்மதிய பாடசாலையில் இம்முறை தலைமை ஆசிரியனாக நான்கு ஆண்டுகள் திங்கள் ஊதியம் ரூபாய் 12இல் பதவி ஏற்றேன்.

பிறகு தாலுகா மாவட்ட ஆட்சிக் கழகங்களின் (Taluk Board, District Board) கீழ் ஒப்பந்த முகவராகவும் (Road Contract) வேலை செய்தேன்.

3. பாடசாலை தோன்றிய வரலாறு

அப்பொழுது 1915ஆம் ஆண்டில், நானும் மு. தா. கனனிவேலு செட்டியார் அவர்களும் சேர்ந்து 'மாணிக்கவாசகர்' சபை என ஒன்றை வாலாஜாபாத்தில் அமைத்தோம். சைவ நெறி உணர்வு சிறு பிள்ளைகள்பால் உண்டாகி வளர வேண்டும் என்பது எங்கள் ஆவல். அந்தப் பயனைச் சபையினால்மட்டும் பெற முடியவில்லை. பாடசாலை ஒன்று நடத்தினால்தான் அந்த ஆவல் நிறைவேறப் பெறலாம் என முடிவு செய்தோம். அந்த அவாவின்படி 1916ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் நான்காம் நாள் வியாழக் கிழமை வாலாஜாபாத்தில் தருமராஜா கோவில் மண்டபத்தில் நான்கு மாணவர்களோடு திங்கள் தோறும் ரூபாய் 5 செலவில் "இந்து மத பாடசாலை" என்ற பெயரால் இதிற்காணும் பள்ளிக்கூடம் துவக்கப் பெற்றது. அவ்வாண்டே பள்ளிக்கூடத்திற்கு அரசினர் ஒப்புதல் (Recognition) கிடைத்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசமாக உணவும், உறையுளும் அளிக்க இராமலிங்க அடிகளார் பெயரால் "வள்ளலார் மாணவர் இல்லம்" அமைக்கலாயிற்று. பிறகு பிற நிலையங்களும் ஏற்பட்டன. வாலாஜாபாத் இந்துமத பாடசாலையையும் அதனோடு தொடர்புள்ள பிற நிலையங்களையும், திருவருள் துணையால் அமைக்கும் வாய்ப்பு இவ்வாறு எனக்குக் கிட்டிற்று.

4. ரூ.1,50,000க்குப் பாடசாலை பேரில் உயிர் ஒப்பந்தம்

மேடி பாடசாலையையும், நிலையங்களையும் நல்லவண்ணம் வைத்துவரவும், ஒழுங்காக நடத்திவரவும் பல கட்டிடங்கள் கட்டப் பெற்றன. அவற்றைச் செவ்வனே பாதுகாத்து வர நிலையியல் இயங்கியல் உடைமைகளை விலைக்கு வாங்கி வைத்ததோடு, 1930ஆம் ஆண்டில் ஓரியண்டல் உயிர் ஈட்டுறுதிக் கழகத்தின் முகவராகப் (Oriental Life Insurance Company Agent) பணி

பாலிஸி எண்	தொகை	பாலிஸியின் வகை	முதல் பிரிவுப் பணம் கட்டிய நாள்	கடைசிப் பிரிமியப் பணம் கட்ட வேண்டிய நாள்
1151914	25000	Limited Payment Policy	27-11-46	27-11-81
1151915	25000	Endowment Assurance Policy	27-11-46	27-11-81
112749353	23000	Endowment Assurance Policy	28-12-62	28-12-81
1183199	1000	Endowment Assurance Policy	1-1-47	1-1-78

யேற்று, என் வேண்டுகோளுக்கு இணங்கி உயிர் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் செலுத்தி வரும் (Premium) பிரிவுப் பணத்தின் மீது வரும் தரகுத் (Commission) தொகைகளையும் அளித்து வரலானேன். எனது உயிரை ரூ. 1,50,000 நூற்றைம்பதாயிரத்துக்கு ஈட்டுறுதி செய்து கொண்டு அத்தொகையையும் அதற்கு அளிக்கப்பெற்றுச் சேர்ந்துவரும்நன்னர்த்(Bonus) தொகைகளையும் மேற்படி பாடசாலைக்கே மாற்ற முடியாதபடி எழுதிவைத்தேன்.

அத்தொகையில் (1,30,000) நூற்று முப்பதாயிரம் ரூபாயை முன்னமேயே பெற்று மாணவர் இல்லத்துக்கும், கைக்குத்தல் அரிசி தயாரிக்கும் பகுதிக்குச் செலவிடுவதற்கும் நெல் வாங்க முதலீடு செய்தேன்.

381769 எண்ணுள்ள ரூ. 20,000தொகைக்குரிய மற்றொரு பாலிசிக்கும் கட்டவேண்டிய பணம் முழுதும் 15-4-62 அன்றுடன் கட்டியாகிவிட்டது. அப்பாலிசியின் பணத்தையும் அதற்குச் சேரும் நன்னர்த் தொகையையும் என் காலத்திற்குப் பிறகே (Limited Payment Life Policy) வாங்கலாம். அத்தொகை இப்பாடசாலையே அடைய வேண்டும் என மாற்ற முடியாத வகையில் எழுதி வைத்துள்ளேன்.

5. ரூ 76,000க்குப் பாடசாலை பேரில் ஒப்பந்தம்

மேற்படி பாடசாலை வள்ளலார் இல்லத்தின் மேலாளராக இருந்துவரும் திரு. நா. ப. தணிகை அரசு அவர்களின் உயிரையும் ரூ. (76,000) எழுபத்தாறு ஆயிரத்திற்கு ஈட்டுறுதி செய்து வைத்து அதனால் கிடைக்கக் கூடிய ஒப்பந்தத் தொகையையும் அதற்கு அளிக்கப் பெற்றுச் சேர்ந்துவரும்நன்னர்த்(Bonus) தொகைகளையும மேற்படி பாடசாலைக்கே, மாற்ற முடியாத படி எழுதி வைக்கவும் ஏற்பாடு செய்தேன். அந்தப் பாலிசியின் விவரம்:—

6. குடும்ப நலத் திட்டத்தில் உயிர் ஒப்பந்தம்

என் மகன் குமாரசிவனுக்கும், என் மகளின் மகன் அம்பலத்தரசுக்கும் மேற்குறித்த கட்டடங்கள், பிற உடைமைகள், தொகைகள் முதலியவற்றில் யாதொரு உரிமையும் சிறிதும் இல்லை. ஆனால் ஒரியண்டல் உயிர் ஒப்பந்தக் கழகத்தில் குடும்ப நலத் திட்டம் (Family Benefit Scheme) என்கிற வகையில் மூன்று உயிர் ஒப்பந்த ஆவணங்களாக ரூ. 5000; 3000; 2000 ஆக மொத்தம் பத்தாயிரம் ரூபாய்களுக்கு உயிர் ஒப்பந்தம் செய்துள்ள தொகையையும் அவைகளின் மேல் ஆண்டு தோறும் கூடும் ஆதாயத்தையும் என் மகனும், என் மகள் மகனும் என் காலத்திற்குப் பிறகு அடையும்படி எழுதி வைத்துள்ளேன். அந்தப் பணத்தை வேறு யாருக்கும் எழுதி வைக்கக் கூடா

தென்று ஈட்டுறுதிச் சட்டம் (Insurance Act) இருப்பதால் அவர்களுக்கே எழுதி வைத்து விட்டேன்.

7. அம்பலவாணர் அறப் பொறுப்பு தோன்றிய வரலாறு

மேற்படி பாடசாலையையும் நிலையங்களையும் பாதுகாத்துப் புரந்து வரவும் அவற்றின் அன்றாடச் செயல்களை நடத்தி வரவும், 27-7-1944இல் ஒரு விருப்பாவணம்(will) எழுதி18-7-45 இல் வாலாஜாபாத் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் 3 ஆம் புத்தகம் 13-தொகுதி. 86-90 பக்கங்களில் 12 எண்ணுகப் பதிவு செய்தேன். பிறகு அதற்கு மாற்றாக 1952 இல் இந்துமத பாடசாலைக் குழு என்ற பெயரால் ஒரு குழுவினை அமைத்தேன். அது 1960 ஆம் ஆண்டின் 21 ஆம் சட்டமாகிய கழகங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் (Societies Registration Act) 30-12-1952 இல் ஒரு கழகமாகப் பதிவு செய்யப் பெற்றது. மேற்படி நிலையங்களை மேலும் நல்ல முறையில் திண்ணமான அடிப்படையில் அமைக்க வேண்டி, மேற்படி குழுவைக் கலைத்துவிடக் குழுவே தீர்மானம் செய்தது. எந்தக் கொள்கைகளோடு இந்நிலையங்கள் துவங்கப் பெற்று நடந்து வருகின்றனவோ அக்கொள்கைகள் எக்காலத்தும் நடந்து வரவும் கட்டடங்கள், விடுதிகள் முதலானவை எதற்காகக் கட்டப் பெற்றனவோ அதற்காக நல்லவண்ணமாக அவைகளை வைத்துப் புரந்துவரவும், முன்னிலும் திட்டமான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு ஒரு பொறுப்பு ஆவணம் எழுதி வைக்குமாறும், மேற்படி குழுவின் மேற்படி தீர்மானத்தின்படி நான் அதிகாரம் அளிக்கப் பெற்றேன்.

8. அறப் பொறுப்பிற்குரிய உடைமைகள்

அதன்படி நான் இந்தப் பொறுப்பு ஆவணத்தைத் திருவருள் துணைகொண்டு எழுதி வைக்கலானேன். இந்தப் பொறுப்பு "அம்பலவாணர் அறப் பொறுப்பு" என்னும் பெயரால் வழங்கப் பெறும். இது கல்வி அறப் பொறுப்பு ஆகும். இந்த ஆவணத்தின் இணைப்பில் விளக்கமாக விளக்கியுள்ள ஏறத்தாழ ரூ. 12,45,625/-(பன்னிரண்டு லட்சத்து நாற்பத்தைந்து ஆயிரத்து அறுநூற்று இருபத்தைந்து ரூபாய் மதிப்புள்ள பொருள்கள், அசையாப் பொருள்கள், பணங்கள் யாவும் இந்த அறப் பொறுப்பின் உடைமைகளாகும். என் காலத்திற்குப் பின் 1938ஆம் ஆண்டின் ஈட்டுறுதிச் சட்டம் (Insurance Act) 44வது பிரிவு 2வது உட்பிரிவின்படி நான் செய்திருக்கும் ஈட்டுறுதிப் பணிக்குக் கிடைத்து வரக்கூடிய தரகு (Hereditary Commission) ஊதியமும் இந்த அறப் பொறுப்பைச் சேர வேண்டியது. அவைகளைப் பின்வரும் செயல்களுக்குப் பயன்படுத்தி வர வேண்டியது.

9. அறப்பொறுப்பின் நோக்கங்கள்

(1) செங்கற்பட்டு மாவட்டம் வாலாஜாபாத்தில், முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையில் கொண்ட இந்துமத பாடசாலையைப் புரந்து நடத்தி வருதல்.

(2) நடுத்தரப் பள்ளிகள், கலைக் கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள், பிறவகைக் கல்வி நிலையங்கள் முதலியவற்றில் அவ்வக் கால நிலைக்கு ஏற்றவையாக இருக்கக்கூடியவற்றைத் துவக்கி மேற்படி அறப் பொறுப்பின் நோக்கங்களுக்கு ஒத்தமுறையில் நடத்துதல்.

(3) இன, சமய, சமூக வேறுபாடு பாராட்டாமல் ஏழை மாணவர்களுக்கே இந்நிறுவனத்தின் பண வசதிக்குத் தகுந்தவாறு ஓரளவு கட்டணம் விதித்தோ விதிக்காமலோ உணவும் உறையுளும் கல்வி வசதியும் அளித்தல்.

(4) கலைப் படிப்போடு கைத்திறன் வேலைகள், வேளாண்மை, அச்சுத் தொழில், புத்தகங் கட்டல், பொத்தான் செதுக்கல், உடை தைத்தல், பொம்மை செய்தல், நெசவு முதலிய பல சிறு கைத் தொழில்களில் பயிற்சி பெற வசதிகள் ஏற்பாடு செய்தல்.

(5) மேற்படி கல்வி நிலையங்களிற் பயிலும் மாணவர்கள் ஆட்சிமுறை, கவின் கலை, உடற் பயிற்சி, இவற்றின் திறமை பெறவும் நாட்டில் நல்ல குடிமக்களாவதற்கு வேண்டிய பயிற்சி பெறவும் ஏற்பாடு செய்தல்.

(6) நூலகங்கள், இலக்கியக் கழகங்கள், கைத் தொழில் நிலையங்கள், தொழிற் பட்டறைகள், ஆய்வகங்கள (Laboratories) போன்றவற்றைத் துவக்கி நடத்தி, அறிவியல், தொழில் நுட்ப அறிவு ஆகிய இவற்றை வளர்த்தல்.

(7) தமிழ் மொழி வளமுற்றுப் பல நலங்களுடன் திகழும் பொருட்டு, பிள்ளைகளுக்குத் தனித் தமிழ்ப் பற்று உண்டாக்குதல், தமிழ் ஆற்றலும், ஆர்வமும் பிள்ளைகளுக்கு உண்டாவதற்கு ஆவன யாவும் செய்தல், தமிழின் மேன்மையையும், பெருமையையும் உரிமையோடு காத்து அம்மொழி வளர்ந்து சிறப்பதற்குத் தகுதியான எல்லாத் தொண்டும் புரியும்படி பிள்ளைகளைப் பயிற்றுதல், இக்கொள்கைகளுக்கு அரணாகத் தமிழ்க் கல்வி முறையை எப்படி எப்படி அமைக்க வேண்டுமோ அப்படியப்படி யெல்லாம் செய்தல், தமிழ்க் கல்வி நிலையங்களை அமைத்து நடத்துதல்.

(8) நமது முன்னோர்களும் உலகத்து அறிஞர் பலரும் பல்லாண்டு பல்லாண்டாகச் சிந்தித்துக் கண்டுகொண்ட எல்லாம் வல்ல பெரும் பொருளின்பால், பிள்ளைகள் நம்பிக்கை வைத்து அப் பொருளை வாழ்க்கையில் உணர்வதற்கான தேவாரம், திருவாசகம், பிற திருமுறைகள்,

திருவருட்பா, திருவாய்மொழி முதலிய அருள் நூல்களைப் பற்றோடு படிக்கச் செய்தல், பாடச் செய்தல். இந்த அறப் பொறுப்பின் நிலையங்களின் பாடமுறையில் இப் பகுதிக்குத் தகுந்த சிறந்த இடம் கொடுத்தல், சமயப் பூசலுக்கு இடமில்லாமல் சமரச சன்மார்க்க சமயமாகிய சைவ சமயத்தை வளர்த்தல்.

(9) மேற்படி அறப் பொறுப்பின் கல்வி நிலையங்களில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு உணவு உறையுள் வசதிக்காக அமைந்திருக்கும் வள்ளலார் மாணவர் இல்லத்தைச் சீருடனும் சிறப்புடனும் நடத்தி வருவதோடு, இன சமயக் கொள்கை வேறுபாடில்லாமல் மாணவர்கள் உடன்பிறந்தவர்களைப் போல் பழக வகை செய்தல்.

(10) மேற்படி நிலையங்களின் பழைய மாணவர்களில் ஏழ்மையும் தகுதியும் உள்ளவர்களுக்குத் தக்க துறைகளில் மேல் படிப்புக்கான வழிவகை செய்து தருதல்.

(11) ஆதரவற்ற ஏழைப் பெண் பிள்ளைகளுக்குத் தனியாகப் பள்ளிகள் அமைத்தல். இவர்களுக்காக வாலாஜாபாத்தில் நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் துவங்கி நடத்தி வரும் மகளிர் இல்லத்தை நல்ல வண்ணம் வளர்த்துச் செவ்வனே நடத்தி வருதல்.

(12) அறப் பொறுப்பின் சொத்துக்களும் ஊதியமும் மேன் மேலும் வளரக்கூடிய வகையான பிற செயல்களை மேற்கொள்ளுதல்.

1952ஆம் ஆண்டு பதிவு செய்யப் பெற்ற இந்துமத பாடசாலைக் குழுவினைக் கலைத்துவிடுமாறு செய்த மேற்படி குழுவின் தீர்மானத்தின்படி இந்த ஆவணத்தின் இணைப்பில் கண்ட நிலங்கள், வீடுகள் பிற உடைமைகள், வரவேண்டிய தொகைகள், அசையும் அசையாப் பொருள்கள் முதலியவற்றையும் இதன் மூலம் மேற்படி அம்பலவாணர் அறப் பொறுப்பினிடம் ஒதுக்கியும் அளித்தும் ஒப்படைத்தும் விட்டேன். இனி எக்காலத்தும் இந்த அம்பலவாணர் அறப்பொறுப்பின் ஏழு அறங்காவலர்கள் (Trustees) கொண்ட ஒரு பொறுப்பு ஆயம் (Trust Board) பின் கண்டவாறு புரந்துவர வேண்டியது.

10. அறங்காவலர்கள் பெயர்களும் முகவரிகளும்

அடியில் குறித்தவர்கள் முதல் ஏழு அறங்காவலர்களாக இருப்பர்.

(1) திரு. டீ. மாணிக்கம் செட்டியார்; டீக்கப்ப செட்டியார் மகன், எண். 65, அப்பு முதலித் தெரு, மயிலாப்பூர், சென்னை-4.

(2) திரு. வா. தி. மாசிலாமணி முதலியார்; வா. தியாகராய முதலியார் மகன், வாலாஜாபாத்.

(2) திரு வா. து. நடராச முதலியார்; வா. சி. துரை

சாமி முதலியார் மகன், வாலாஜாபாத்.

(4) திரு. நா. ப. தணிகை அரசு, பரசுராம முதலியார் மகன், வாலாஜாபாத்.

(5) திருமதி. இராஜேசுவரி வேதாசலம் அம்மையார்; இராவ்பகதூர் மே. வேதாசல முதலியார் மனைவியார், செங்கற்பட்டு.

(6) திரு. வா. தி. கண்ணப்ப முதலியார்; வாலாஜாபாத், திரு. கோ. திருமலைசாமி முதலியார் மகன்.

(7) டாக்டர் R. N. வைத்திய நாதன்; தஞ்சை மாவட்டம், அரங்க நாதபுரம், திரு. ஆர். வி. நடேச ஐயர், மகன்.

இந்த அறங் காவலர்கள் எழுவரும் அவர்களின் வாழ்நாள் வரை அறங் காவலர்களாக இருப்பர்.

11. உறுப்பினராகும் முறைகள்

இந்த எழுவரில், ஓர் அறங் காவலரின் காலத்திற்குப் பின்னோ, அல்லது அறன் காவலர் அலுவலை ஒருவர் ஒருவி விடுவதனாலோ (Resignation) ஏற்படும் காலி இடத்திற்கு மற்ற அறங் காவலர்கள் பெரும்பான்மை வாக்குகளால் அடியிற் குறித்த தகுதியுள்ள வேறு எவரையாவது ஓர் அறங் காவலராக அமர்த்திக்கொள்ளலாம். இரு பக்கமும் சமமான வாக்குகள் இருந்தால் திருவுளச் சீட்டுப் போட்டு முடிவு காண வேண்டும்.

அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப் பெறத் தகுதி உள்ளவர்கள் 30 வயதுக்கு மேற்பட்டவராகவும், கடவுள் நம்பிக்கையும், இறைப் பற்றும் உடைய சமரச சன்மார்க்க சமயத்தாராகவும் இந்து மதத்தினராகவும் இருக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள அறங்காவலர்களில் எவரேனும் உடல் நலக் குறைவு அல்லது வேறு காரணத்தால் விலக நேரும்போது, தமக்குப் பின் தமது பதவியை யேற்பதற்கு யாரையேனும் அவர்கள் குறிப்பிட்டால் அவ்விருப்பத்திற்கு முதல் இடங்கொடுத்து மற்ற தகுதிகள் பெற்றிருந்தால் அவரையே மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

அவ்வாறு அறங்காவலர் வராயலாவிடில் சென்னை அரசினரின் செய்தி வெளியீட்டில் (Gazette) விளம்பரம் செய்து, விண்ணப்பம் செய்பவர்களிடமிருந்து தக்கவர்களை ஏனையோர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

12. அறப்பொறுப்பின் பொதுவான சட்டங்கள்.

குறைந்தது இரண்டு மாதங்களுக்கொரு முறையாவது பொறுப்பு ஆயத்தின் கூட்டம் (The Board Meeting) நடைபெற வேண்டும். பொறுப்பு ஆயத்தின் கூட்டங்கள் நடப்பதற்குக் குறைந்தது நான்கு அறங்காவலர்களாவது கூட்டத்திற்கு வந்திருக்க வேண்டும்.

பொறுப்பு ஆயத்தின் கூட்டம் நடைபெறுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னமே ஆயத்தின் உறுப்பினர்களுக்குக் கூட்ட அறிக்கை அனுப்பிவிட வேண்டும்.

அவசரக் கூட்டம் நடைபெறுமாயின் இரண்டு நாட்களுக்கு முன்னதாகக் கூட்ட அறிக்கை அனுப்பிவிட வேண்டும்.

பொறுப்பு ஆயக்கூட்டங்களில் இந்து மதப் பள்ளித் தலைமை ஆசிரியரும், வள்ளலார் மாணவர் இல்லத்தின் தலைவரும், வள்ளலார் மகளிர் இல்லத்தின் தலைவியரும், திருவள்ளுவர் தொழிற்சாலையின் மேற்பார்வையாளரும், தம் அலுவல் முறையில் உறுப்பினர்களாக இருப்பர். அவர்களுக்கு வாக்குஅளிக்கும் உரிமை இல்லை.

பொறுப்பு ஆயத்தின் ஐந்து கூட்டங்களுக்குத் தொடர்ந்து வாராத ஓர் உறுப்பினர் தம் உறுப்பினர் பதவியை இழந்து விடுவார். ஆயம் கருதினால் மறுபடியும் அவரை ஆயத்தின் உறுப்பினராக அமர்த்திக்கொள்ளலாம்.

13. தலைவர் பொறுப்புகள்

ஆயத்திற்கு ஒரு தலைவரைப் பொறுப்பு ஆயமே தேர்ந்து கொள்ளவேண்டும். தலைவர்கள் அலுவலில் காலி ஏற்பட்டால், ஏற்பட்ட ஒரு மாதத்திற்குள் முறைப்படி ஒரு புதுத் தலைவரை ஆயம்தேர்ந்துகொள்ளவேண்டும். ஆயம் தேர்ந்து கொள்ளும் தலைவர் தேர்ந்து கொண்ட நாள் முதல் மூன்று ஆண்டுக் காலத்திற்குத் தலைவராக இருக்க உரிமை பெற்றவர் ஆவார். விலகும் தலைவர் மீளவும் தேர்ந்தெடுக்கப் பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார்.

பொறுப்பு ஆயத்தின் முதல் தலைவராகத் திரு. டீ. மாணிக்கம் செட்டியார் அவர்களை இருக்க வேண்டுமென விரும்புகிறேன். அவர் ஆயுள் வரை அவரே தலைவராக இருந்து வரவேண்டும்.

உடல் நலக் குறைவினாலோ வேறு காரணத்தாலோ அவர் விலகும்படி நேரிட்டால் வேறு தலைவரைப் பொறுப்பு ஆயம் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டியது.

தலைவர் ஒரு கூட்டத்திற்கு வாராதபோது அந்தக் கூட்டத்தின் தலைவராக அமர்ந்து கூட்டத்தை நடத்த ஓர் உறுப்பினரை ஆயம் தேர்ந்து கொள்ள வேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையேனும் பொறுப்பு ஆயத்தின் கூட்டத்தைக் கூட்டி ஆயத்தின் செயல்முறைகளை ஆராய்ந்து அவைகளை ஒழுங்காக நடக்கப் பார்த்துவருவதும் ஒவ்வோர் ஆண்டு முடிவிலும் நடைபெறும் கூட்டத்தில் பொறுப்பு ஆயத்தின் வரவு செலவு இன்ன பிற கணக்குகளைக் கொண்டுவருவதும் தலைவரது கடமையாகும்.

14. முதல் பொருளாளர் வா. து. நடராச முதலியார்

பொறுப்பு ஆயத்தின் உறுப்பினர் ஒருவரை ஆயத்தின்

பொருட் காப்பாளராக அமர்த்திக்கொள்ள வேண்டும்.

பொறுப்பு ஆயத்தின் முதல் பொருட்காப்பாளராகத் திரு. வா. து. நடராஜமுதலியார் அவர்களே இருக்க வேண்டும் என விரும்புகிறேன். அவர் ஆயுள் வரை அவரே பொருட் காப்பாளராக இருந்து வர வேண்டும். அவருக்குப் பிறகு அறங் காவலர்களில் ஒருவரைப் பொறுப்பு ஆயம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்; தேர்ந்தெடுக்கப் பட்டவர் மூன்றாண்டுக் காலம் பொருளாளராக இருப்பார். மீண்டும் அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

15. செயலாளர் பொறுப்புகள்

அறங்காவலர் ஆயம், ஆயத்தின் உறுப்பினர்களில் ஒருவரைப் பொறுப்பு ஆயத்தின் செயலாளராக (Secretary) அமர்த்திக்கொள்ள வேண்டும். நிலையங்களின் செய்தியாளராக (Correspondent) இருக்க ஆயம் அவருக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். நிலையங்களுக்கு வரும் அரசாங்க உதவித் தொகைகளை வாங்கவும், நிலையங்களின் பெயரால் வங்கிகளில் கணக்குகள் ஏற்படுத்திக் கொள்ளவும், வங்கி வரவு செலவு செய்யவும் ஒரு தீர்மானத்தால் ஆயம் செயலாளருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். வங்கியிலிருந்து பணம் வாங்கும்போது பொருட் காப்பாளரோடு செயலாளரும் கூட்டாகக் கையொப்பமிட்டுப் பணம் பெறவேண்டும். நிலையங்களைப் பற்றிய கல்வித் துறையாளரின் ஆணைகளைச் செயற்படுத்துவது செயலாளரின் பொறுப்பாகும்.

ஆயத்தின் முதல் செயலாளனாக என் ஆயுள் வரை யானே இருந்து வருகிறேன். திரு. நா. ப. தணிகை அரசு பொறுப்பு ஆயத்தின் துணைச் செயலாளராக அவர் ஆயுள் வரை இருந்துவர வேண்டும் என்பதும் எனக்கு அடுத்தபடி என் குடும்பத்தினர் ஒருவர் பொறுப்பு ஆயத்தில் தொடர்ந்து இருந்துவர வேண்டும் என்பதும் என் விருப்பம்.

16. அறப்பொறுப்பின் சிறப்பான சட்டங்கள்

அறங்காவலர் ஆயம் (Board of Trustees) ஆயத்தின் உடைமைகளை ஆண்டு கொண்டு அரசினர் வரி, மேல்வரி, பிற வரிகள், மேலாளும் செலவு, தண்டல் செலவு, இவை போக மீதியையும் முதலீடு செய்துள்ள தொகைகளில் வட்டி வருமானம் உயிர் ஈட்டுறுதி (Life Insurance) நிறுவனத்திலிருந்து கிடைக்கும் ஈட்டுறுதித் தொகைகள் (Insure Amounts) பிறவற்றையும், இனி ஆயத்திற்கு இலவசமாகவோ, நன்கொடையாகவோ, விலைக்கோ பிறவகையிலோ, கிடைக்கும் தொகைகள், உடைமைகள் இவற்றையும், நிலையங்களையும் நல்ல நிலையில் வைத்து வளர்த்து வருவதற்கும் நடைமுறைச் செலவுக்கும் பயன்படுத்தி வர வேண்டியது.

மேற்படி வகைகளுக்கு ஆகும் செலவுகள் போக மிச்சமாகும் தொகைகளை, ஆயம் குறிக்கும் வங்கியில் (Bank) சேமித்து வைத்தோ அல்லது ஆயம் தக்க தென்று முடிவு செய்கிறபடி வேறு வகையில் வட்டிக்குப் போட்டோ வரவேண்டும்.

காசோலைகளாகவோ (Cheques) பணமாகவோ உண்டியல் பட்டியல்களாகவோ (Bills) பிற வகையாகவோ வரும் தொகைகளை நேரடியாகச் செலவுக்கு எடுத்துக் கொள்ளாமல் வங்கியில் போட்டுவிட வேண்டியது.

நிலையங்களின் செலவிற்கு அவ்வப்போது வேண்டிய பணத்தைப் பொருட்காப்பாளர், செயலாளர் இருவரும் கையெழுத்திட்ட காசோலை மூலமாக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியது.

அறங்காவலர் ஆயம் (Board of Trustees) ஆயத்திற்குச் சொந்தமான பள்ளிக் கட்டடங்கள் விடுதிக் கட்டடங்கள் முதலியவற்றைப் பழுதில்லாமல் நல்ல நிலையிலும் தூய்மையாகவும் நலமுறைக்கு ஏற்றபடியும் வைத்து வரவேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தை ஆயம் வகுத்துக் கொள்ள வேண்டும். அத் திட்டமும், வரவு செலவுக் கணக்குகளும், ஆண்டுதோறும் தணிக்கைக்குட்பட்டவை யாகும்.

வரவு செலவுக் கணக்குகளை வைத்துக் கொள்வதும், ஆண்டுதோறும் அதைத் தணிக்கைக்குக் கொடுப்பதும் செயலாளரின் பொறுப்பாகும்.

செயலாளர் ஆணையின்மீது அறங் காவலர் ஆயத்துக்கு முறையீடு செய்துகொள்ளச் சிப்பந்திகளுக்கு உரிமை உண்டு. அம்முறையீடுகளின் மீது ஆயம் செய்யும் முடிவே முடிவானது.

பொறுப்பாவணத்தின் கொள்கைகளுக்கு மாறாக நடந்தோ, நடக்கத் தூண்டியோ பொறுப்புக்கு இடையூறு விளைவித்தோ வரும் தலைவர், உறுப்பினர், செயலாளர், பொருளாளர் எவரையும் பெருவாரியான வாக்குகளால் ஆயம் நீக்கி விடலாம். இதற்கான ஆயக் கூட்டத்தை மூன்று உறுப்பினர் கையொப்பம் இட்டு அறிவிப்பு அனுப்பிக் கூட்டலாம்.

இவ்வாறாக எல்லாம் வல்ல அம்பலவாணர் திருவருளை மனமொழி மெய்களால் போற்றி இந்தப் பொறுப்பு ஆவணத்தை எழுதி வைக்கலானேன். இந்த ஆவணத்தில் சொத்து விவரம் பெரும்பான்மை அசல் பத்திரத்தைத் தழுவியே எழுதப்பட்டது. சொத்துக்களின் தற்கால மதிப்பு எனக்குத் தெரிந்தவரையில் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த ஆவணம் பதிவு ஆனவுடன் இதில் கண்ட சொத்துக்களின்படியே இதற்கு முன் என்னால் எழுதி வைக்கப்பட்ட

(49ஆம் பக்கம் பார்க்க)

வாலாசாபாத்

இந்துமத உயர்பாடசாலை

பாடசாலையின் வரலாறு

வாலாஜாபாத்: வாலாஜாபாத் வரலாற்றுச் சிறப்புடைய ஊர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பேரூர்களில் இது ஒன்றாகும். இது சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் கற்பாதையில் 40 ஆவது கல்லில் அமைந்துள்ளது. வாலாஜாபாத்திலிருந்து 8 கல் மேற்கில் காஞ்சிபுரமும், 14 கல் கிழக்கில் செங்கற்பட்டும் இருக்கின்றன. வாலாஜாபாத்தில் தொடர் வண்டி நிலையமும (Railway Station) பேருந்து நிலையமும் (Bus Stand) உண்டு. தொலை பேசி அமைப்புக்கள் இருக்கின்றன. இங்கு நகர வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளும், நாட்டுப் புறத்திற்கே யுரிய அமைதியான சூழ்நிலையும் ஒருங்கே யுள்ளன.

வாலாஜாபாத் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. தெள்ளு மணல் நிறத்தாலும், தீஞ்சுவைத் தண்ணீராலும் பாலாறு அப்பெயர் பெற்றது போலும். வெள்ளம் அடிக்கடி வாராவிடினும் ஆறு நிறைய நீர் ஓடாவிட்டாலும், ஆற்றில் உழவர்கள் தோண்டும் சிறு கால்வாய்களில் எப்பொழுதும் தெளிந்த நீர் ஓடிக்கொண்டே இருக்கும். ஆயிரம் மாணவர்களாயினும் ஒரு மைல் நீளம் மணலில் ஓடுகின்ற கால்வாயில் நன்கு நீராட முடிகிறது. வாலாஜாபாத் ஒரு நகர பஞ்சாயத்து மன்றத்தால் ஆளப்பெற்று வருகிறது.

கல்வி உலகம்: வாலாஜாபாத் ஒரு சிறு கல்வி உலகமாகவே விளங்குகிறது. அரசினர் ஆண்கள் ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் அரசினர் மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளி ஒன்றும் உள்ளன. (இரண்டு பள்ளிகளும் இந்து மத பாடசாலையை நடாத்தி வரும் அம்பலவாணர் அறப்பொறுப்பு ஆயத்திற்குச் சொந்தமான பெரிய கட்டிடங்களிலேயே நடக்கின்றன.) உயர்

(48ஆம் பக்கத் தொடர்ச்சி)

தஸ்தா வேஜிகள் யாவும் பொருட்படுத்தப் பெற வேண்டும் என்பதைத் தெளிவாகக் கூறுகிறேன். எந்த விதத்திலாவது மாறுபாடு இருந்தால் இப்பொழுது எழுதி வைக்கப்படும் அம்பலவாணர் அறப்பொறுப்பு ஆவணமே முடிவானது என்று கருதப்பட வேண்டும்.

(Sd.) W. T. Masilamani.
(இந்துமத பாடசாலை பொன் விழா மலர்)

நிலைப்பள்ளிகள் மூன்று உள்ளன. மூன்றும் மூன்று வகையானவை. ஒன்று அரசினர் ஆண்கள் உயர் நிலைப்பள்ளி. மற்றொன்று அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி. மற்றொன்று குருகுல முறையில் நடைபெற்றுவரும் நமது இந்து மத உயர்நிலைப்பள்ளி. ஓர் உயர் தொடக்கப்பள்ளி தனசேகர சாசுவத நிதியால் மூதாநிலை ஆதாரப் பள்ளி (Senior Basic School) யாக நடந்து வருகின்றது. ஐந்தாம் வகுப்பு வரையில் நடைபெறும் தொடக்கப்பள்ளிகள் மூன்று (நமது இந்து மத பாடசாலையின் தொடக்கப்பகுதி; மகம்மதிய தொடக்கப்பள்ளி; பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளி) உள்ளன. மூன்றும் வகுப்புகள் வரையிலுமுள்ள பாடசாலைகள் கத்தோலிக்கர் நடத்துவதொன்றும், தென்னிந்திய கிறிஸ்தவச்சபையார் நடத்துவதொன்றும், வாலாஜாபாத் பஞ்சாயத்து யூனியன் சேரிக்காட்டில் நடத்துவதொன்றும், வல்லப்பாக்கத்தில் நடத்துவதொன்றும் ஆக நான்கு உள்ளன. இளங் குழந்தைகள் (இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஐந்து ஆண்டுகள் நிரம்பாத குழந்தைகள்) பள்ளி (நர்சரி பாடசாலை) ஒன்று இன்னும் தேவைப்படுகிறது. வாலாஜாபாத்தைக் கல்வி வளமுடைய நகராக ஆக்கிய நமது மாநில முதலமைச்சரும் கல்வியமைச்சருமாய மேதகு. எம். பக்தவத்சலம், பி. ஏ., பி. எல்., அவர்களுக்கும், கல்வித் துறையின் பொது இயக்குநராயிருந்த பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு, எம். ஏ., எல். டி., அவர்களுக்கும் வாலாஜாபாத் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பாடசாலைத் தோற்றம்: 1916ஆம் ஆண்டு வாலாஜாபாத்தில் மூன்று பாடசாலைகளை இருந்தன. அவைகளில் ஒன்று மகம்மதியப் பாடசாலை; மற்றவை கிறித்தவப் பாதிரிகளால் நடத்தப் பெற்றவை. அம்மூன்று எல்லாப் பாடசாலைகளிலும் மாணவர்கள் சம்பளம் கொடுத்தே படிக்க வேண்டும். சம்பளம் கட்ட முடியாதவர்கள் இயற்கையிலே அறிவுடைய மாணவராக இருந்தாலும் கல்வி கற்க முடியாமலிருந்தது.

1916ஆம் ஆண்டில் ஒருநாள். சரவணன் என்ற பெயருடைய மாணவன் பாடசாலைக்குச் சென்றவன் வெளியே அனுப்பப் பெற்று விட்டான். (ஒவ்வொரு மாதத்திலும் குறிப்பிட்ட தேதிக்குள் சம்பளம் கட்ட வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறினால் வகுப்பிலிருக்க முடியாது. என்றைக்குப் பணம் கிடைத்துச் சம்பளம் செலுத்த முடிகிறதோ அதுவரையில் வகுப்புக்கு வர விடமாட்டார்கள்.) படிப்பிலே கருத்துடைய அந்தச் சிறுவன் பணமில்லாமையால் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே வகுப்பிலிருந்து அனுப்பப் பெற்று வாசலில் நின்றுகொண்டிருந்தான்.

திருவருள் செய்யும் விந்தையான செயல்களை நம்மால் எவ்வாறு அறிய முடியும்? அந்த நேரத்தில் இந்து மத பாடசாலையின 'அப்பா' என்று நாம் அழைக்கும், நம் நாடு அழைக்கும் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களைத் திருவருள் அங்குக் கொண்டு வந்தது. அந்த ஏழை மாணவன் கல்வி கற்பதற்குப் பொருள் வசதியில்லையே என வருந்தப்பட்ட காட்சியைக் காண வைத்தது.

அப்பொழுது அப்பா அவர்கள் மகம்மதியப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். கல்வி கற்கும் குழந்தைகளிடத்தில் அவர்களுக்கு மிகவும் அன்பு இருந்தது. அவ்வுள்ள சிறுவர்களுக்கு நல்ல கல்வி அளித்து விடுவோமானால் அவர்கள் கற்று முன்னேறுவதனால் நாட்டிற்கு உண்டாகக் கூடிய நன்மைகள் அவர்களுக்கு நன்கு தெரியும். எனவே அந்தச் சிறுவனின் காட்சி 'ஏழைச் சிறுவர்களும் கல்வி கற்க ஓர் இலவசப் பாடசாலை தொடங்கவேண்டும்' என்ற எண்ணத்தை உண்டாக்கியது *

---

* நமது அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் உயர்திரு. காமராசர் அவர்கள் நம் நாட்டில் எல்லோருமே எல்லாக் கல்வியையும் இலவசமாகக் கற்கச் செய்ய வேண்டும் என்று சொல்வதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறோம்.

மாணிக்கவாசகர் சபை:

அப்பா அவர்களுக்குத் திருவருளில் அழுத்தமான நம்பிக்கை உண்டு. அவர்களோடு நெருங்கிப் பழகுகிற யாரும் அதை நன்கு உணர்வர்.

தமக்கு இருப்பதைப் போல அனைவருக்குமே திருவருள் நம்பிக்கை இருக்கவேண்டுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். எங்கும் நிறைந்த ஆண்டவனை, எல்லாம் வல்ல பரம்பொருளை வணங்குவதிலும், தமக்கு எது நேர்ந்தாலும் இறைவன் செய்கிறான் என்று நம்பியிருப்பதிலும் அப்பா அவர்கள் தனிப்பானவர் என்றே சொல்லலாம். அவர்கள் 1915 ஆம் ஆண்டு தம் நண்பர் திரு. மு. தா. கன்னிவேலு செட்டியார் என்பவரோடு மாணிக்கவாசகர் சபை என்ற ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார்கள். வெள்ளிக்கிழமை தோறும் அந்தச் சபையின் சார்பில் இறை வழிபாடு செய்வார்கள். அவ் வழிபாட்டில் கலந்துகொள்ள கிறித்தவப் பள்ளியிலும், மகம்மதியப் பள்ளியிலுமிருந்து சிறுவர்களைச் சேர்ப்பதும் எளிதாயில்லை. எனவே தாமே ஒரு பாடசாலை தொடங்குவது நல்லதென்ற எண்ணம் மேலும் வலுப்பெற்றது. எனவே 4-9-1916 அன்று இந்து மத பாடசாலை நல்ல நோக்கங்களுடன் தொடங்கப்பெற்றது.

ஏழை பணக்காரர் என்ற வேற்றுமையின்றி எல்லோருடைய மக்களுக்கும் கல்வி

பயிற்ற வேண்டும். சாதி சமய வேறுபாடின்றி இந்துக்கள், மகம்மதியர்கள், கிறித்தவர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகிய எல்லாச் சமயத்தினரும், அந்தணர் வீட்டுச் சிறுவர்கள் தொடங்கி அரிசனச் சிறுவர்கள் வரை எல்லோரும் கல்வி கற்க வேண்டும், பாடசாலையில் கல்வி பயிலும்போதே, கல்வியின் பயனை கடவுளை வணங்குதற்குப் பயிற்சி அளிக்கப்பெற வேண்டும், 'கடவுள் நம்பிக்கையோடு ஒழுக்க சீலர்களான நற்குடி மக்கள் நம் பாடசாலை மாணவர்கள்'' என்ற முத்திரையை மாணவர் பெற வேண்டும், அவர்களால் நம் தாய் நாடு பழம் பெருமையை மீண்டும் பெற வேண்டும் என்பன போன்ற நோக்கங்களுடன் இந்து மத பாடசாலை தொடங்கப் பெற்றது.

பாடசாலையின் அப்பாவாக விளங்கும் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார், திரு. மு. தா. கன்னிவேலு செட்டியார், திரு. ஆ. கோவிந்தராஜ முதலியார், திரு. மு. வை. நடேச செட்டியார், திரு. வே க. அங்கப்ப செட்டியார் ஆகிய ஐவரும் சேர்ந்து இந்து மத பாடசாலையைத் தொடங்கினார்கள். ஐவரில் அப்பா அவர்களும் திரு. ஆ. கோவிந்தராஜ முதலியார் அவர்களுமே இப்பொழுது உள்ளனர்.

பாடசாலை தொடங்கும்போது நான்கே மாணவர்கள் இருந்தனர். உண்மையும் உழைப்பும் இருக்குமிடத்தில் திருமகள் தானே வந்து சேருவாள் என்பது உண்மையன்றோ ? அப்பா அவர்கள் உழைப்பும், தமிழகத்துக் குழந்தைகள் தவமும் ஒன்று சேர்ந்தன. மாணவர்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வரலாயிற்று. பாடசாலையில் முதலிலிருந்தே சாதி, சமய வேறுபாட்டுணர்ச்சி கருதாமல் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பெற்றனர். எனவே, கல்வி கற்கும் விருப்புடைய மாணவர்கள் பாடசாலைக்கு மேலும் மேலும் வரலானார்கள். மாணவர்களின் தொகை, தொடங்கும்போது நான்காக இருந்தது. முதல் ஆண்டின் முடிவிற்குள் நாற்பத்து நான்காக வளர்ந்தது. அரசினர் ஒப்புதலும் அந்த ஆண்டே (1916 டிசம்பருக்குள்) கிடைத்து விட்டது.

திரு. மு. தா. கன்னிவேலு செட்டியார் அவர்களின் தந்தையார் திரு. முத்து தானப்ப செட்டியார் அவர்கள் அப்பொழுது வாலாஜாபாத்திலுள்ள தருமராசர் திருக்கோயிலுக்கு அறங்காவலராக இருந்தார்கள். அப்பெருமகனாரே தம் கோயில் மண்டபத்தே பாடசாலையை நடத்த இடங் கொடுத்தனர்.

மாணவர்கள் தொகை மேலும் வளர்ந்தது. மிகுதியான கட்டட வசதியும் தேவைப்பட்டது. செங்கற்பட்டு உயர்திரு. செ. ச. திருவேங்கட முதலியார் அவர்கள் வாடகையில்லாமல் பாடசாலை நடப்பதற்கு முதன் முதல் ஒரு வீடுகொடுத்தார்கள். அக்கட்டடத்

தில் பாடசாலை செம்மையாக நடந்ததைக் கண்டு கண்டு அவர் உள்ளம் மகிழ்ந்தனர். அவரது நல்லெண்ணமும் பாடசாலை வளரத் துணையாயிருந்தது.

பாடசாலையில் மாணவர் தொகை பின்னும் வளர்ந்தது. உயர்திரு. திருவேங்கட முதலியார் அவர்கள் வீட்டாசியார் திருமதி. லோகாம்பாள் அம்மையார் மற்றொரு வீட்டையும் பாடசாலை நடப்பதற்கு வாடகையில்லாமல் விட்டார்கள். அக்கட்டடத்தில் 1947ஆம் ஆண்டு வரை இந்துமத பாடசாலை நடந்துவந்தது. அதன் பின்பு 4 ஆண்டுகள் கழக உயர்நிலைப் பள்ளி நடந்தது.

பாடசாலையில் எட்டு வகுப்புகளுக்கு அரசினர் ஒப்புதல் கிடைத்துப் பாடசாலையும் செம்மையாக நடந்து வரலாயிற்று. இடையில் 1932ஆம் ஆண்டு சிறிது பொருள் நெருக்கடி ஏற்பட்டது. பள்ளிக்கூடத்தை நடத்துதற்கே பெருமுயற்சி தேவைப்பட்டது. அவ்வாண்டில் பாடசாலை தரவேண்டிய கடன் ரூ. 3000 வரை இருந்தது.

துன்பம் மிகுந்த காலத்தில் இறைவனை வேண்டினோம். திருவருள் துணை மிகுதியாகக் கிடைத்தது. அப்பா அவர்களின் தமையனார் திரு. வா. தி. பஞ்சாட்சர முதலியார் அவர்கள் பூனாவில் படைத்துறைக் கணக்கு அலுவலராகப் பணியாற்றியவர். தம் வேலையிலிருந்து ஓய்வு வாங்கிக்கொண்டு வாலாஜாபாத்திற்கு வந்தனர். அப்பெருமகனார் பாடசாலையை நடத்தும் பொறுப்பினையும் ஏற்றுக்கொண்டார். முதலாவதாக அவர் செய்தது அப்போதிருந்த கடனையெல்லாம் கொடுத்துவிட்டதேயாகும்.

அவர் வாலாஜாபாத்தில் ஒரு வீடு வாங்கினார்; தம் தந்தையார் நினைவாக அதற்குத் தியாகராய மன்றம் எனப் பெயரிட்டார். பாடசாலைக்கு அதனை நன்கொடையாகவும் எழுதி வைத்தார். பின்னர் ஒரு விருப்ப ஆவணம் (Will) எழுதி, அதன் வாயிலாக ரூ. 20,000 மதிப்புள்ள தமது சொத்தைப் பாடசாலைக்கு உரிமையாக்கினார்.

1932க்குப் பின்பு எல்லா வகைகளிலும் பாடசாலை வளமாக வளர்ந்து கொண்டு வருகிறது. ஒரு சமயம் கல்கி ஆசிரியர் உயர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாடசாலைக்கு வருகை புரிந்து மிகவும் மகிழ்ந்தவர் "பாலாறும் பகற்கனவும்" என்ற கட்டுரையை எழுதினார். சில ஆண்டுகள் கழித்து, அப்பெருமகனாரே, "கனவு நனவாயிற்று" என்ற கட்டுரையையும், "ஒன்றும் இயலாதவரின் உயர்பெருஞ் சாதனை" என்ற கட்டுரையையும் எழுதினார். வேறு சில பத்திரிகைகளிலும் பாடசாலையைப் பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் துணைப்பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, எம். ஏ., எம். ஓ. எல், எல். டி., பி. எச். டி.,

அவர்களைப் போன்ற பெரு மக்கள் பள்ளிக்கூடப் பாட புத்தகங்களில் பாடசாலையைப் பற்றிப் பாடங்கள் எழுதினார்கள். பத்திரிகாசிரியர்கள் பாடசாலையில் நடைபெறும் விழாக்களைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது தங்கள் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். இவ்வாறு பல பெருமக்களின் உதவியால் பாடசாலையின் புகழ் நாடெங்கணும் பரவலாயிற்று.

அருள் உள்ளமும், பொருள் வளமும் படைத்துள்ள பலர் உதவியால் பாடசாலைக்குக் கட்டட வசதிகளும் பிற செதிகளும் ஒவ்வொன்றாக அமையலாயின. இங்குச் சென்னை மாநிலத் துளுவ வேளாளர் மாநாடும், சென்னை மாநில யாதவ குல இளைஞர் மாநாடும், சென்னைக் கல்வித் துறையினர் நடாத்திய ஆதாரக் கல்வி மாநாடும், சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டுவிழாவும், சைவர் மாநாடும், சைவ இளைஞர் மாநாடும், சைவ மங்கையர் மாநாடும், வேறு சில மாநாடுகளும் நடைபெற்றன.

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. மு. ரா. பெருமாள் முதலியார், எம். ஏ., எல். டி, அவர்கள் (இப்பொழுது புதுவை மாநில அரசின் பொதுக் கல்வி இயக்குநர்), தாம் அப்பதவியில் இருந்த வரையில் தம் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றுப் 'பி. டி.,' பட்டம் பெற வந்திருப்பவர்களையெல்லாம், வாலாஜாபாத்திற்கு அழைத்து வந்து, இந்துமத பாடசாலையில் வைத்து, அவர்களுக்குக் குடிமைப் பயிற்சி அளித்துவந்தனர். சென்னை வெல்லிங்டன் சீமாட்டியார் கல்லூரியிலிருந்தும், பெஸ்டன் கல்லூரியிலிருந்தும் மாணவியர்கள் வந்து எங்களிடம் குடிமையப் பயிற்சி பெற்றனர். தாம்பரம் கார்லி உயர் நிலைப்பள்ளியைப் போன்ற பல பள்ளியினர் தங்கள் பள்ளிகளிலிருந்து சாரணர்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்து, முகாம் நடத்திச் சென்றனர். சென்னை எழும்பூரில் நடைபெறும் அரசினர் கண் மருத்துவச்சாலையின் பெரிய டாக்டர் உயர்திரு. டி. டி. இராமலிங்கம் அவர்கள் தம்மிடம் பணியாற்றும் டாக்டர்களில் இருவரையும் வேறு பணியாளர்களையும் ஆண்டிற்கு ஒரு முறை வாலாஜாபாத்திற்கு அனுப்பி 15 நாட்கள் நம் பாடசாலையில் முகாம் நடத்த ஏற்பாடு செய்கிறார்; வாலாஜாபாத்திற்குப் பக்கத்தேயுள்ள மக்களுக்கெல்லாம் முன்னதாகவே அறிவித்து, கண் சம்பந்தமான நோயுடையவர்கள் பலரை நூற்றுக்கணக்கில் வரச்செய்து அவர்களை நலப்படுத்தி அனுப்புகிறார்; தாமே நேரில் வந்து அறுவை சிகிச்சைகள் செய்கிறார்.

சென்னையில் பேராசிரியர் மயிலை சிவமுத்துக் குமாரசாமி அவர்களது முயற்சியால் அறிஞர்கள் பலர் சேர்ந்து 'மாணவர் மன்றம்' என்ற நிறுவனம் அமைத்து, மாணவர்களும் அவர்கள் வழியாக நாட்டிற்கும் பெருந்

தொண்டுகள் புரிந்து வருகிறார்கள். அம்மாணவர் மன்றத்தினரும் ஆண்டுதோறும் இந்துமத பாடசாலைக்கு வந்து வாழ்த்திச் செல்கின்றனர்.

இவ்வாறு பல பெருமக்களின் நல்லுதவியைக் கொண்டு, 50 ஆண்டுகள் நிறைந்த இந்துமத பாடசாலை தன்னுட்டுச் சாந்நிநிகேதனமாய், 1000 மாணவர்கள் படிக்கும் உயர்நிலைப்பள்ளியாய், 800 மாணவர்களையுடைய மாணவர் இல்லத்தையும், 100 மாணவிகளையுடைய மகளிர் இல்லத்தையும் கொண்ட பெரிய குருகுலமாய், பலதொழில்களை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் தொழிற்பள்ளியாய், வருங்காலத்தில் நாட்டை ஆளுவதற்குரிய நற்குடி மக்களை உருவாக்கிக் கொடுக்கும் பயிற்சி நிலையமாய், பலரும் மகிழும் கல்வி நிலையமாய் அம்பலவாணர் திருவருளைப்பல்லோரும் பெற்று, மனத்துக் கண் மாசில்லாத தூய வாழ்வு வாழ்வதற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் தவநிலையமாய் விளங்குகிறது.

இதன் சிறப்பியல்புகள் சிலவற்றைக் கூறுவோம்.

பாடசாலையின் சிறப்பியல்புகள்

தொழிற் கல்வி : தொடக்கத்திலிருந்தே பாடசாலை பல சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கிறது. பாடசாலைகள் வெறும் எண்ணையும் எழுத்தையும் கற்பித்தல் போதாது. எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொள்ளும் போதே உலகியலையும் மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது இந்துமத பாடசாலையின் கருத்தாகும்.

கல்வி கற்பவர்கள் தவறானதொரு கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். தாம் படிக்கும் படிப்பு எந்த அளவினை உடையதாக இருப்பினும் படித்தபின்பு வருவாய் தரத்தக்க தொழில் செய்ய வேண்டும் என்பதில் கருத்தைச் செலுத்துவதில்லை. அதற்கு வேறாக, உடல் உழைப்புக் கலவாத சேவகம் செய்வதிலேயே எண்ணம் வைக்கிறார்கள். அதற்குக் காரணம் கல்விகற்கும் காலத்தில் அவர்கள் பெறும் மனநிலைதான். கற்றவர்கள் உடல் வருந்தித் தொழில் புரிவது இழிந்தது என்றும் உத்தியோகம் செய்வதற்காகத்தான் கல்வி கற்கிறோம் என்றும் தவறான எண்ணங்கள் உண்டாகிவிட்டன. இந்தக் கருத்தை மாற்றுவதற்கு எண்ணினோம், தக்க வழியைக்கண்டோம். பாடசாலையில் பயில்கிறபோதே தொழிற் பயிற்சியும் மாணவர்கள் பெற்றால்தான் இந்நிலை மாறுமென எண்ணினோம். எனவே பாடசாலையில் தொழிற்பயிற்சிக்கும் இடம் ஏற்படுத்தப்பட்டது.

1916ஆம் ஆண்டு இந்துமத பாடசாலை தொடங்கப்பெற்ற போதே அதன் சார்பில் ஒரு தொழிற்பகுதியும் ஏற்படுத்தப்பட்டது. திருவள்ளுவர் தொழிற்சாலை என அதற்குப் பெயரிட்டோம். முயற்சிக்கு முதல் இடம் கொடுத்த திருவள்ளுவப் பெருமான் திருப்பெயரோடு அமைந்

துள்ள அத்தொழிற்சாலை இன்று வரையில் நன்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பாய் நெய்தல் : திருவள்ளுவர் தொழிற்சாலையில் முதல் முதல் தொடங்கிய தொழில் கோரைப்பாய் செய்தல் ஆகும். நாம் செய்யும் தொழிலினால் உருவாகும் பொருள் நமக்கே பயன்படுமானால் அத்தொழில் நன்றாக வளரும் என்ற நோக்கத்துடன் பாய் நெய்தல் தொடங்கப் பெற்றது.

நூல் நூற்றல் : பஞ்சுக் காயை உடைத்துப் பஞ்சுவேறு கொட்டைவேறு பிரிக்கவும், பிரித்த பஞ்சை வில்லால் அடித்து உருட்டவும், பட்டை போடவும், தக்கிளியாலும் இராட்டையாலும் நூலாக நூற்று நெய்யும் பதத்தில் கொடுக்கவும் பயிற்சி கொடுத்தோம்.

நெய்தல் : கட்டில் பின்னும் நாடா, பை தைக்கும் முரட்டுத் துண்டுகள், துவட்டுச் சீலைகள், தேங்காய்ப்பூ, தேன்வலைத்துண்டுகள், உடுத்தும் வேட்டிகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள், படுப்பதற்கும் பந்திக்கும் உரிய சமுக்காளங்கள் முதலியவற்றை நெய்வதற்குப் பயிற்சியளித்தோம்.

தையல் : ஏழை மாணவர்கள் பலர் இருக்குமிடத்தில் சொக்காய்களிலும் துணிகளிலும் ஏற்படும் கிழிசல்களைச் சரி செய்து கொடுப்பதே அவர்களுக்குப் பெரும் நன்மையாய் இருக்கிறது. தாமே துணிகளை வெட்டிச் சொக்காய்களும், பனியன்களும், கால்சட்டைகளும், தலையணை உறைகளும், பை முதலியவைகளும் தைப்பதற்குப் பயிற்சி பெறுகிறார்கள். கையால் ஊசியைக்கொண்டு தைப்பதோடு தையல் பொறிகளையும் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

தச்சு : தச்சுத்தொழில் வாழ்க்கை நடத்தும் ஒவ்வொருவருக்கும் பயிற்சி இருத்தல் நன்மைதருவது என்பதை நன்கு உணர்ந்து முதலிலிருந்து இன்று வரையில் அத்தொழிலை மாணவர்களுக்குக் கற்பித்துவருகிறோம். மரங்களிலிருந்து பலகைகள் அறுக்கவும், பலகைகளையும் சட்டங்களையும் இழைக்கவும், சிறு சமையல் அறை ஏனம் முதல் பெஞ்சு, மேசை, நாற்காலி, அலமாரிகள் வரையில் செய்யவும் பயிற்சி தருகிறோம்.

அச்சுவேலை : பாடசாலையின் சார்பில் ரூபாய் 20,000 மதிப்புள்ள ஓர் அச்சகமே இருக்கிறது. அச்சகம் அமைப்பதற்கு உதவி செய்த சென்னை மயிலை திரு. டி. மாணிக்கம் செட்டியார் அவர்கள் பெயரால் அது 'மாணிக்கம் அச்சகம்' என வழங்கப்படுகிறது. ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சுக் கோக்கவும், அச்சடிக்கவும் மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். மாணிக்கம் அச்சகத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத்துக்கள் உண்டு. அச்சடிப்பதற்குச் சிறிய டிரடில் அச்சுப்

பொறியும், பெரிய சிலிண்டர் பொறியும், புத்தகம் வெட்டும் பொறியும் கம்பியடிக்கும் பொறியும் உள்ளன.

புத்தகம் வெட்டல் : பாடசாலையின் சார்பில் மாதந்தோறும் குருகுலம் என்ற இதழ் (10,000) வெளியிடுகிறோம். குருகுலம் அச்சுத் தாள்களை மடித்தல் மடித்தவற்றைப் புத்தகங்களாகச் சேர்த்தல், சேர்த்தவற்றைத் தைத்தல், தைத்த புத்தகங்களை வெட்டல் ஆகிய எல்லா வேலைகளையும் மாணவர்களே செய்யப் பழகுகிறார்கள்.

பலகையில் அறுப்பு : மூவொட்டுப் பலகைகளை அதற்குரிய வாளால் (Fret works saw) அறுத்துக் கடிகார இருக்கைகள், அழகிய சிறு பெட்டிகள் ஆகியவற்றைச் செய்யப் பயிற்சியளிக்கிறோம்

பொத்தான் செய்தல் : கடைசல் பிடிக்கும் சிறு பொறியின் உதவியால் மரத்திலிருந்தும் மாட்டுக் கொம்பிலிருந்தும் சட்டைக்கு அணியும் பொத்தான்கள் செய்யப் பழகுகிறார்கள். பொத்தான் செய்யும் தொழில் பெருநன்மை பயவாவிடினும் கடைசல் தொழில் (Turning) செய்யப் பழகுவதற்குப் பெரிதும் உதவியாய் இருக்கிறது.

ஈயம் பூசுதல் : பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களாலாகிய ஏனங்களுக்கு ஈயம்பூசுதலைக் 'கலாய் பூசுதல்' என்கிறோம். அப் பாத்திரங்களில் உண்டாகும் களிம்பு நமக்குத் தீங்கிழைக்காமலிருக்கக் கலாய் பூசுகிறோம். ஏனங்களுக்குக் கலாய் பூசவும், அவைகளில் ஏற்படக்கூடிய ஓட்டைகளை அடைக்கவும் பயிற்சியளித்தோம்.

கயிறு திரித்தல் : ஆண்டவன் படைப்பில் வீணாகவேண்டிய பொருளே இல்லை. வீணை கழியும் தெங்கின் மட்டைகளைத் தண்ணீரில் ஊறவைத்துப் பின்னர் அவற்றை நன்றாக அடித்துப் பஞ்சுபோன்றதாக்கி, அதனின்றும் பல பருமனும் நீளமுமுள்ள கயிறுகள் திரிக்கப் பயிற்சி அளித்தோம்.

சவுக்காரம் செய்தல் : துணிக்குப்போடும் சவுக்காரம் செய்தல் பயன் தரத்தக்க தொழிலாகும். அரசினரும் அத்தொழில் புரிதற்குப் பொருளுதவி செய்கிறார்கள். அதற்கென ஒரு கட்டடம் அமைத்து அத் தொழில் நடப்பதற்கு வேண்டியவைகளைச் செய்துவருகிறோம்.

மரப் பாவைகள் செய்தல் : பலவகை மரப் பலகைகளைக் கொண்டு சிறுவர்கள் விளையாடுதற்குரிய பொம்மைகள் செய்யவும், செய்த பொம்மைகளுக்கு நிறம் தீட்டவும், நிறத்துடன் அமைந்த பொம்மைகளுக்குச் சக்கரங்கள் அமைத்து ஒழுங்கு செய்யவும் பயிற்சியளித்தோம்.

பனை ஓலை வேலை : சிறுவர்களுக்குப் பனை ஓலைகளைக் கொண்டும சில பொருள்கள் செய்யப் பயிற்சி தருகிறோம். ஓலைகளுக்குப் பலவகை நிறங்கள் கொடுத்து, அவற்றைக் கொண்டு தடுக்குகளும், சிறு சிறு டப்பி

களும் செய்யப் பயிற்சி தருகிறோம்.

அலுமினியம் : இது மின் சாரத்தின் உதவியால் நடைபெறும் சிறு தொழில். அலுமினியத் தகடுகள் வாங்கி, அத்தகடுகளிலிருந்து குவளைகள், கிண்ணங்கள் முதலியன செய்தல். மிகக் குறைந்த நேரத்தில் அலுமினியத் தகட்டிலிருந்து குவளையைச் செய்து அதற்குப் பளபளப்பும் கொடுப்பது காண்பதற்குரிய காட்சியாகும்.

வேளாண்மை : உழவுத் தொழிலின் பெருமை உலகமே அறிந்த தொன்றாகும். எங் நாட்டினரும் இதனை நன்கறிந்திருக்கிறார்கள். கற்றவர்கள் கல்லாதவர்கள் யாவரும் இதனைத் தெரிந்திருக்கிறார்கள். விதையை நட்டுச் செடி முளைப்பதைப் பார்ப்பதும், முளைத்த செடிக்கு வேண்டுவனவெல்லாம் செய்து, அதன் வளர்ச்சியைக் காண்பதும் எவ்வளவோ இன்பம் தருவதாகும். நம் மாணவர் இல்லத்துப் பண்ணையில், கீரை வகைகளையும், காய்கறிகளையும் நாமே பயிரிட்டு அவைகளைப் பறித்துச் சமைத்து உண்டல் எவ்வளவோ இனிமை தருகிறது. இவைகளையெல்லாம் மாணவர் நேரில் அறியச் செய்கிறோம்.

இவ்வாறு பல தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சி தருகிறோம்.

பொன்விழா மலர்

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் நோக்கமாகும். இது வரையில் 504 பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடைபெற்று அவற்றின் மூலம் ரூ 7·63 கோடி மதிப்புள்ள மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுள்ளோம்.

46-47-ல் 471 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன. 1965-66-ல் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2236. இது கிட்டத்தட்ட 5 மடங்கு அதிகமாகியுள்ளது. 1946–47ல் இருந்த உயர்நிலைப்பள்ளியில் மாணவர் சுமார் 2 லட்சம். 1965–66ல் அவர்கள் தொகை மடங்கு வளர்ந்து 11½ லட்சங்களாகப் பெருகியுள்ளனர். மாணவிகள் கல்விக்குப் போதிய வசதியிலும் 342 உயர்நிலைப் பள்ளிகள் பிரத்தியேகமாக அவர்களுக்கேயுள்ளன. 175 முதியோர்ப் பள்ளிகளும் ஏற்படுத்தியுள்ளோம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் உயரும். 6 முதல் 11 வயது வரையுள்ள மாணவர்களுக்காக 20,000 ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுவர். அவர்களில் 14,8000 ஆசிரியர்கள் செகண்டரி பயிற்சி பெற்றவர்களாகவும், 5,200 ஆசிரியர்கள் ஹையர் கிரேடு பயிற்சி பெற்றவர்களாகவும் இருப்பர். 11 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்காக, 27,000 செகண்டரி பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களுக்காக 10, பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்கப் படுவார்கள்.

—'தினமணி'

பாவை நோன்பும் அதில் பாவையர் பங்கும்

ம. பொ. சிவஞானம்

"மாதங்களில் நான் மார்கழி" என்றார், கண்ண பெருமான். அதனாலோ என்னவோ, மார்கழித் திங்களைத் தெய்வீகம் பொருந்தியதாகக் கருதுகின்றனர் தமிழ் மக்கள். ஓர் ஆண்டுக்குரிய பன்னிரண்டு திங்களில் மார்கழித் திங்கள் முழுவதையும் உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதற்கே பயன்படுத்துகின்றனர். தைத்திங்கள் முதல் நாளில் வரும் புனிதப் பொங்கல் விழாவை எதிர்பார்த்து, மார்கழித் திங்களிலே இல்லத்தைத் தூய்மையாக்குகின்றனர். சுவற்றில் படிந்த அழுக்கைச் சுண்ணம்பு அடித்துப் போக்கி, தாங்கள் பயன்படுத்தும் பாத்திரங்களில் படிந்த அழுக்கைத் தேய்த்துத் தூய்மைப்படுத்தி, தங்கள் வருங்காலத்தைப் பீடுடையதாக்க முயல்கின்றனர்.

மார்கழித் திங்களிலே, புற அழுக்கைப் போக்குவதோடு அமையாமல், தங்கள் அகத்தே படிந்த அழுக்கையும் துடைத்து அவற்றை ஆண்டவனின் திருக்கோயிலாக்க முயல்கின்றனர். இது தமிழ் மக்கள் அனைவரிடமும் நாம் காணும் பொதுவான பண்பாகும்.

மார்கழி நோன்பு

இது ஒரு புறமிருக்க, தமிழினத்துப் பெண்கள், மார்கழித் திங்களிலே பாவை நோன்பு நோற்பனராம். அந்த நோன்பு இன்று நடைமுறையில் இல்லை. ஆனால், அந்த நோன்பின் போது பாடிய பாவைப் பாடல்கள் நம்மிடையே இருக்கின்றன. தமிழ் இலக்கியக் களஞ்சியத்தில் தனிப் பெருமை பெற்று விளங்குகின்றது பாவை இலக்கியம்.

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் கொடியான ஆண்டாள், 'திருப்பாவை' இலக்கியத்தைப் படைத்தார். தில்லைப் பெருவெளியிலே கலக்கும் பேறு பெற்ற மாணிக்கவாசகர், "திருவெம்பாவை" இலக்கியத்தை அருளினார். மணிவாசகர் பாடிய திருவெம்பாவை, பெண்கள் பாடுவதற்கு ஏற்றவையாகும். தம்மை ஒரு பெண்ணாகப் பாவித்து மணிவாசகர் பாடினார் போலும்!

நெறிகள்

பாவைப் பாடல்களிலே, தமிழினத்துப் பாவையர்களின் உயர்ந்த பண்பாட்டைப் பார்க்கிறோம். தேசிய-தெய்வீக நெறிகள் ஒளிவிடுகின்றன. பாவைப் பாடல்களிலே, பாவையர் நோருவது முக்திநெறியன்று; வாழ்க்கை நெறியேயாகும்; இதனை மறத்தல் கூடாது.

தேச பக்தி வேறு; தெய்வ பக்தி வேறு-என்ற நிலை இல்லை.

"தெய்வமே தேசம், தேசமே தெய்வம்"— என்றெண்ணிப் பாவைப் பாடல்கள் பாடியுள்ளார் ஆண்டாள். இன்னொரு வகையில் சொன்னால் வீரம் வேறு; பக்தி வேறு-என்று எண்ணாமல், இரண்டும் ஒன்றே என்பதை நமக்கு உணர்த்துகின்றார் ஆண்டாள்.

"ஓங்கி உலகளந்த" எனத் துவங்கும் பாடலிலே, "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய" ஆண்டவனிடம் வரம் கோருகின்றார். "நாடெல்லாம்" என்னுஞ்சொல், உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் குறிப்பதாகும். உலகம் முழுவதும் வாழ்வாங்கு வாழ மழை வரம் வேண்டுகிறார். ஆதலால், தம் கோரிக்கைக்கேற்ப, தாம் வழிபடும் தெய்வத்தை "உலகளந்த உத்தமன்" என்னும் பெயரால் அழைக்கின்றார் போலும்!

வையம் வாழ

மனித சமுதாயமே அன்றி, உயிர்கள் எல்லாம் தழைத்து வாழவும்,மாதம் மும்மாரி வேண்டுமென்கிறார்மங்கையர்க்கரசி ஆண்டாள். இதனை தெய்வ பக்தி என்பதா?— தேச பக்தி என்பதா?— "இரண்டுந்தான்" என்பதே எனது பதில்.

வீரம் என்பது வெறியன்று. கொலை வீரம் தமிழர் குலத்துக்கே எதிரானதாகும். நிச்சயமாக, தாய்மை உள்ளம் கொலை வீரத்தை விரும்பாது.கலை வீரத்தையே விரும்பும். கண்ணனையே கணவனாகப் பெற விரும்பிய ஆண்டாள், அந்த மாயனை, ஈடு இணையற்ற மாவீரனாகவும் வருணிக்கிறார். தமிழினத்துப் பெண்கள் வீரத்தையே காதலிப்பர். இது பாரதத்தின் பண்பாடு என்றும் சொல்லலாம்.

இதோ ஆண்டாள் பாடும் பாவைப் பாடலிலே வீரம் ஒளிவிடக் காணலாம். நாட்காலை நீராடி நங்கையர் வழிபடும் கண்ணனை "கூர்வேல் கொடுந்தொழிலன், நந்தகோபன் குமரன்" என்று பாடி, நந்தகோபனும் வீரன், அவன் பெற்றெடுத்த நம்பியும் வீரன் என்கிறார் ஆண்டாள். "மாவாய்ப் பிளந்தானை, மல்லரை மாட்டிய தேவாதி தேவனை" என்ற வரிகளிலே, ஆழிமழைக் கண்ணனின் வீர சாகசங்களைப் பெருமிதத்தோடு விளக்குகின்றார் ஆண்டாள். நந்தகோபனும், அவன் பெற்றெடுத்த நம்பியுமே அன்றி, அவர்கள் தோன்றிய குலமே வீர மறவர் குலம்; குற்றமென்பதே அறியாத குணவான்களின் கோத்திரம்-என்று பாடுகின்றனர்.

சினத்தினால் தென்னிலங்கைக்
  கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானை...
  வல்லானைக் கொன்றானை
மாற்றாரை மாற்றுஅழிக்க
  வல்லானை மாயனை...

என்றெல்லாம் பாடி, போருக்குப் படை திரண்டுவிட்ட வீரர் குழாத்தின் வெற்றிக்கு அருள் புரியுமாறு ஆண்டவனைப் பாடுகின்றார் ஆண்டாள்.

கூடாரை வெல்லும் சீர்!

கோவிந்தனை அழைக்கின்ற கோதையர், "கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! என்றே கூப்பிடுகின்றார்.

ஆண்டவன், உற்றார்க்கு அருள் கொடுப்பான். செற்றார்க்கோ "வெப்பம் கொடுக்கும் விமலன்" என்கிறார், வில்லிபுத்தூர்க் கவியரசியார். பாவை நோன்பு நோற்கும் கோதையர்கள் மாமாயன் கோயில் முன்பு வந்து நிற்கும் காட்சியை வருணிக்குமிடத்து,

மாற்றார் உனக்கு வலிதொலைந்து
உன்வாசற்கண்
ஆற்றாது வந்துன்
அடிபணியுமாப் போல
போற்றியாம் வந்தோம்

-என்று பாடுகின்றார். ஆம்; பாவை நோன்பு நோற்கும் கன்னிப் பெண்கள் கண்ண பெருமான் அருள் வேண்டி, அவன் கோயில் வாசலிலே வந்து நிற்கும் காட்சிக்கு, போரில் வென்ற மன்னனது வாசலிலே வந்து அடிபணிந்து நிற்பதை உவமை கூறுகின்றார் ஆண்டாள்.

திருப்பாவைப் பாடல்களிலே பாடலுக்குப் பாடல் பாவையர்களின் வீரப் பண்பாடு ஒளி விடுகின்றது.

சீரிய சிங்கம்

பாரதத்தை ஆக்ரமிக்க பகை நாட்டார், முற்படுங்கால், 'மாற்றானை முறியடிக்க சீறி எழுவீர் சிங்கங்காள்!' என்று காளையர் குலத்தைக் கூவி அழைக்கின்றனர் பாரதத் தலைவர்கள். இது தேசபக்தியின் எதிரொலி! தெய்வ பக்திப் பாடலிலும் அதே எதிரொலியைக் கேட்கிறோம். ஆம்; பாவைபாடும் கன்னியரும் வீரப் பண்ணிசைக்கக் கேட்கிறோம்.

மாரிமலை முழைஞ்சில்
மன்னிக்கிடந்து உறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத்
தீ விழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும்
பேர்ந்து உதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்
பட்டு
போதருமா போல நீ
பூவைப் பூவண்ணா!

-என்று பள்ளி எழுச்சி பாடுகின்றார், கண்ணனையே மணக்க விரும்பிய கன்னிப் பெண் ஆண்டாள்.

இந்த வரிகள் பாடுவோர்க்கே அன்றி பாடப் பக்கம் நின்று கேட்போர்க்கும் வீர மூட்டக் கூடியதாகும்.

ஆண்டாள், கண்ணனைக் காதலிக்கின்றார். ஆதலால் தெய்வீக மணம் கமழும் காதற்பண் பாடுகின்றார். தன் காதலனை கண்ண பெருமான், முன் எந்தப் போர் முனைகளில் எல்லாம் பகைவர்களை வென்றான் என்பதனை நினைவூட்ட, அவன் வெற்றி கொண்ட போர்களின் பட்டியலைத் தருகின்றார். ஆம்; பாவை பாடிய கோதையார் அதனைப் "பரணி"யாகவும் மாற்றுகின்றார்.

சமய ஒற்றுமைக்கு இணையற்ற விதம் பாடுபட்ட அக்பரால் அரச அந்தஸ்துப் பெற்ற கவிஞரின் வரலாறு உருக்கமானது.

விகட ராஜா பீர்பல்

ராகுல் ஸாங்க்ருத்யாயன

தில்லி பாதுஷாவான அக்பரின் தர்பாரில் ஒன்பது ரத்தினங்கள் திகழ்ந்தார்கள். அவர்கள்: 1. ராஜா பீர்பல், 2. ராஜாமான் சிங், 3. ராஜா டோடர்மல், 4. ஹகீம் ஹமாம், 5. முல்லா தோபி யாஜா, 6. பைஜீ, 7. அபுல் பஜல், 8. ரஹீம், 9. தான்ஸேன்.

ராஜா பீர்பல் அக்பரின் அன்புக்கும் ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் உரியவராக இருந்தார். பீர்பலை ஹாஸ்யப் பிரியர், விதூஷகர், வேடிக்கைக் கதைகளுக்கு நாயகர் என்றே பொதுவாக எல்லாரும் அறிந்திருக்கிறார்கள். அவரைச் சிறந்த ஆட்சியாளர், தீரம் மிக்க வீரர், தேர்ந்த படைத் தலைவர், நீதி தெரிந்த அரிய அமைச்சர், சிரிக்கச் சிரிக்கப் பேசிச் சிந்திக்க வைக்கும் போதகர் என்று சிலர்தான் அறிந்திருப்பார்கள். 'பீர்பல்' என்ற பெயர் அக்பர் சூட்டியது. அவரது இயற்பெயர் மகேஷ் தாஸ். சிலர் பிரம்மதாஸ் என்றும் அவரைக் குறிப்பிடுகிறார்கள்.

பீர்பல், ஜாலௌன் ஜில்லாவைச் சேர்ந்த காலபியில் 'பாட்' குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலே கல்விப் பயிற்சி கிடைத்தது. கவிதை புனைந்து பாடுவது அவருக்கு இயல்பாக அமைந்த சிறப்பு. முதலில் ராமச்சந்திர பட் என்பவரிடம் வேலை பார்த்தார். அக்பர் சிம்மாசனம் ஏறிய முதல் வருடம் (1556-இல்), இருவரும் சந்திக்க நேர்ந்தது. நட்பு ஏற்பட்டுப் படிப்படியாக வளரத் தொடங்கியது. அக்பரோடு நெருங்கிப் பழகிவந்த முல்லா பாதயூனீ, இதுபற்றிக் குறிப்பிடும்போது, "பாதுஷா அவர்களுக்குப் பிராம்மணர், 'பாட்' இனத்தவர், மற்றும் பல இந்து சமூகத்தாரோடு நல்ல சிநேகம் இருந்து வந்தது. ஆரம்ப காலத்தில் பாதுஷாவுக்குக் காலபியைச் சேர்ந்த ஒரு 'பாட்' வாலிபன் அறிமுகமானான். அந்த இனத்தவரின் பிழைப்பே துதிப் பாடகராகத் திரிந்து வாழ்வது. ஆனால், அந்த வாலிபனோ வெகு விரைவிலேயே அக்பரின் தர்பாரில் மதிப்பான இடம் பெற்றுவிட்டான். அவனில்லாமல் இவரால் ஒரு நாள்கூட இருக்க முடியாது. அவன் உடல், இவர் உயிர் என்ற நிலை அவர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது!" என்று கூறியிருக்கிறார்.

முதலில் அக்பர் பீர்பலை 'மல்குஷ்ஷாயரா' (கவிராயர்) என்று அழைத்து வந்தார். அக்பரின்

தளபதி ஹுசேன் குலிகான் 1572-73-இல் காங்கடாவைச் சேர்ந்த கோட் பிரதேசத்தை வென்று வந்தான். அந்தப் பகுதியைக் கவிராயர் பீர்பலுக்கு ஜாகிராக அக்பர் வழங்கினார். அப்போது பீர்பலுக்குப் பதினாறு வயது. நகர்கோட் பிரதேச மலை ஜாதியினர் லகுவில் பணிந்து போகக் கூடியவர்களில்லை. ரிக் வேத காலத்தில ஆரிய அரசன் திவோதாஸ் என்பவனை இந்தப் பகுதியின் அந்த நாள் மன்னன சம்பரன் நாற்பது வருட காலம் எதிர்த்து நின்று தோல்வி காணாமல் வாழ்ந்தான். அத்தகைய சிறப்பு வாய்ந்த இடமும் மக்களும் பீர்பலின் ஆதிக்கத்துக்கு வர இருந்த போது, நிலைமை எதிர்பாராமல் மாறிவிட்டது. இளவரசன் இப்ராஹீம் மிர்ஜா புரட்சி செய்து பஞ்சாபை ஆக்கிரமித்துக்கொண்டான். அக்பர் தம் தளபதி ஹுசேன் குலிகானுக்கு ஒரு கட்டளை பிறப்பித்தார். 'காங்கடா மன்னனோடு சமாதானம் செய்து கொண்டு, படைகளைப் பஞ்சாபுக்கு விரைவாய்க் கொண்டு செல்லும்' என்பதே அந்தக் கட்டளை. கொடுத்த ஜாகிருக்கு ஈடாகப் பீர்பலுக்குக் காங்கடா மன்னன் இந்தச் சமாதானம் காரணமாக ஐந்து மணங்கு எடை தங்கம் கொடுத்தான்.

அப்கானைப் பணியவைக்க ஜைன்கான் என்னும் சேனாதிபதியைப் பெரும படையுடன் அக்பர் அனுப்பி வைத்தார். வெற்றி கிடைக்கும் தறுவாயில், மேலும் படை உதவி தேவைப்பட்டது. யாரைப் படையோடு அனுப்புவது? தர்பாரில், 'நான் தான் போவேன்; நான்தான்' என்று பலரும் மும்முரமாகப் போட்டி போட்டார்கள். அமைச்சர் அபுல் பஜல் தம்மைத்தான் அனுப்ப வேண்டுமென்று தீவிர முயற்சி செய்தார். பீர்பலோ அதற்குமேல் தீவிரமாய் நின்றார். தம்மை வெறும் துதிப் பாடகன் என்றே பிறர் எண்ணியிருப்பதை மாற்ற வேண்டுமென்பது அவரது அவா.

திருவுளச் சீட்டு போட்டுப் பார்த்ததில், பீர்பலின் பெயர் வந்தது. அக்பருக்கு அவரை அனுப்ப மனம் இல்லைதான்; அவரில்லாமல் எப்படிப் பொழுது போகும்? இருந்தாலும் திருவுளச் சீட்டின் முடிவுப்படி, கடைசியில் பலத்த படைத் துணையுடன் பீர்பலைப் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தார். அவருடன் அமைச்சர் அபுல்பஜலும் சென்றார்.

ஐம்பதாயிரம் வீரர்களுக்குத் தலைமை தாங்கி, அப்கானிஸ்தானத்தில் பல பகுதிகளைப் பீர்பல் வென்றார். போகப் போக ஒரே மலைப்பாங்கான இடமாயிருந்ததால், முன்னேற முடியவில்லை. மேலும், அபுல்பஜலும், சேனைத் தலைவன் ஜைன்கானும் பீர்பலோடு ஒத்துழைக்க மறுத்தார்கள். காரணம், அக்பரின் அதிகச் சலுகைக்கும் அன்புக்கும் பீர்பல் உரியவராக இருந்தது பற்றி அவர்களுக்குண்டான அசூயைதான். மலைப்பாதையில் பாச

றைக் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்த போது, பட்டாணியர்கள் திடீரென்று இரவில் வந்து தாக்கினார்கள். ஜைன்கானும் அபுல் பஜலும் எப்படியோ தப்பி ஓடி விட்டார்கள்; பீர்பல் அந்தப் போரில் உருத் தெரியாமல் களப்பலி ஆகிவிட்டார்.

இந்தச் செய்தி அறிந்து அக்பர் மிகவும் வருந்தினார். ஒரு வாரம் வரையிலும் தர்பாருக்கே வரவில்லை. இரண்டு நாள் பட்டினி கிடந்தார். அபுல் பஜலிடமும், ஜைன்கானிடமும் அசாத்தியக் கோபங் கொண்டார். "சடலத்தைக்கூடக் கொண்டுவராமல், வந்து நிற்கிறார்களே இவர்கள்!" என்று ஆத்திரப்பட்டார். எவ்வளவோ முயன்றும், பீர்பலின் சடலத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

பீர்பலை, முல்லா பதாயூனி முதலிய தர்பாரின் பிரமுகர்கள் தூற்றியிருக்கிறார்கள். காரணம், குறை கண்டவரையெல்லாம் உளம் சாம்பும்படி நையாண்டி செய்து மட்டந் தட்டுவது பீர்பலின் வழக்கம். மேலும், அக்பரை இந்துக்களின் பக்கம் அதிகமாகத் திருப்பியவர் பீர்பல் தான் என்ற ஆத்திரம் அவர்களுக்கு. மதி நுட்பமும் நாவன்மையும் விநோதமாகப் பேசும் இயல்பும் கொண்ட பீர்பல், பெரிதும் அக்பரின் மனத்தைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லை. அக்பரின் ஆலோசகரான ஷம்ஷ-ல் உல்மா ஆஜாத் என்பவர், "சிகந்தருக்கு (அலெக்சாந்தர்) அரஸ்து (அரிஸ்டாட்டில்) வாய்த்திருந்தது மாதிரி அக்பருக்குப் பீர்பல் வந்து வாய்த்தார். அவரது பிரிவை எளிதில் மறக்க முடியவில்லை அக்பரால்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பீர்பலுக்கு லாலா என்றும் ஹரம் ராய் என்றும் இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் தர்பார் உத்தியோகந்தான். பீர்பலுக்குக் 'கவிராயர்' என்ற பட்டத்தோடு 'ராஜா' என்னும் அந்தஸ்தையும் அளித்தவர் அக்பர். ஆனால், கவிராயரின் ஒரு பாடல் கூட இன்று கிடைக்கவில்லை.

[தமிழ்: எஸ். ராஜன்]

—"மஞ்சரி"

குழந்தையினது போன்ற கபடமின்மையோடு ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக்கொள். அனைவரோடும் ஒத்துவாழ். அகந்தை நினைவை முழுவதும் ஒழித்துவிடு. ஒரு கட்சிச் சார்பான கருத்துகட்கு இடம் கொடாதே. பயனற்ற வாதப்போர் பெரும்பாவமாம்.

—சுவாமி விவேகானந்தர்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

For Elementary and High Schools

SOCIAL RECORD BOOKS

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி B.A., B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப் பள்ளி, தியாகராயநகர்)

<u>நான்காம் வகுப்பு</u>

மாவட்டங்கள்

சென்னை		0.75 பை
செங்கற்பட்டு		0 75 பை.
வடஆற்காடு		0.75 பை
தென் ஆற்காடு		0.75 பை
சேலம்		0.75 பை
கோயம்புத்தூர்		0.75 பை
நீலகிரி		0.75 பை.
திருச்சிராப்பள்ளி		0.75 பை
தஞ்சாவூர்		0.75 பை
மதுரை		0.75 பை.
இராமநாதபுரம்		0.75 பை
திருநெல்வேலி		0.75 பை.
கன்னியாகுமரி		0.75 பை.
ஐந்தாம் வகுப்பு		0.94 பை.
ஆறும் வகுப்பு		0.87 பை.
ஏழாம் வகுப்பு		0.75 பை.
எட்டாம் வகுப்பு	ரூ	1 00 பை.
ஒன்பதாம் வகுப்பு	ரூ.	1.25 பை.
பத்தாம் வகுப்பு	ரூ.	1.20 பை.
பதினோராம் வகுப்பு	ரூ.	1.50 பை.

[S. [illegible] C]

நூல் நிலையங்களுக்கான

எங்கள் வெளியீடுகள்

நாடகங்கள்	தாமரைக் கண்ணன்	ரூ.
அலெக்ஸாண்டர்		1·50
கிள்ளி வளவன்		1·25
வெண்ணிலா		1·50
மருது பாண்டியர்		2·00
சாணக்கியன் சாம்ராஜ்யம்		3·00
வரலாறு	வை. சுப்பிரமணியம்	
வீரபாண்டிய கட்டபொம்மன்		1·50
ராஜா தேசிங்கு		1·50
	எஸ். எஸ். அருணகிரிநாதர்	
பச்சையப்ப முதலியார்		1·25
சர். தி. முத்துசாமி ஐயர்		0·90
	த. சே உமாபதி, M.A.,L.T.	
எவரெஸ்டு ஏற்றம்		2·25
சுந்தரமூர்த்தி சுவாமிகள்		2·00
	தாமரைக் கண்ணன்	
திருநாவுக்கரசர்		1·50
	புலவர். சொ. முருகேசனார்	
திருஞானசம்பந்தர்		1·50
	நெ. சி. தெய்வசிகாமணி	
ஜெகதீஸ் சந்திரபோஸ்		1·00
விண்வெளிக் குடும்பம்		1,25
சந்திரனுக்குச் செல்வோம்		1·25
கதைகள்	எஸ். எஸ். அருணகிரிநாதர்	
நல்ல நல்ல கதைகள்		2·75
சிறுவர் கதைகள்		1·25
	தாமரைக் கண்ணன்	
மனக் காற்றுடி		3·00
	வே. கபிலன்	
நிறைவு எங்கே ?		3·50

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1

Venkatesan Press, Madras-1.